இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 06 சோபகிருது வருடம், ஆனி மாதம் 14ஆம் திகதி வியாழக்கிழமை
(29.06.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 10, 0115 886187 - பக்கங்கள் 12
விலை ரூ.50

BEAT the HEAT The Reliable Fan
1st June to 30th June 2023
DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74




# கடன் மறுசீரமைப்புக்கு அமைச்சரவை அனுமதி

## ஆளுங்கட்சி கூட்டத்திலும் பச்சைக்கொடி

உத்தேச உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை விசேட அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது.

இதன்போதே, கடன் மறுசீரமைப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை, உத்தேச உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று ஜனாதிபதி தலைமையில் ஆளுங்கட்சி எம்.பிக்களுடன் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில் கடன் மறுசீரமைப்பு குறித்தும் இதனால் உள்நாட்டு வங்கித்துறைக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது குறித்தும் ஆளுங்கட்சி எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் வினவினர். அப்படியான எந்த தாக்கமும் இடம்பெறாதென ஜனாதிபதி இங்கு விளக்கமளித்தார். அதேவேளை, அஸ்வெசும நிவாரணத் திட்டத்தில் குளறுபடிகள் ஏற்பட்டுள்ளமை குறித்தும் எம்.பிக்கள் இங்கு ஜனாதிபதியிடம் கடும் விசனத்தை முன்வைத்ததாக அறியமுடிந்தது.

கடன் மறுசீரமைப்பு யோசனை பாராளுமன்றத்தில் நாளை வெள்ளிக்கிழமை ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டு சனிக்கிழமை முழுநாளும் விவாதிக்கப்படும். தேவைப்படின் ஞாயிற்றுக்கிழமை தினத்திலும் விவாதம் நடத்தப்படுமென அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## புதிய எதிர்பார்ப்புகளுடன் சிறப்பு வாய்ந்த திருநாள்



### ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி ரணில்

நாட்டில் மிகவும் கடினமான காலகட்டத்துக்குப் பிறகு, புதிய எதிர்பார்ப்புகளுடன் எதிர்காலத்துக்காக நாம் முயற்சிக்கும் தற்போதைய நிலையில், 2023ஆம் ஆண்டு ஹஜ் பண்டிகை முன்னெப்போதையும் விட எங்களுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,... 02 பக்கம்

## அற்புதமான பிணைப்பை பிரதிபலிக்கும் பெருநாள்

### எதிர்க்கட்சித் தலைவர் ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்து



ஹஜ்ஜுப் பெருநாள் என்பது இஸ்லாமியர்களுக்கு மிகவும் முக்கியமான சமயப் பண்டிகையாகும். நபிகள் நாயகத்தின் போதனைகளின்படி முஸ்லிம்கள் ஒற்றுமையாக ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகிறார்கள். இந்தப் பெருநாளை மனிதநேயத்துக்கும் இறைவனுக்கும் இடையிலான அற்புதமான பிணைப்பை பிரதிபலிக்கும் பெருநாளாகக் கருதலாம். ஹஜ்ஜுப் பெருநாளின் முக்கிய நோக்கம் சமூக இடைவெளி... 02 பக்கம்

# நெல்லுக்கு நியாய விலை தருக

## விவசாயிகள் ஒன்றுதிரண்டு கிளிநொச்சியில் போராட்டம்



கிளிநொச்சி செய்தியாளர்

நெல்லுக்கான விலையினை உரிய நேரத்தில் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படுவதில்லை எனத் தெரிவித்து கிளிநொச்சியில் விவசாயிகள் ஒன்றுதிரண்டு நேற்று (28) பாரிய போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 09 மணியளவில் கிளிநொச்சி, கரடிபோக்கு சந்தியில் ஆரம்பமானது. 02 பக்கம்

## மின்சாரத்தை பயன்படுத்தாத 450,000 பேர்

கே. சுபானி

மின் கட்டண அதிகரிப்பின் பின்னர் ஓர் அலகு மின்சாரத்தைக் கூட பயன்படுத்தாத குடும்பங்களின் எண்ணிக்கை 04 இலட்சத்து 50ஆயிரமாக அதிகரித்துள்ளது.

ஓர் அலகு மின்சாரத்தைக் கூட பயன்படுத்தாத குடும்பங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 03 இலட்சமாக காணப்பட்டதுடன் தற்போது 04 இலட்சத்து 50ஆயிரமாக அதிகரித்துள்ளது என மின்சார நுகர்வோர் சங்கத்தின் தலைவர் சஞ்ஜீவ தம்மிக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் 'தமிழன்' நாளிதழுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,... 02 பக்கம்

# உள்ளூராட்சி சபைகளை மீண்டும் கூட்டுவதற்கான சட்டமூலம் சபைக்கு

## தேர்தலை நடத்தாமல் நிர்வகிக்க அரசு வியூகம்

நாட்டில் கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் கூட்டுவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் சட்டமூலத்துக்கான திருத்தச் சட்டமாக இந்த சட்டமூலம் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தினூடாக, தற்போது செயலிழந்துள்ள உள்ளூராட்சி மன்றங்களை குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு மீண்டும் கூட்டுவதற்கான அதிகாரம் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சருக்கு கிடைக்கின்றது.

தேர்தல் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த தேர்தலை நடத்த முடியாத... 02 பக்கம்

## மின் கட்டண குறைப்பு நாளை தீர்மானம்

மின் கட்டணத்தை திருத்தம் செய்வதற்காக மின்சார சபை சமர்ப்பித்துள்ள யோசனை தொடர்பில் நாளை வெள்ளிக்கிழமை தீர்மானம் எடுக்கவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழு நாளையதினம் கூடி அது தொடர்பில் தீர்மானம் எடுக்கவுள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜூலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மின்சாரக் கட்டணத்தை குறைக்க மின்சார சபை முன்மொழிந்துள்ளதுடன், அது தொடர்பான யோசனைக்கு பொதுமக்களின்... 02 பக்கம்

# அஸ்வெசுமவில் முறைகேடு

## வவுனியாவில் மக்கள் வீதிமறியல் போராட்டம்

02 பக்கம்



## ஒரே நாளில் 07 சிறுமியர் துஷ்பிரயோகம்

நா. தினுஷா

நாட்டில் நேற்று (28) காலை வரையான 24 மணிநேரத்தில் 07 சிறுமியர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வரும் 17 - 18 வயதுடைய சிறுவயதினர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக... 02 பக்கம்

## குறைந்த தரமுடைய மருந்துகள் இறக்குமதி

### மருத்துவச் சங்கம் குற்றச்சாட்டு

மருந்துகளின் உயர்தரத்தை உறுதிப்படுத்தி அதன் தன்மையை நிலையாக பேணும் செயற்பாடுகளை தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை முன்னெடுக்கவில்லை என்றும் இதன் காரணமாக தரம் குறைந்த பதிவு செய்யப்படாத மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் இலங்கை மருத்துவச் சங்கம் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளது.

ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கவனமின்மையும் அனுபவமில்லாத வினைத்திறனற்ற நிர்வாகத்தின் காரணமாகவுமே நாட்டில் தரம் குறைந்த மருந்துகள்... 02 பக்கம்

## உஷ்



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக பதவி வகித்த கனேகல, லேக்ஹவுஸ் தலைவர் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனராம்.

அரசியல் அழுத்தம் காரணமாக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களால் அதிருப்தியடைந்த இவர்கள், திடீரென பதவிகளை துறந்துவிட்டு சென்றுள்ளதாக தகவல்.

தேசிய தொலைக்காட்சி மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனங்களில் பல உள்ளக மாற்றங்கள் ஊடக அமைச்சரின் உத்தரவின் பேரில் நடக்கிறதாம்...

## ஐந்து மாதங்களில் 199 யானைகள் பலி



கே. சுபானி

நடப்பாண்டில் ஜனவரி மாதம் முதல் ஜூன் முதல் வாரம் வரையான காலப்பகுதியில் 199 யானைகள் உயிரிழந்துள்ளதாக வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

சில யானைகள் இயற்கையாக உயிரிழந்துள்ளதுடன் மேலும் புகையிரதங்களில் மோதுண்டு விபத்துக்குள்ளாதல், மனிதர்களால் மேற்கொள்ளப்படும் வெடிவைத்தல் சம்பவங்கள், வாகனங்களில் மோதுண்டு விபத்துக்குள்ளாதல், நீரில் அடித்துச் செல்லல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த யானைகள் உயிரிழந்துள்ளதாக அந்த திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

## இலாபமீட்டும் நிறுவனமாக சதொசவை மாற்ற ஏற்பாடு

### கோப் குழுவில் விசேட கவனம்

லங்கா சதொச நிறுவனத்துக்கு பொருத்தமான வியாபார மாதிரி ஒன்றை தயாரித்து அதனை இலாபகரமானதாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து கோப் குழுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

02 பக்கம்




## கமெண்ட் கந்தர்...



சதொசவ விற்பனை செய்யுறது எண்டு தீர்மானிச்சிட்டாங்கள்... இப்போ அதுக்கு ஒரு காரணம் தேடுறாங்கள் அவ்வளவுதான்...



நீர்கொழும்பு கடற்கரைப் பகுதியில் எண்ணெய்ப் படிமங்கள் தேங்குவதாக பொதுமக்கள் அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து அங்கு சுத்தப்படுத்தும் பணிகள் நேற்று (28) முன்னெடுக்கப்பட்டன.
**படப்பிடிப்பு:** *லிலித் பெரேரா*

# வழமைக்கு திரும்பியது களனி புகையிரத சேவை

புகையிரத திணைக்களத்தினால் நேற்று முன்தினம் இரத்து செய்யப்பட்டிருந்த களனி புகையிரத போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் புகையிரத வீதியிலுள்ள தண்டவாளத்தை உடைத்து அகற்றியதன் காரணமாக நேற்று முன்தினம் மாலை அந்த வீதியினூடாக பயணித்த அலுவலக புகையிரதம் தடம் புரண்டிருந்ததாகவும் அதன் காரணமாகவே புகையிரத சேவையை இரத்து செய்ய நேர்ந்திருந்ததாகவும் புகையிரத திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

களனி புகையிரத வீதியில் மாலை நேர அலுவலக புகையிரத சேவை நேற்று முன்தினம் (27) ஆரம்பிக்கப்பட்டபோது முதலாவது அலுவலக புகையிரதம் கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்டு மருதானை மற்றும் பேஸ் லைன் புகையிரத நிலையங்களை கடந்து கொட்டா வீதி புகையிரத நிலையத்தை நெருங்கிய சந்தர்ப்பத்தில் சேர்பென்டைன் வீதி மற்றும் கொட்டா வீதி புகையிரத நிலையத்துக்கு இடையிலான வீதியில் புகையிரதம் தடம்புரண்டிருந்தது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் புகையிரத வீதியிலுள்ள தண்டவாளத்தை உடைத்து அகற்றியதன் காரணமாகவே புகையிரதம் இவ்வாறு தடம்புரண்டிருந்தது. புகையிரத ஏன்ஜின் உள்ளிட்ட மூன்று புகையிரத பெட்டிகள் தடம்புரண்டிருந்தன. இதன் காரணமாக நேற்று முன்தினம் மற்றும் நேற்று காலை வரையான காலப்பகுதியில் அந்த வீதியினூடாக பயணிக்கும் அலுவலக புகையிரதங்கள் மற்றும் ஏனைய புகையிரத போக்குவரத்துகள் இரத்து செய்யப்பட்டிருந்தன.

இது பாரதூரமான நிலைமையாகும். இதுபோன்ற செயற்பாடுகளை கடுமையாக எதிர்ப்பதுடன் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாடு முழுவதுமுள்ள புகையிரத வீதிகளை புகையிரத திணைக்களமோ அல்லது பாதுகாப்பு பிரிவினரோ பாதுகாக்க முடியாது. நாட்டு மக்களும் இந்த போக்குவரத்து வீதிகள் தொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

## ஒரு நாளில் 07 சிறுமியர்...

அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள 07 சம்பவங்களில் 04 சம்பவங்கள் பலவந்தமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய மூன்று சம்பவங்களும் காதல் தொடர்புகளினால் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், 14, 15, 16 மற்றும் 17 வயது நிரம்பிய சிறுமியரே இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

பூஜாபிட்டிய, மருதானை, கொட்டவெஹெர, தும்மலசூரிய, பதவிய, மிட்டியாகொட, யட்டவத்த ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## மின்சாரத்தை பயன்படுத்தாத..

இலங்கை மின்சார சபை, மின்சாரத்துக்கான கேள்விக்கும் மேலதிகமாக கடந்த 2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மற்றும் 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதங்களில் மின்கட்டணத்தை அதிகரித்தது.

இலங்கை மின்சாரசபை இதுகுறித்த யோசனையை முன்வைத்தபோது, அது சாத்தியமற்றது எனத் தெரிவித்து அதனை நிராகரித்தோம். எனினும் எமது குரலுக்கு மின்சார சபை செவிசாய்க்கவில்லை. தற்போது தாங்கள் செய்தது தவறு என்று உணர்ந்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மின்கட்டண அதிகரிப்பால் மின்பாவனையாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்திருந்தனர். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. மின்நுகர்வு 20 சதவீதத்தினால் குறைவடைந்தது. அப்போது ஒரு யுனிட் மின்சாரத்தை கூட பயன்படுத்தாத 03 இலட்சம் குடும்பங்கள் இருந்தன. அந்த எண்ணிக்கை தற்போது 04 இலட்சத்து 50ஆயிரமாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை மின்சார சபைக்கே தற்போது கணிசமான நட்டம் ஏற்பட்டுள்ளது. அதனால் தான் மின்கட்டண அதிகரிப்பை நாம் எதிர்த்தோம்.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தத்தை அங்கீகரிப்பதில் மின் நுகர்வோர் மற்றும் பல்வேறு தொடர்புடைய தரப்பினரால் முன்வைக்கப்படும் நியாயத்தை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கருத்தில் கொள்ளவேண்டும் - என்றார்.

## மின் கட்டண குறைப்பு...

கருத்துகளைப் பெற ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த நடவடிக்கை நேற்று முன்தினம் (27) நிறைவடைந்துள்ளதுடன், அது தொடர்பான கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் தற்போது ஆணைக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு வருவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## நெல்லுக்கு நியாய விலை...

கிளிநொச்சி இரணைமடு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் ஒன்றிணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நெல் சந்தைப்படுத்தல் நிலையம் முன்பாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணி கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றடைந்து அங்கு விவசாயிகளால் மகஜர் கையளிக்கப்பட்டது.

தற்பொழுது நெல் 48 தொடக்கம் 50 ரூபாவுக்கு கொள்வனவு நடைபெறுவதாகவும் தமக்கு அறுவடை முடிவில் செலவீனமாக 85 ரூபா முடிவடைவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சிய சாலைகள் அனைத்துமே வெறுமனே காணப்படுவதாகவும் இருப்பினும் நெல் கொள்வனவு உரிய காலத்தில் உரிய விலையில் கொள்வனவு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை, அந்த மகஜரை மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகனிடமும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடமும் விவசாயிகள் கையளித்தனர்.

## ஐந்து மாதங்களில்...

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2021ஆம் ஆண்டு 439 யானைகள் உயிரிழந்துள்ள நிலையில், 2020ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் உயிரிழக்கும் யானைகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளன.

இதன்படி, கடந்த 2020ஆம் ஆண்டு 328 யானைகளும் 2021ஆம் ஆண்டு 375 யானைகளும் உயிரிழந்துள்ளன.

இந்நிலையில், 2010ஆம் ஆண்டு முதல் இம்மாதம் 07ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் பல்வேறு காரணங்களால் 03ஆயிரத்து 976 யானைகள் உயிரிழந்துள்ளன.

அந்தவகையில் 2010ஆம் ஆண்டு 227 யானைகளும் 2011ஆம் ஆண்டு 255 யானைகளும் 2012ஆம் ஆண்டு 250 யானைகளும் 2013ஆம் ஆண்டு 206 யானைகளும் 2014ஆம் ஆண்டு 231 யானைகளும் உயிரிழந்துள்ளன.

இதேவேளை, 2015ஆம் ஆண்டு 205 யானைகளும் 2016ஆம் ஆண்டு 279 யானைகளும் 2018ஆம் ஆண்டு 319 யானைகளும் 2019ஆம் ஆண்டு 409 யானைகளும் உயிரிழந்துள்ளன.

2010ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் பொலன்னறுவை வனவிலங்குகள் பிராந்தியத்துக்குள்ளேயே அதிக எண்ணிக்கையிலான யானைகள் உயிரிழந்துள்ளன. அந்தவகையில் மேற்படி பொலன்னறுவை வனவிலங்குகள் பிராந்தியத்துக்குட்பட்ட பகுதியில் 917 யானைகள் உயிரிழந்துள்ளன.

அத்தோடு, 2010ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் கிழக்கு மாகாண வனவிலங்குகள் பிராந்தியத்துக்குள் 738 யானைகள் உயிரிழந்துள்ளன. அதேபோன்று அநுராதபுரத்தில் 551 யானைகளும் வடமேல் மாகாணத்துள் 435 யானைகளும் விசேடமாக 14 வனவிலங்கு பாதுகாப்பு பிராந்தியங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் இவ்வாறு யானைகள் உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குறைவான தரமுடைய...

பயன்படுத்தும் நிலைமையை உருவாக்கியுள்ளதாகவும் இலங்கை மருத்துவச் சங்கத்தின் தலைவர் வைத்தியர் வின்யா ஆரியரத்ன சுட்டிக்காட்டினார்.

மருத்துவச் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று (28) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

மருந்துகளின் உயர்த்தரத்தை உறுதிப்படுத்தி அதன் தன்மையை நிலையாக பேணும் செயற்பாடுகளை ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையே முன்னெடுக்க வேண்டும். ஆனால், அது இடம்பெறவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும். ஆகவே, இந்த அதிகாரசபையின் செயற்பாடுகள் முழுமையாக வீழ்ச்சியை சந்தித்துள்ளன. இதுதொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதத்தினூடாக அறிவித்துள்ளோம்.

அத்தியாவசிய மருந்துகள், சத்திர சிகிச்சைக்கான பொருட்கள் அநேகமான வைத்தியசாலைகளுக்கு கிடைப்பதில்லை. அதன் காரணமாக குறைந்த தரம் கொண்ட மருந்துகள் முறையான பரிசோதனைகளின்றி நாட்டுக்குள் வருகின்றமையை ஆய்வுகளினூடாக நாங்கள் உறுதி செய்துள்ளோம். இதனை ஜனாதிபதிக்கும் அறிவித்திருக்கிறோம் என்றார்.

இதேவேளை, ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் கட்டாயம் மருந்தியல் தொடர்பில் பேராசிரியரொருவர் இருக்கவேண்டியது அவசியமாகும். இருந்தபோதும் வருடக்கணக்காக இந்த அதிகாரசபைக்கு மருந்தியல் தொடர்பான பேராசிரியரொருவர் நியமிக்கப்படவில்லை. அவ்வாறிருக்கையில் இந்த அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும் தீர்மானங்கள் தவறாக அமைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தேசிய தொற்றுநோய் தொடர்பான மருத்துவ நிறுவனத்தின் விசேட வைத்தியர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

23 சிரேஷ்ட வைத்தியர்கள் கடந்த வாரம் அமைச்சுக்கு இடமாற்றம் செய்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களே மருந்தியல் தொடர்பில் விசேட பயிற்சிப்பெற்றவர்களுமாவர். இவ்வாறான இடமாற்றங்கள் வழங்கும்போது நிச்சயமாக அந்த நிறுவனம் வீழ்ச்சியை சந்திக்கும்.

உலக வங்கியின் நிதியுதவி அவ்வாறு இல்லாவிட்டால் ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக கடன் பெற்றுக்கொடுக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. புதிய வருடத்துக்கு இந்த நிதி போதுமாக இருக்குமென்றே கடந்த வருடம் தெரிவித்திருந்தார்கள். ஆனால், இந்த வருடம் ஆரம்பித்து 06 மாதங்கள் நிறைவடைந்தும் இன்னும் மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த நிலைமையை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு பதிவு செய்யப்படாத மருந்துகளை நாட்டுக்குள் கொண்டுவருவது மேலும் பாரதூரமான பிரச்சினையாக மாறியுள்ளது.

நோயாளர்களின் உயிரிழப்பு மரண பரிசோதனையிலேயே உறுதிப்படுத்தவேண்டும். சத்திர சிகிச்சைக்காக கொடுத்த மருந்தின் காரணமாகவே கடந்த காலங்களில் இரு உயிரிழப்புகளும் சம்பவித்துள்ளன. இதன்போது பயன்படுத்தப்பட்டுள்ள மருந்தானது பாவனைக்கு உகந்தது இல்லை என்பது, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அறிக்கையிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

## உள்ளூராட்சி சபைகளை...

ஏதேனும் சூழல் ஏற்பட்டால் அதற்குப் பதிலாக குறிப்பிட்ட ஒரு காலம்வரை கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் கூட்டுவதற்கான அதிகாரம் இந்தச் சட்டமூலத்தினூடாக அமைச்சருக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அஸ்வெசுமவில்...

*சி. திவியா*

அரசாங்கத்தின் அஸ்வெசும நலன்புரி உதவித் திட்டப் பதிவுகளில் முறைகேடு எனத் தெரிவித்து வவுனியா பெரியகட்டு கிராம சேவையாளர் அலுவலகம் முன்பாக மக்களால் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் வவுனியா - மன்னார் பிரதான வீதியும் மக்களால் முடக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணி வரை இந்தப் போராட்டம் இடம்பெற்றதுடன் அந்த வீதியில் போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

அரசாங்கத்தினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்த நிலையில், இரு நேரம் மட்டும் உணவை உட்கொண்டு வாழ்பவர்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள் உட்பட்ட வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படாமல் வெளிநாடுகளில் இருப்போர், அரச உத்தியோகத்தர்கள், வசதியானவர்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்து பெரியகட்டு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கணேசபுரம் கிராமத்தினை சேர்ந்த மக்களினால் இவ் கவனயீர்ப்பு வீதிமறியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா பெரியகட்டு கிராம சேவையாளர் அலுவலக வாயில் முன்பாக காலை 9.30 மணியளவில் மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் 30 நிமிடங்களின் பின்னரும் எவ்வித அதிகாரிகளும் போராட்ட இடத்துக்கு வருகை தராமையினையடுத்து ஆத்திரமடைந்த மக்கள் வவுனியா - மன்னார் பிரதான வீதியினை முற்றாக வழிமறித்து போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். இதன் காரணமாக அவ்வீதியூடான போக்குவரத்து ஒரு மணி நேரமாக முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

அதன் பின்னர் போராட்ட இடத்துக்கு வருகை தந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீதியினை விட்டுச் செல்ல மறுப்பு தெரிவித்தனர்.

அதன் பின்னர் பறயனாலங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார். எனினும், மக்கள் கிராம சேவையாளர் இவ்விடத்துக்கு சமுகமளிக்கும் வரை தாம் செல்ல மாட்டோம் என தெரிவித்த நிலையில், பறயனாலங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மக்களை பலவந்தமாக தள்ளியமையுடன் கதிரையில் அமர்ந்திருந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விசேட தேவைக்குட்பட்ட நபரை எழுப்பி அவரை தள்ளியதுடன் அவர் அமர்ந்திருந்த கதிரையினை தூக்கி பற்றையில் வீசினார்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் செயலால் ஆத்திரமடைந்த மக்கள் மீண்டும் வீதியில் இறங்கி தமது போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். அதன் பின்னர் அவ்விடத்துக்கு வருகைதந்த பெரியகட்டு கிராம சேவையாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி மேல்முறையீடுகளை மேற்கொள்ளுமாறும் தன்னால் இயன்ற உதவிகளை தாம் செய்வதாகவும் தெரிவித்தமையினையடுத்து போராட்டம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதுடன் பொதுமக்கள் வீதியினை விட்டு வெளியேறினர்.

எனினும், கதிரையில் அமர்ந்திருந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விசேட தேவைக்குட்பட்ட நபரை எழுப்பி அவரை தள்ளியதுடன் அவர் அமர்ந்திருந்த கதிரையினை தூக்கி பற்றையில் வீசிய பொறுப்பதிகாரி அவரிடம் மன்னிப்பு கோர வேண்டும் என மக்கள் தெரிவித்தமையினையடுத்து, பொறுப்பதிகாரி அவரிடம் மன்னிப்பு கோரினார். எனினும் பாதிக்கப்பட்ட நபர் பொறுப்பதிகாரியின் பதிலுக்கு உடன்படவில்லை என்பதுடன் தான் தலைமைக்காரியாலயத்தில் முறைப்பாடு செய்வதாகவும் தெரிவித்திருந்தார்.

## புதிய எதிர்பார்ப்புகளுடன்...

மக்களை சிரமத்தில் இருந்து மீட்பதற்கு எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் முன்வந்து அதற்கு தீர்வு காணும் மனிதாபிமான பணியில் ஈடுபடுவதன் முக்கியத்துவத்தையும் திருப்தியையும் ஹஜ் பண்டிகை பிரதிபலிக்கிறது.

அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தின் அடையாளமாக நபி இப்ராஹிம், அவரது மகன் நபி இஸ்மாயில் மற்றும் அன்னை ஹாஜரா ஆகியோர் கருதப்படுகிறார்கள். பல நூற்றாண்டுகளாக, அவர்கள் செய்த தியாகங்களுக்கு நன்றியின் வெளிப்பாடாக முழு உலக மக்களாலும் போற்றப்படுகின்றனர்.

அண்மைக் காலங்களில் இலங்கை இவ்வாறான தொரு கடினமான சூழ்நிலைக்கு முகங்கொடுத்தது.

அந்தக் கஷ்டங்களை சமாளித்து நாட்டை தற்போதைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு மக்களின் தியாகம், அர்ப்பணிப்பு மற்றும் பொறுமை ஆகியவை மிகவும் சாதகமான காரணங்களாக அமைந்தன.

நீங்கள் செய்த தியாகத்தை நினைவுகூருவதற்கும் கடந்த வரலாறுக்கால முக்கியமான தருணத்தை நினைவுபடுத்துவதற்கும் ஹஜ் பண்டிகை மிகவும் பொருத்தமான சந்தர்ப்பமாக நான் கருதுகிறேன்.

அடுத்த ஹஜ் பண்டிகையின் போது பொருளாதார மற்றும் சமூக சிக்கல்களில் இருந்து முழுமையாக விடுபட அனைவரின் பங்களிப்பும் பங்கேற்பும் மிகவும் முக்கியமானது. பிராந்திய மற்றும் உலகளாவிய இலக்குகளை அடைவதற்கான பொதுவான நோக்கத்தில் கைகோர்க்க ஹஜ் பண்டிகையின்போது உங்களை அழைக்கிறேன்.

பெரியவர்களாகிய நாம் அனுபவிக்கும் இன்னல்களை வருங்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லாமல், அவர்களை நிலையான மகிழ்ச்சியுடன் கூடிய பூகோள சமூகத்தின் பெருமை மிக்க மக்களாக உயர்த்துவதன் முக்கியத்துவத்தை முதியோர், இளையோர் என அனைவருக்கும் இந்த அற்புதமான ஹஜ் பெருநாளில் நான் நினைவூட்டுகிறேன்.

எதிர்வரும் ஹஜ் பெருநாள் அனைத்து இலங்கை முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கும் மற்றும் உலகளாவிய முஸ்லிம்களுக்கும் மகிழ்ச்சியான பண்டிகையாக அமைய பிரார்த்திக்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அற்புதமான பிணைப்பை...

மற்றும் பல்வேறு வேறுபாடுகளைக் குறைத்து சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் நற்பண்பு சிந்தனைகளை உருவாக்குவதாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஹஜ்ஜூப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சவூதி அரேபியாவின் மக்காவில் ஆண்டுதோறும் நடைபெறும் ஹஜ் புனிதப் பயணம், இப்ராஹிம் நபி மற்றும் அவரது மகன் இஸ்மாயில் ஆகியோரின் தியாகத்தை குறிக்கும் நிகழ்வாக கருதப்படுகிறது.

உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமிய மக்கள் எந்த வேறுபாடும் இன்றி ஒன்று கூடி உலக அமைதிக்காக இறைவனை வழிபடுகின்ற ஒரு சர்வதேச மாநாடாகவும் ஹஜ் புனிதப் பயணத்தைக் கருதலாம். இஸ்லாத்தின் ஐந்து பெரிய கடமைகளில் ஐந்தாவது கடமை ஹஜ் செய்ய வேண்டும். தமது வாழ்நாளில் ஒருமுறையாவது மக்காவுக்குச் சென்று ஹஜ் செய்ய வேண்டும் என்பது இஸ்லாமியர்களின் பிரார்த்தனையாகும். அந்தப் பிரார்த்தனை நிறைவேற நானும் பிரார்த்திக்கின்றேன்.

மகிழ்ச்சியின்மை மற்றும் இருள் சூழ்ந்த நிலைமை முடிவுக்கு வரட்டும். மகிழ்ச்சியும் சௌபாக்கியமும் உருவாகட்டும்.

சமூக விழுமியங்களை வலுப்படுத்தவும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பவும் நற்செயல்களை முன்னுதாரணமாகவும் ஆக்கிய ஆன்மீகப் பண்டிகையான ஹஜ் பங்களிப்புச் செய்கின்றது.

புனித திருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகத்தின் வாழ்க்கைத் தத்துவத்தைப் பின்பற்றும் இஸ்லாமியர்களாகிய உங்கள் அனைவருக்கும் இந்த ஹஜ் பெருநாள் ஆன்மிக முன்னேற்றத்தின் மகத்தான நாளாக அமையட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலாபமீட்டும் நிறுவனமாக...

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் அண்மையில் கூடிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப் குழு) லங்கா சதொச லிமிட்டட் நிறுவனம் அழைக்கப்பட்டது.

இதன்போது, நிறுவனத்தின் 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்த விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

2021 - 2024 வரையான காலப் பகுதிக்கு உறுதியான திட்டம் இருந்தபோதும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இதனால், 2028ஆம் ஆண்டுவரை விரிவான திட்டத்தை தயாரித்து, அதன் செயல்பாடுகள் குறித்து 02 மாதங்களுக்குள் அறிக்கை அளிக்கும்படியும், ஒரே நேரத்தில் செயற்றிட்டத்தை தயாரிக்குமாறும் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

உள்ளகக் கணக்காய்வுப் பணியாளர்களாக 21 பேர் இருந்தபோதிலும் 2021ஆம் ஆண்டுக்கான மூன்று கணக்காய்வு விசாரணைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளமையும் 2022ஆம் ஆண்டுக்காக எவ்வித கணக்காய்வு விசாரணைகளும் முன்வைக்கப்படவில்லை என்றும் இந்த கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதிலுள்ள சிரமம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதுடன் இதன்படி, உள்ளக சுற்றறிக்கை ஊடாக உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்து இதன்போது, 2014 - 2015 காலத்தில் லங்கா சதொச நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதி காரணமாக 06 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அரிசி இறக்குமதி செய்யப்பட்டு அவை காலாவதியானமையால் விலங்குத் தீவனமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் இதற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்தினால் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, எதிர்காலத்தில் கலந்துரையாடல் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லங்கா சதொச நிறுவனத்தில் 2022ஆம் ஆண்டின் நட்டம் ஏறத்தாழ 600 மில்லியன் ரூபா என்றும் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார். அத்துடன் 2021 டிசம்பர் 31ஆம் திகதியில் மொத்த நட்டம் 15 பில்லியன் ரூபாவுக்கு அண்மித்த பெறுமதி என்றும் இங்கு கலந்துரையாடப்பட்டது. சதொச நிறுவனத்துக்குப் பொருத்தமான வர்த்தக மாதிரியொன்றைத் தயாரிப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

லங்கா சதொச நிறுவனம் பொருட்களை இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்குப் பதிலாக, புறக்கோட்டைப் பிரதேசத்திலிருந்து பொருட்களை வாங்கி விற்பனை செய்வதன் மூலம் வாடிக்கையாளருக்கு குறைந்த விலையில் பொருட்களை விற்பனை செய்து நிறுவனத்திற்கு அதிக இலாபம் ஈட்டும் வாய்ப்பு தவறவிடப்படுவதாக இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும், அரசு எடுக்கும் கொள்கை ரீதியான முடிவுகளின் அடிப்படையில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டாலும், பணத்தை வசூலிப்பதிலுள்ள தாமதத்தினால் ஏற்படும் இழப்பு குறித்து அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

சதொசவுக்கு பொருத்தமான வர்த்தக மாதிரியைத் தயார் செய்ய வேண்டியதன் அவசியத்தை கோப் குழுவின் தலைவர் வலியுறுத்தியுள்ளார். உள்ளக முகாமைத்துவப் பலவீனங்கள் மற்றும் வெளிப்புறத் தலையீடுகளின்றி சுயாதீனமாக முடிவெடுக்கக்கூடிய வர்த்தக மாதிரியின் கீழ் இந்த நிறுவனத்தை நியமிக்க வேண்டியதன் அவசியத்தைக் கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வாடிக்கையாளர்களை அதிகமாக ஈர்க்கக்கூடிய வகையில் லங்கா சதொச நிறுவனத்தை செயற்படுத்த வேண்டியதன் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தில் ஆயிரத்து 123 பணியாளர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அவற்றை நிரப்புவதற்கு முன்னர், அதனை மதிப்பாய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கணக்காய்வாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, ஓகஸ்ட் 22ஆம் திகதி லங்கா சதொச நிறுவனத்தை மீண்டும் அழைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர, நிமல் லான்சா, ஜயந்த சமரவீர, எஸ்.எம்.மரிக்கார், எஸ்.எம்.எம்.முஷாரப், சஞ்சீவ எதிரிமான்ன, சாணக்கியன் இராசமாணிக்கம், மதுர விதானகே, பேராசிரியர் சரித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சமூக ஊடகங்களில் தனக்கு எதிராக நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகள்

## விமர்சனங்கள் தொடர்பில் தென் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் விளக்கம்

பாறுக் ஷிஹான், மாளிகைக்காடு செய்தியாளர்

சமூக ஊடகங்கள் தொடர்பான முறையான கட்டுப்பாடுகள் இல்லாததனால் யாரும் எதனையும் பேசலாம், எதனையும் எழுதலாம் என்ற நிலை உருவாகியுள்ளது என தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் தொடர்பாக வெளிவரும் விமர்சனங்களுக்கு பதிலளிக்கும்முகமாக நேற்று (28) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உபவேந்தரினைத் தெரிவுசெய்வதற்கு இரண்டு வகையான புள்ளியிடல் முறை காணப்படுகிறது. முதலாவது புள்ளியிடல் UGC ஆல் நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்படுவது. இக்குழு UGC ஆல் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும் மூதவை நியமன உறுப்பினர்களையும் கொண்டது. இக்குழு அரசியல் செல்வாக்கற்ற சுயாதீனமானவர்களைக் கொண்டது. இரண்டாவது புள்ளியிடல் முறை பேரவை உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படுவது. முதலாவது புள்ளியிடல் முறையில் நான் அதிக புள்ளிகளுடன் முதலிடம் பெற்றேன்.

இரண்டாவது புள்ளியிடலில் சில பேரவை உறுப்பினர்கள் எனக்குப் புள்ளிகளைக் குறைத்து வழங்கினர். அதனால் இரண்டாவது புள்ளியிடலில் மிகச் சிறிய புள்ளி வித்தியாசத்தில் மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்டேன். இருவகை புள்ளியிடலிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களது விபரம் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும். மூவரில் எவரையேனும் உபவேந்தராக நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு முழு அதிகாரமுள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட மூவருள் நான் மட்டுமே பேராசிரியராக இருந்தேன். ஏனைய இருவரும் சிரேஷ்ட விரிவுரையாளர்களே. பதவி நிலை, புள்ளிகள் அடிப்படையில் நான் முன்னிலை வகித்தேன். அதனால் ஜனாதிபதி என்னை உபவேந்தராக நியமனம் செய்தார். நான் உபவேந்தராக நியமிக்கப்படுவதற்கு முன்னரும் பல போலிக் கடிதங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டன. உபவேந்தராக நியமிக்கப்பட்டு பதவியினை பொறுப்பேற்பதற்கு குறிப்பிட்டகாலம் தாமதிக்க வேண்டியிருந்தது. இடைக்காலத்தில் எனது நியமனத்தை இரத்துச் செய்வதற்கு சில குழுவினர் பகீரத முயற்சி எடுத்தனர். எனக்கெதிராக ஆட்சேபனைகள் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன. அவர்களது ஆட்சேபனைகளில் உண்மையில்லாததன் காரணமாக அதிகாரிகள் அதனைக் கருத்திற்கொள்ளவில்லை. இருப்பினும் அவர்களால் எனது பதவியினை இரத்துச் செய்யமுடியவில்லை.

பதவியிலிருந்த உபவேந்தரின் பதவிக்காலம் முடிவுற்றதும் நான் பதவியினைப் பொறுப்பேற்றேன். பதவியேற்றதும் பல்கலைக்கழகத்தை பல்வேறு வழிகளிலும் மேம்படுத்த நடவடிக்கை எடுத்தேன்.

பல்கலைக்கழகத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் எனது நிர்வாகத்துக்கு முழு ஆதரவையும் வழங்கினர்.



பதவியேற்றதும் பல்கலைக்கழக ஆளணியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டது. மிகவும் வெளிப்படைத்தன்மையான முறையில் நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றன.

நேர்முகத் தேர்வில் தோல்வியுற்ற பலர் எனக்கெதிராக சமூக ஊடகத்தில் விமர்சனங்களை தொடுக்க ஆரம்பித்தனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் நான் நடவடிக்கை எடுத்தேன். சில விரிவுரையாளர்களது ஒழுக்காற்று விசாரணைகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. பட்டப்பின்படிப்பை உரிய காலத்துக்குள் நிறைவுசெய்யாதவர்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முன்னர் சட்டப்படி இராஜினாமா செய்தவர்கள் மீண்டும் முறைகேடாக பல்கலைக்கழகத்துக்கு நுழைவதற்கும் முயற்சித்தனர்.

அத்தகையவர்கள் தொடர்பில் சட்டத்துக்குப் புறம்பாக என்னால் அவர்களை இணைக்க முடியவில்லை.

இத்தகையவர்கள் என்னைப் பற்றியும் எனது நிருவாகம் பற்றியும் போலித் தகவல்களை வழங்கிவருகின்றனர். தொடர்ச்சியான ஆட்சேபனைக் கடிதங்களை அனுப்பி அதிகாரிகளுக்கு நெருக்கடிகளைத் தோற்றுவிக்கின்றனர். சமூக ஊடகங்களினூடாக எனக்கெதிராக போலிப் பிரசாரங்களை மேற்கொண்டுவருகின்றனர். சில ஊடகங்களில் தமது செல்வாக்கினைப் பயன்படுத்தி போலிச் செய்திகளை பிரசுரிக்கின்றனர்.

நான் பதவியேற்றது முதல் இந்தத் தரப்பினர் நாசகார செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களது ஒவ்வொரு முயற்சியும் முறைகேடானது என்பதால் அவை முறியடிக்கப்பட்டன.

உயர் அதிகாரிகளிடம் தமது தொடர்பை பயன்படுத்தி இவர்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர். சட்ட ரீதியாக எனக்கு எதிராக நடவடிக்கை எடுக்க எந்த நியாயமான காரணங்களும் இல்லை.

அதனால் எனக்கெதிராக எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளேன்.

சில சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் என்னை அகற்ற முயற்சி எடுக்கப்பட்டது. அதற்கு இசைவாக ஊடகச் செய்திகளும் இந்த நாசகாரக் குழுவினால் வெளியிடப்பட்டது.

பல்கலைக்கழக உபவேந்தரினை சட்டரீதியாக அகற்றுவதற்கு ஒருமுறை இருக்கிறது.

பல்கலைக்கழக நிர்வாகம் சீர்குலைந்திருந்தால் மட்டுமே அதனைச் செய்யமுடியும். ஆனால் எமது பல்கலைக்கழகம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

விரிவுரையாளர்களும் நிர்வாகிகளும் மாணவர்களும் மிகவும் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றனர். இவ்வளவு காலமும் நான் பொறுமையாக இருந்தேன். இக்குற்றச்சாட்டுகளை சட்டரீதியாக அணுகுவதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றார்.

# மட்டு. மாவட்ட செயலாளரை சந்தித்த அமெரிக்க தூதரக அரசியல் அதிகாரி

மட்டக்களப்பு நிருபர்



அமெரிக்க தூதரக அரசியல் அதிகாரியும் இரண்டாவது செயலாளருமான மெதீவ் ஹின்சன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பு நேற்று (28) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் அதன் விளைவாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகள் அவற்றை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இதேவேளை, போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தவும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிக்கவும் மாவட்டத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் இதன்போது எடுத்துக்கூறப்பட்டதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. அத்துடன் இதுதொடர்பாக திட்ட முன்மொழிவும் கையளிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் அமெரிக்க தூதரக அரசியல் நிபுணர் சரித்த பெர்னாண்டோ, மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், உளநல வைத்திய நிபுணர் டான் சௌந்தரராஜன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன் உள்ளிட்ட மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# அஸ்வெசும நிவாரணத் திட்டத்தில் பாரபட்சம் தலவாக்கலையில் போராட்டம்





தலவாக்கலை நிருபர்

அரசாங்கத்தினால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அஸ்வெசும நிவாரணத் திட்டத்தில் பாரபட்சம் இடம்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி தலவாக்கலையில் நேற்று (28) எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று பிரதேச மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தலவாக்கலை பிரதேச செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

அஸ்வெசும நிவாரணத்திட்ட விண்ணப்பத்தில் கோரப்பட்ட தகுதி இருந்தும் இத்திட்டத்துக்கு விண்ணப்பித்த பலர் இத்திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. எனவே இவ்வாறான போலித் திட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் மக்கள் அதிகம் பயன்பெறும் வகையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்தாலே போதுமானது என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர். இதன் போது பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

## வீட்டுச்சுவரை இடித்து வீழ்த்திய யானை; சிறுமிகள் இருவர் படுகாயம்

அநுராதபுரம் செய்தியாளர்

வீடொன்றின் சுவரை காட்டு யானை இடித்து வீழ்த்தியதால் அங்கு உறங்கிக் கொண்டிருந்த சிறுமிகள் இருவர் படுகாயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக எலயாபத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் எலயாபத்துவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாணியங்கமுவ பகுதியில் நேற்றுமுன்தினம் (27) இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மேற்படி பகுதியைச் சேர்ந்த 09 மற்றும் 12 வயதுகளை யுடைய இரண்டு சிறுமிகளே படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எலயாபத்துவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


ஜீனியர் தமிழன்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் மாதிரி வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாளுடனான விசேட பொதி




பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0777983308 / 0761393805


# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 14ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்:** தடைப்பட்டிருந்த பயணத்தால் நன்மைகளை அடைவீர்கள். மனதை மகிழ்விக்கும் பல சம்பவங்கள் நடந்தேறும்.

**ரிஷபம்:** சுய தொழில் மூலம் நன்மைகள், இலாபங்கள் உண்டு. உடல், மன நோய்களால் சற்று தொந்தரவுகள் உண்டு.

**மிதுனம்:** வீணான மனக்கவலைகளை விட்டு அமைதியுடன் இருங்கள். பயணங்களை குறைத்துக் கொள்வது நல்லது.

**கடகம்:** யாரையும் நம்பி புதிய தொழில் வியாபாரங்களில் இறங்க வேண்டாம். வாகனப் பயணங்களில் கவனம் வேண்டும்.

**சிம்மம்:** உங்கள் தேவைக்காக பணம் கிடைக்கும். மனத்துணிவுடன் காரியமாற்றி சாதனை செய்து மகிழ்ச்சியடைவீர்கள்.

**கன்னி:** யாருக்கும் வாக்களிக்காதீர்கள். கடன் கொடுப்பது, பெறுவது சில பிரச்சினைகளை ஏற்படுத்தும். எச்சரிக்கை வேண்டும்.

**துலாம்:** மனதில் ஒருவித பய உணர்வு, படபடப்பு தோன்றும். வீண் டென்ஷன் வேண்டாம். பொறுமையாக இருங்கள்.

**விருச்சிகம்:** தேவையற்ற பயணங்கள், அதனால் செலவுகள் இவை இன்றைய நாளில் தவிர்க்க முடியாதவை.

**தனுசு:** தொழில் வியாபார அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். நினைத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** நீங்கள் தொழிலில் எதிர்ப்பார்த்த நன்மைகள், உயர்வுகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**கும்பம்:** நீங்கள் உங்கள் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் தன ரீதியிலான சிக்கல்களை சந்திக்க வேண்டி வரும்.

**மீனம்:** மனதை ஒருநிலைப்படுத்தி, ஆன்மீக சிந்தனைகளை வளர்த்துக்கொள்வதே இன்றைய நாளின் சிறப்பு. வீண் கவலை வேண்டாம்.

**திதி:** ஏகாதசி பி.இ.2.42 வரை பின் துவாதசி (வளர்)
**நட்சத்திரம்:** சுவாதி பி.ப.4.30 வரை பின் விசாகம்
**யோகம்:** சித்தாமிர்தம் யோகம் பி.ப.4.30 வரை பின் சித்தம்
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப.10.54 - 11.54 மணிவரை
**ராகுகாலம்:** 1.24 - 2.54 மணிவரை
**எமகண்டம்:** 5.54- 7.24 மணிவரை
**குளிகை:** 8.54 - 10.24 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மீனம் ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிர்ஷ்டம்:** மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம், திருவாதிரை, சுவாதி, சதயம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** ஏகாதசி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியேற்பு



மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி சேரலாதன் நேற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த சில மாதங்களாக வெற்றிடமாக காணப்பட்ட கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு சுகாதார அமைச்சினால் வைத்தியர் சேரலாதன் நியமிக்கப்பட்டார்.

இவர் முன்னர் அக்காரயன் வைத்திய சாலை பொறுப்பு வைத்தியராகவும் கிளிநொச்சி மாவட்டபதில் திட்டமிடல் வைத்திய அதிகாரியாகவும் நீண்டகாலம் பணியாற்றியவர்.

கடந்த சில காலமாக பல்வேறு விமர்சனங்களுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளான கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைத் திணைக்களத்தை பொறுப்பேற்றுள்ள இவர், மீண்டும் மாவட்ட சுகாதார சேவைகளை உயரிய நிலைக்குகொண்டு செல்வார் என்ற நம்பிக்கை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

# இறை கருணையில் நிழல்பெற வேண்டும்

## இம்ரான் எம்.பி. ஹஜ் வாழ்த்து



''புனித ஈதுல் அழ்ஹா - ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடும் இஸ்லாமிய உறவுகள் அனைவருக்கும் என் உளமார்ந்த தியாகத்திருநாள் வாழ்த்துகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்'' என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்றூப் தெரிவித்துள்ளார்.

புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெளிநாடுகளிலும் தாய்நாட்டிலும் ஈதுல் அழ்ஹா தியாகப் திருநாளைக் கொண்டாடும் என் அன்பின் இஸ்லாமிய சகோதரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், உறவினர் அனைவர் மீதும் அல்லாஹ்வின் அருள் மழை பொழிய வேண்டும். அவர்களது வாழ்க்கை வளம்பெற வேண்டும். இறை கருணையில் அவர்கள் நிழல்பெற வேண்டும் என்று ஏக இறையோன் அருளாளனை இருகரம் ஏந்திப் பிரார்த்திக்கின்றேன்.

மத்திய கிழக்கில் முதல் நாளும் தாய்த்திருநாட்டில் மறுநாளும் இந்த தியாகத்திருநாளைக் கொண்டாடும் நாம்,

எமது மார்க்கம் முழு மானிட சுபீட்சத்துக்குமானது. அனைவரதும் நல்வாழ்வுக்கும் உரியது. இதை அறியாத இனவாத குறுகிய மனம்கொண்டோர், எம் மீது காழ்ப்புணர்வு கொண்டு மார்க்கம், கல்வி, பண்பாடு, நிலம், வரலாறு, இருப்பு என்று எல்லாவற்றையும் இலக்கு வைத்து அழிக்க அல்லது கொச்சைப்படுத்த முனைகின்றனர்.

எனவே எமது மார்க்கம் சமாதானத்துக்கானது என்ற தூதையும் நாங்கள் தேசத்தின் நல்லாட்சிக்கான பங்காளர்கள் என்ற செய்தியையும் சகோதர சமூகங்களுக்கு சிறப்பாக சொல்ல வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். அதற்கு முன் நாமே இந்த பேருண்மையை புரிய வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

நபி இப்ராஹீம் (அலை) அவர்களது வாழ்வியல் வரலாற்றின் உன்னத பாடத்தை புகட்டும். நாம் அனைவரும் எம் தாய்த்திருநாட்டை பீடித்துள்ள ஊழல், இனவாதம், வறுமை, போதைப்பரவல், அடக்குமுறை, அந்நிய ஆதிக்கம், வேலையின்மை போன்றவற்றுக்கு எதிராக பாடுபட இப்புனித நாளில் உறுதி கொள்வோம்.


வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூன் 29ஆம் திகதி, வியாழக்கிழமை



# அத்தியாவசிய துறைகளின் பணியாளர்கள் கவனிக்கப்படுவார்களா?

மருத்துவ பயிற்சி மற்றும் ஏனைய தேவைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்று பணிக்கு சமுகமளிக்காத 83 வைத்திய நிபுணர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக மருத்துவ சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் பிரியந்த அத்தபத்து தெரிவித்துள்ளார்.

மேலும், அமைச்சுக்குத் தெரிவிக்காமல் வெளிநாடு சென்ற 83 விசேட வைத்தியர்கள் சேவையை கைவிட்டதாக அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக பொதுக் கணக்குகளுக்கான நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

இதன்படி வெளிநாட்டில் பயிற்சி பெற்று சான்றிதழ் பெற்று அண்மையில் விசேட வைத்தியராக மாறிய 250 பேரில் 50 பேர் வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இவ்வாறு வெளிநாடு செல்பவர்கள் பிணைப்பணத்தைச் செலுத்தவேண்டுமெனவும் நிரந்தரமாக வெளிநாடு சென்றவர்களிடமிருந்து பிணைப்பத்திரத்தை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பிரியந்த அத்தபத்து தெரிவித்துள்ளார்.

வெளிநாடு சென்றுள்ள வைத்தியர்களுக்கு நாடு திரும்புமாறு கடிதம் வழங்கப்படுமெனவும் கடிதம் வழங்கப்பட்டு ஒருமாத காலத்திற்குள் அவர்கள் நாடு திரும்பாவிட்டால் சேவையை விட்டு வெளியேற்றப்படுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக பொதுக் கணக்குகளுக்கான பாராளுமன்றக் குழு அதன் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவண்ண தலைமையில் பாராளுமன்ற வளாகத்தில் கூடியது. அந்தச் சந்திப்பில் இது தொடர்பான தகவல்கள் வெளியாகின.

இதேவேளை, இவ்வருடம் மே 31ஆம் திகதி வரையில் 677 வைத்தியர்கள் பயிற்சிக்காக வெளிநாடு சென்றுள்ளதாகவும், அடுத்த இரண்டு வருடங்களில் அவர்கள் நாடு திரும்பவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன,

இவர்கள் வரும்வரை எதனையும் உறுதியாகக் கூற முடியாது. இந்த விசேட வைத்தியர்கள் வராத பட்சத்தில் சிறிய வைத்தியசாலைகள் பாதிக்கப்படலாம் எனவும் இது தொடர்பில் பரவலாகப் பேசப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 612 வைத்தியர்கள் பயிற்சிக்காக வெளிநாடு செல்லத் தயாராகி வருவதாகவும், பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதாகவும், பிள்ளைகளின் படிப்புக்கான பணத்தைத் தேடுவது மற்றுமொரு நம்பிக்கை எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தத்தின் பிரகாரம் அவர்கள் இலங்கைக்குத் திரும்பவில்லையென்றால் பயிற்சிக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகையான ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாவை மீளப் பெற்றுக்கொள்வதாக சுகாதாரத் திணைக்களத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இவ்வருடம் முன்னூறு வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும், வெளிநாடுகளுக்குச் செல்லும் விசேட வைத்தியர்கள் சிலர் மீண்டும் பணிக்குத் திரும்புவதில்லையெனவும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஜே. விஜேசூரிய அங்கு தெரிவித்துள்ளார்.

2,799 சிறப்பு மருத்துவர்கள் இருக்கவேண்டுமென்றும், தற்போது 2,148 பேர் மட்டுமே உள்ளதாகவும், 651 பேர் பற்றாக்குறை இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விசேட வைத்திய நிபுணர்களின் வெளியேற்றமானது சுகாதாரத்துறையில் நிச்சயம் தாக்கத்தைச் செலுத்தப்போகிறது என்பதில் எந்த ஐயமுமில்லை. கடந்தகால பொருளாதார நெருக்கடிகளில் சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டதைப் போன்று மருத்துவத்துறை சார்ந்தவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஆனால், அவர்களின் பணிச் சுமைக்கேற்ற நிவாரணமோ இதர சலுகைகளோ பிற்காலத்தில் வழங்கப்படவில்லை. இதர பணியாளர்களைப்போல் அல்லாமல் மருத்துவ பணியாளர்கள் ஊனுறக்கமின்றி சேவையாற்றுவதையும் மறந்துவிடலாகாது.

அப்படியான பணியாளர்களை நாட்டிலிருந்து வெளியேறாமல் தடுக்க ஏற்பாடுகளைச் செய்யாமல் அவர்கள் தொடர்பில் கடும் சட்டதிட்டங்களைக் கொண்டுவருவதில் அர்த்தமில்லை. மருத்துவ பணியாளர்கள் மட்டுமல்ல, மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கான அனைத்து துறைகளின் பணியாளர்களும் ஏன் வெளியேறுகிறார்கள் என்று ஆராய்ந்து, அவர்களைத் தக்கவைக்கும் ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (28.06.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 198.8845 | 211.6214 |
| கனேடியன் டொலர் | 226.7158 | 240.6992 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.0360 | 44.2862 |
| யூரோ | 328.7852 | 347.5262 |
| ஜப்பான் யென் | 2.0891 | 2.2057 |
| சிங்கப்பூர் டொலர் | 221.9401 | 235.3074 |
| ஸ்ரேலிங் பவுன் | 383.0155 | 403.3282 |
| சுவிஸ் பிராங்க் | 334.1446 | 355.8588 |
| ஐ.அ. டொலர் | 301.1590 | 316.6728 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 819.1994 |
| குவைட் | குவைட் தினார் | 1,005.2242 |
| ஓமான் | ஓமான் றியால் | 802.1871 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.7247 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 82.3437 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 84.0788 |

# தியாகத்தை வலியுறுத்தும் புனித ஹஜ்ஜுப் பெருநாள்



**சத்தார் எம். ஜாவித்**

இப்ராஹிம் நபியின் தியாகத்தை வலியுறுத்துகின்ற தினமே புனித தியாகத்திருநாளாகும்.இஸ்லாமிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய வரலாற்றைக் கொண்ட முக்கியமான தினமாக இத்தினம் திகழ்கின்றது. இத்தினத்தில் எந்தவொரு மனிதனாலும் ஏற்றுக்கொள்ளவோ - சகித்துக் கொள்ளவோ முடியாததும் ஏன் ஒரு தகப்பனால் கூட செய்ய முடியாத ஒரு தியாகத்தை அதாவது, தனது மகனை அறுத்து பலிகொடுக்கத் துணிந்த சம்பவத்தை நினைவூட்டும் ஒரு தினமே இத்தினமாகும்.

அல்லாஹ்வின் கட்டளையை சிறிதளவேனும் மறுக்காது அவன்மீது நம்பிக்கை வைத்து மன உறுதியுடன் தனது மகனையே பலியிடுவதற்கு முன்வந்த தியாகத்தை புனித ஹஜ் தினம், உலகவாழ் முஸ்லிம்கள் மத்தியில் நினைவூட்டிக்கொண்டே இருக்கிறது.

இப்ராஹிம் நபி அவர்களுக்கு பல ஆண்டுகளுக்குப் பின்னர் தவம் கிடந்து கிடைத்த புத்திரரே இஸ்மாயில் அலை அவர்களாகும். அவ்வாறு கிடைத்த அன்புச் செல்வத்தை அறுத்து பலியிடச் சொன்னதாக கண்ட கனவை அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து ஏற்றுக்கொண்டார்கள்.

என்றுமே சகிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் முடியாத ஓர் இக்கட்டான நிலையில் தனது மகனுக்கு தான் கண்ட கனவை எவ்வாறு சொல்வது என்ற ஒருவகையான அச்ச உணர்வுடன் அல்லாஹ்வின் கட்டளை என்ற ஒரே நம்பிக்கையில் தனது அன்பு மகனை அன்பாக அழைத்து உங்களை அல்லாஹ் அறுத்து பலியிடக் கட்டளை பிறப்பித்துள்ளான் என்று சோகம் நிறைந்த முகத்துடன் கூறியதுமே அன்பு மகன் அல்லாஹ்வின் கட்டளையா? உடன் நிறைவேற்றுங்கள் தந்தையே என்று துணிச்சலுடன் கூறி மயிர் சிலிர்க்க வைத்த சம்பவமே இந்தப் புனித ஹஜ்ஜின்போது நினைவுகூரப்படுகின்றது.

இப்ராஹிம் நபியவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று தனது மகனை ஓர் அரிவாளுடன் ஒரு மலையடிவாரத்துக்கு அழைத்துச் சென்று அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவர்களாக மகனை குப்புறப் படுக்கவைத்து வாளால் அறுத்தபோது அந்த வாள் அறுக்க மறுத்தது. இதனைக் கண்டு கோபமுற்ற இப்ராஹிம் நபியவர்கள் அருகிலுள்ள மலையின் பாறைக் கல்லில் தனது வாளை ஓங்கி அடித்தபோது அந்தப் பாறைக்கல் இரண்டாகப் பிளந்துள்ளது. இதன் பின்னர் நீங்கள் உங்கள் புதல்வருக்குப் பதிலாக ஒரு ஆட்டை அறுத்து உழ்ஹிய்யா எனும் குர்பான் கடமையை நிறைவேற்றுங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளை நபி இப்ராஹிம் அவர்களுக்கு வருகின்றது. இந்த வரலாற்றுச் சம்பவத்தின் தொடரே உழ்ஹிய்யா எனும் கடமையாகும்.

துல் ஹஜ் மாதம் பிறை பத்து அன்று பெருநாள் தொழுகை முடிந்ததிலிருந்து அய்யாமுத் தஷ்ரீக் பிறை 11 , 12, 13 மாலை வரை ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற பிராணிகளை அல்லாஹ்வுக்காக அறுத்து ஏழைகளுக்கும் ஏனைய உறவினர்களுக்கும் கொடுப்பதே உழ்ஹிய்யா என்று கூறப்படும் கடமையாகும். இந்த உழ்ஹிய்யா என்ற வணக்கம் இஸ்லாத்தில் வலியுறுத்திச் சொல்லப்பட்ட ஒரு சுன்னத்தான கடமையாகும். இது முஸ்லிம்களின் சிறந்த வழிமுறையாகும். மேலும் இது அல்லாஹ்வின் பக்கம் நம்மை நெருங்க வைக்கும் நல்லமல்களில் மிகவும் மகத்தானதாகும்.

குறிப்பாக, மிருகங்களை அறுத்து பலி கொடுக்கும் இந்த உழ்ஹிய்யாவுக்கு அறுக்கப்படும் அந்த மிருகங்களை வதை செய்வதோ அல்லது அவற்றை அடித்து துன்பப்படுத்துவதோ இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மாறாக, அறுக்கப்படும் மிருகங்களை அவற்றுக்குத் தொந்தரவு செய்யாது நல்ல முறையில் அவற்றை அறுத்து உழ்ஹிய்யாவை கொடுப்பதையே இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

புனித ஹஜ்ஜின்போது உழ்ஹிய்யாவுடன் ஏனைய இன்னும் சில முக்கிய கடமைகள் இருக்கின்றன. புனித மக்காவுக்குச் சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்பவர்கள் அந்தக் கடமைகளை உரிய விதிமுறைகளுக்கமைவாக செய்வதன் மூலமே ஒருவருடைய ஹஜ் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜாக அமைகின்றது. எனவே, அல்லாஹ் எம் அனைவருக்கும் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் பாக்கியத்தை தந்தருள்வானாக ஆமீன்.

# தியாக வரலாறுகளை நினைவுகூரும் இறுதிக் கடமை ஹஜ்

**பேருவளை பீ.எம். முக்தார்**

முஸ்லிம்கள் வருடத்தில் இரு பெருநாள்களைக் கொண்டாடுகிறார்கள். இஸ்லாமிய வருடத்தில் பத்தாவது மாதமாக விளங்கும் ஷவ்வால் தலைப்பிறையன்று, ஈதுல் பித்ர் எனும் ஈகைப் பெருநாள் அனுஷ்டிக்கப்படுகிறது. இது இத்தினத்துக்கு முதல் மாதமாகத் திகழும் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று அல்லாஹ்வின் ஆணையை நிறைவேற்றி விட்டோம் என்ற களிப்பின் வெளிப்பாடாகவும் கொண்டாடப்படுகிறது.

அடுத்தது ஈதுல் அழ்ஹாவெனும் தியாகப் பெருநாளாகும். இஸ்லாமிய ஆண்டின் இறுதி மாதமான துல்ஹஜ் பிறை பத்தாம் நாள் இப்பெருநாள் கொண்டாடப்படுகிறது.

இஸ்லாம் விதியாக்கியுள்ள ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையாக சர்வதேச மட்டத்தில் முஸ்லிம்கள் ஓரிடம் திரண்டு மேற்கொள்ளும் வணக்க வழிபாடாக ஹஜ் கடமை அமைகிறது. இப்ராஹீம் (அலை) அவர்களின் வாழ்க்கையில் இடம்பெற்ற மாபெரும் தியாக வரலாற்று நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் இப்பெருநாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

அல்லாஹ்வுக்கு இணை வைக்கும் சிலைகள் செய்யும் குடும்பத்தில் பிறந்த இப்ராஹிம் (அலை) அவர்கள் சிறுவயதிலேயே சிலை வணக்கத்தை விரும்பாது சிந்தனைப் புத்தி ஜீவியாகவே காணப்பட்டார். இவரது கொள்கை மாற்றம் காரணமாக வாலிப வயதில் அப்போதிருந்த நம்ரூத் எனும் அரசனின் கட்டளைப்படி கொழுந்து விட்டெறியும் நெருப்பு கிடங்கிலே தூக்கி எறியப்பட்டார். நம்பிக்கையின் உறுதி காரணமாக அந்தச் சோதனையின் நின்றும் காப்பாற்றப்பட்டு வெற்றி பெற்றார்கள். பின்னர் தனது 80ஆவது வயதில்



கிடைக்கப்பெற்ற அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களையும் அன்பு மனைவி ஹாஜரா (அலை) அவர்களையும் சன சஞ்சாரமற்ற பாலைவனத்தில் விட்டுச் சென்றார்கள். இச்சந்தர்ப்பத்தில் பாலகன் பசி, தாகத்தினால் கதறி அழ, அன்னை ஹாஜராவோ பதறித் துடித்தவராக தண்ணீர் தேடி தவித்தார்கள். குழந்தை இஸ்மாயிலை ஆதி ஆலயமாம் புனித கஃபாவுக்கு அருகே வைத்துவிட்டு, பக்கத்தில் இருக்கும் சபா - மர்வா எனும் மலைக்குன்றுகளுக்கிடையே ஓடியும் குன்றின் மீதேறியும் கண்ணெட்டும் தூரம் வரை நோக்கியவராக தண்ணீர் தென்படாதா? தேடலானார். கானல் நீரைக் கண்டு ஏமாற்றம் தான் அடைந்தார். இறுதியில் கால்களை உதறி அடித்தழும் பாலகனின் பாதம் படும் இடத்திலிருந்து புது ஊற்று நீர் ஒன்று பீறிட்டு எழுந்து வந்தது. மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய ஹாஜரா மண்ணினால் அணை கட்டி நீரைத் தேக்க வைத்தார். தொடர்ந்து வந்த நீரூற்றால் வெள்ளப்பெருக்கு வந்துவிடுமோ என்ற பீதியில் ஹாஜரா நாயகி, ஸம்ஸம் - நீரே நில்லு! நில்லு என்று நீர்ப்பெருக்கைத் தடுத்து நிறுத்தச் செய்தார். இதுவே இன்றும் வற்றாத நீராக ஊற்றெடுத்துக் கொண்டிருக்கிறது. ஸம்ஸம் நீர் என்ற பெயர் பெற்று, உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் எடுத்துச் செல்லப்பட்டு உலகில் மிக மிகப் பெரும்பான்மையோரால் பருகப்படும் நீராகவும் திகழ்கிறது.

இந்தச் சோதனையிலும் இப்ராஹிம் நபி அவர்களின் நம்பிக்கை மேலோங்கியது. அடுத்து இடம்பெற்றதோ மிகவும் உச்சகட்ட ஈமானை - நம்பிக்கையை உரசிப் பார்க்கும் பலப் பரீட்சையாகும். இஸ்மாயில் (அலை) அவர்கள் சிறுவனாக இருக்கும்போது, அவரை அறுத்துப் பலியிட வேண்டும் என்று அல்லாஹ் ஆணையிடுவதாக தந்தை இப்ராஹீம் (அலை) அவர்கள் கனவு காண்கிறார்கள். அக்கனவு உண்மை என்று உறுதியானதும் அல்லாஹ்வுக்காக அதனையும் நிறைவேற்ற துணிந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் இப்ராஹீம் நபியின் ஈமானை- நம்பிக்கையை மாத்திரமல்ல, மனைவி ஹாஜரா, மகன் இஸ்மாயில் (அலை) ஆகியோரதும் நம்பிக்கையிலும் மண்ணை அள்ளிப் போட ஷைத்தான் பகீரதப் பிரயத்தனம் எடுத்தான். அந்தப் பருப்பும் மூவரிடமும் பலிக்கவில்லை. ஷைத்தான் பசப்பு வார்த்தைகள் கூறி மேற்கொண்ட ஒவ்வொரு பிரயத்தனங்களின்போதும் கல்லெறிந்து அவன் விரட்டப்படவே செய்தான். நம்பிக்கையின் பலமே அங்கும் வெற்றி பெற்றது. அறுக்க முனைந்த போதெல்லாம் மகன் அறுபடவே இல்லை. அப்போது அல்லாஹ் செம்மறி ஆடு ஒன்றை அனுப்பி மகனுக்குப் பதிலாக அதனை பலியிடும் படி கட்டளையிட்டான். அதுவே நடந்தேறியது. அதுதான் ஹஜ் கடமையின் ஒரு கிரியையாக ஆடு, மாடு, ஒட்டகை அறுத்து விநியோகிக்கும் குர்பான்- உழ்ஹிய்யா கடமையாக இன்று நிறைவேற்றுவது விதியாக்கப்பட்டிருக்கிறது.

தியாகத்தின் உச்ச - அதி உச்சகட்ட செயற்பாடுகளான மேற்படி நிகழ்வுகளை ஹஜ் கடமையை நிறைவேற்றும் ஹாஜிகள் அதே இடத்திற்குச் சென்று, அதே பாணியில், நினைவுகூரும் வணக்க வழிபாடாக ஹஜ் கடமை அமையப்பெற்றிருக்கிறது.

அத்துடன் சர்வதேச ரீதியான சமத்துவ, சகோதரத்துவ பண்பாட்டின் அதி உச்சகட்ட வெளிப்பாட்டையும் ஹஜ்ஜின்போது காணலாம்.

அரசனும் ஆண்டியும் சரிசமமாக மிகவும் எளிமையான வெண்ணுடையில் (அது இஹ்ராம் உடை என அழைக்கப்படுகிறது) தோன்றும் கண்கொள்ளாக் காட்சியை மக்காவில் காணலாம்.

உலகில் உன்னத நிலையில் வாழ மனிதனை புடம் போடும் வணக்க வழிபாடுகளுடன் கூடிய ஒரு பூரண வாழ்க்கைத் திட்டம் இஸ்லாம் என்பதை அதன் ஐம்பெரும் கடமைகள் உணர்த்தி நிற்பதை காணலாம். அந்த வகையிலே இறுதிக் கடமை ஹஜ்ஜும் அமையப்பெற்றிருக்கிறது. அது அகில உலக முஸ்லிம்களது சர்வதேச மாநாடாகவும் விளங்குகிறது. அல்லாஹ் அக்பர். அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்ந்த்!

ஈத் முபாரக்

## இன்றைய நாளில்...

- 1814 – மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஆறு மதப்பரப்புனர்கள் இலங்கையின் காலி நகரை வந்தடைந்தனர்.
- 1900 – நோபல் பரிசுகளின் நிதிமூலங்களையும் அதன் நிர்வாகத்தையும் "நோபல் அறக்கட்டளை" ஒரு தனியார் நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது.
- 1914 – சைபீரியாவில் கிரிகோரி ரஸ்புடின் மீது கொலை முயற்சி நடந்தது.
- 1975 – ஸ்டீவ் வாஸ்னியாக் முதலாவது ஆப்பிள் கணினியை சோதித்தார்.
- 1995 – அட்லாண்டிக் விண்ணோடம் உருசிய விண்வெளி நிலையம் மீருடன் முதல் தடவையாக இணைந்தது.
- 2007 – ஆப்பிள் நிறுவனம் தனது முதலாவது ஐ-போன் செல்லிடபேசியை அறிமுகப்படுத்தியது.
- 2014 – இஸ்லாமிய அரசு சிரியாவிலும் வடக்கு ஈராக்கிலும் தமது கலீபகத்தை நிறுவியது.



# எசட்லைன் பினான்ஸ் லிமிடட்

2023 மார்ச் 31 திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டின் நிதி நிலை அறிக்கை

| மார்ச் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டின் முக்கிய நிதித் தரவு (கணக்காய்வு செய்யப்பட்டது)<br>ரூபா ஆயிரத்தில் | நடப்பு காலம் 01.04.2022 இலிருந்து 31.03.2023 வரை | % ஆக வருமான வட்டி | முன்னைய காலம் 01.04.2021 இலிருந்து 31.03.2022 வரை | % ஆக வருமான வட்டி |
|---|---|---|---|---|
| வட்டி சார்ந்த வருமானம் | 7,845,085 | 100% | 7,110,323 | 100% |
| வட்டி சார்ந்த செலவீனங்கள் | (4,430,747) | -56% | (1,173,057) | -16% |
| **தேறிய வட்டி வருமானம்** | **3,414,338** | **44%** | **5,937,266** | **84%** |
| வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து இலாபம் (இழப்புகள்). | - | 0% | - | 0% |
| வேறு வருமானம் | 147,141 | 2% | 174,433 | 2% |
| தொழிற்பாட்டு செலவீனங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (2,148,390) | -27% | (1,966,685) | -28% |
| பெறுமதி இழப்பு | (856,984) | -11% | (337,230) | -5% |
| **வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்)** | **556,105** | 7% | **3,807,784** | 54% |
| வரிகள்* | 349,052 | 4% | (1,677,354) | -24% |
| **வரிக்கு பின்னரான இலாபம் (நட்டம்)** | **905,157** | 12% | **2,130,430** | 30% |
| மற்ற முழுமையான வருமானம் | 89,524 | 1% | (10,083) | 0% |
| **மொத்த முழுமையான வருமானம்** | **994,681** | **13%** | **2,120,347** | **30%** |

*மறைமுக வரிகள் (நிதி சேவைகள் மீதான VAT போன்றவை) மற்றும் நேரடி வரிகள் (பெருநிறுவன வருமான வரி) உட்பட

| மார்ச் 31 இல் உள்ள முக்கிய நிதி தரவு (கணக்காய்வு செய்யப்பட்டது)<br>ரூபா ஆயிரத்தில் | 31.03.2023 இன் படி | % ஆக மொத்த சொத்துக்கள் | 31.03.2022 இன் படி | % ஆக மொத்த சொத்துக்கள் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் வங்கி இருப்புக்கள் | 426,093 | 1% | 2,099,532 | 6% |
| அரசு பத்திரங்கள் | 5,232,946 | 15% | 25,674 | 0% |
| தொடர்புடைய தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை | 4,363 | 0% | 42,047 | 0% |
| கடன்கள் (தொடர்புடைய தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை தவிர) | 26,000,289 | 77% | 29,556,637 | 92% |
| பங்கு முதலீடு | 195 | 0% | 195 | 0% |
| சொத்துக்கள் மற்றும் ரியல் எஸ்டேட்டில் முதலீடு | 193,800 | 1% | 231,900 | 1% |
| சொத்து, தொழிற்சாலை, உபகரணங்கள் மற்றும் நிலையான சொத்து | 536,375 | 2% | 75,570 | 0% |
| ஏனைய சொத்துக்கள் | 1,204,060 | 4% | 224,514 | 1% |
| **மொத்த சொத்துக்கள்** | **33,598,121** | **100%** | **32,256,069** | **100%** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 19,805,489 | 59% | 18,057,617 | 56% |
| தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டியவை | 846,793 | 2% | 966,231 | 3% |
| வாடிக்கையாளர்களின் வைப்புக்கள் | 201,383 | 1% | - | 0% |
| ஏனைய கடன்கள் | 507,719 | 1% | 204,104 | 1% |
| ஏனைய பொறுப்புக்கள் | 878,029 | 3% | 1,653,878 | 5% |
| **மொத்த பொறுப்புக்கள** | **22,239,413** | **66%** | **20,881,830** | **65%** |
| **பங்குரிமை மூலதனம்** | | | | |
| நிலையான மூலதனம் | 3,550,000 | 11% | 3,550,000 | 11% |
| நியதிச்சட்ட ஒதுக்கு நிதி | 1,112,085 | 3% | 1,066,827 | 3% |
| பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | 6,610,752 | 20% | 6,757,496 | 21% |
| கிடைக்க கூடிய விற்பனை ஒதுக்கங்கள் | 85,871 | 0% | (84) | 0% |
| **மொத்த பங்குரிமை மூலதனம்** | **11,358,708** | **34%** | **11,374,239** | **35%** |
| **மொத்த பங்குரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | 33,598,121 | 100% | 32,256,069 | 100% |
| ஒரு பங்குக்கான நிகர சொத்து மதிப்பு | 84.79 | | 84.91 | |

குறிப்பு - கூறப்பட்ட தொகை பெறுமதி மற்றும் தேய்மானம் நீங்கலாவையாகும்

## தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள்

| உள்ளடக்கம் | 31.03.2023 இன் படி | | 31.03.2022 இன் படி | |
|---|---|---|---|---|
| **ஒழுங்குப்படுத்தல் மூலதன உள்ளடக்கு விகிதம் (%)** | உண்மையான | தேவையான | உண்மையான | தேவையான |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 29.42% | 8.50% | 27.99% | 7.00% |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 30.37% | 12.50% | 28.99% | 11.00% |
| பொறுப்பு விகிதத்தை வைப்பதற்கான மூலதன நிதி | 5597.71% | 10.00% | N/A | 10.00% |

| உள்ளடக்கம் | 31.03.2023 இன் படி | 31.03.2022 இன் படி |
|---|---|---|
| **கடன் இலாகாவின் தரம்** | | |
| மொத்த நிலை 3 கடன் விகிதம் | 23.95% | 11.10% |
| நிகர நிலை 3 கடன் விகிதம் | 15.28% | 5.15% |
| முக்கிய மூலதன விகிதத்திற்கு நிகர நிலை 3 கடன்கள் | 40.34% | 13.85% |
| நிலை 3 குறைபாடு பாதுகாப்பு விகிதம் | 42.75% | 56.52% |
| மொத்த குறைபாடு பாதுகாப்பு விகிதம் | 12.21% | 9.24% |
| **இலாபத்தன்மை (%)** | | |
| தேறிய வட்டி எல்லை | 10.86% | 19.50% |
| சொத்துக்களிலிருந்ததான வருமானம் (வரிக்கு முன்) | 2.75% | 6.79% |
| பங்கு மூலதனத்திற்கான வருமானம் (வரிக்கு பின்) | 7.96% | 16.63% |
| செலவு மற்றும் வருமான விகிதம் | 60.32% | 32.18% |
| **ஒழுங்குப்படுத்தல் திரவத்தன்மை** | | |
| கிடைக்கக்கூடிய திரவ சொத்துகளின் விகிதம் தேவையான சொத்துகளின் மதிப்பில் ஆக குறைந்தது 100% | 246.01% | 110.63% |
| வெளிப்புற நிதிகளுக்கான திரவ சொத்து | 24.54% | 11.30% |
| **விஞ்ஞாபன தகவல்** | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 55 | 55 |
| வெளிப்புற கடன் மதிப்பீடு | குறிப்பு 1 | N/A |

குறிப்பு 1: நிறுவனம் LFC ஆனதும் வெளிப்புறக் கடன் மதிப்பீட்டைப் பெறுவதற்கான செயல்பாட்டில் உள்ளது.

**உறுதிப்படுத்தல்**

கீழே கையொப்பமிட்டிருக்கும் எசெட்லைன் பினான்ஸ் லிமிடட் இன் இயக்குனர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி, நிதித்தலைவர் மற்றும் இணங்குவிப்பு தலைவர் நாங்கள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவைகளை உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேலே தயாரிக்கப்பட்டுள்ள கூற்று இலங்கை மத்திய வங்கியினால் விபரிக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுக்கு இசைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த அறிக்கைகளில் உள்ள தகவல்கள் உரிமம் பெற்ற நிதி நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

(கையொப்பம்)
அஷான் நிஸ்ஸங்க
**இயக்குனர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**
23.06.2023

(கையொப்பம்)
ரண்டிலு மெண்டிஸ்
**இணங்குவிப்பு தலைவர்**
23.06.2023

(கையொப்பம்)
ரெங்கசாமி ராஜேஷ்குமார்
**நிதித்தலைவர்**
23.06.2023

EY
Building a better working world

Ernst & Young
Chartered Accountants
201, De Saram Place
P.O. Box 101
Colombo 10, Sri Lanka

Tel: +94 11 246 3500
Fax (Gen): +94 11 269 7369
Fax (Tax): +94 11 557 8180
Email: eysl@lk.ey.com
ey.com

CAY/WDPL/TNH/JJ

INDEPENDENT AUDITOR'S REPORT
TO THE SHAREHOLDERS OF ASSETLINE FINANCE LIMITED

Report on the audit of the financial statements

*Opinion*

We have audited the financial statements of Assetline Finance Limited, which comprise the statement of financial position as at 31 March 2023, and the statement of profit or loss, the statement of comprehensive income, statement of changes in equity and statement of cash flows for the year then ended, and notes to the financial statements, including a summary of significant accounting policies.

In our opinion, the accompanying financial statements give a true and fair view of the financial position of the Company as at 31 March 2023 and of its financial performance and its cash flows for the year then ended in accordance with Sri Lanka Accounting Standards.

*Basis for opinion*

We conducted our audit in accordance with Sri Lanka Auditing Standards (SLAuSs). Our responsibilities under those standards are further described in the Auditor's responsibilities for the audit of the financial statements section of our report. We are independent of the Company in accordance with the Code of Ethics issued by CA Sri Lanka (Code of Ethics) and we have fulfilled our other ethical responsibilities in accordance with the Code of Ethics. We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our opinion.

*Responsibilities of management and those charged with governance for the financial statements*

Management is responsible for the preparation of financial statements that give a true and fair view in accordance with Sri Lanka Accounting Standards and for such internal control as management determines is necessary to enable the preparation of financial statements that are free from material misstatement, whether due to fraud or error.

In preparing the financial statements, management is responsible for assessing the Company's ability to continue as a going concern, disclosing, as applicable, matters related to going concern and using the going concern basis of accounting unless management either intends to liquidate the Company or to cease operations, or has no realistic alternative but to do so.

Those charged with governance are responsible for overseeing the Company's financial reporting process.

*Auditor's responsibilities for the audit of the financial statements*

Our objectives are to obtain reasonable assurance about whether the financial statements as a whole are free from material misstatement, whether due to fraud or error, and to issue an auditor's report that includes our opinion. Reasonable assurance is a high level of assurance, but is not a guarantee that an audit conducted in accordance with SLAuSs will always detect a material misstatement when it exists. Misstatements can arise from fraud or error and are considered material if, individually or in the aggregate, they could reasonably be expected to influence the economic decisions of users taken on the basis of these financial statements.

As part of an audit in accordance with SLAuSs, we exercise professional judgment and maintain professional skepticism throughout the audit. We also:

- Identify and assess the risks of material misstatement of the financial statements, whether due to fraud or error, design and perform audit procedures responsive to those risks, and obtain audit evidence that is sufficient and appropriate to provide a basis for our opinion. The risk of not detecting a material misstatement resulting from fraud is higher than for one resulting from error, as fraud may involve collusion, forgery, intentional omissions, misrepresentations, or the override of internal control.

- Obtain an understanding of internal control relevant to the audit in order to design audit procedures that are appropriate in the circumstances, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the Company's internal control.

- Evaluate the appropriateness of accounting policies used and the reasonableness of accounting estimates and related disclosures made by management.

- Conclude on the appropriateness of management's use of the going concern basis of accounting and, based on the audit evidence obtained, whether a material uncertainty exists related to events or conditions that may cast significant doubt on the Company's ability to continue as a going concern. If we conclude that a material uncertainty exists, we are required to draw attention in our auditor's report to the related disclosures in the financial statements or, if such disclosures are inadequate, to modify our opinion. Our conclusions are based on the audit evidence obtained up to the date of our auditor's report. However, future events or conditions may cause the Company to cease to continue as a going concern.

- Evaluate the overall presentation, structure and content of the financial statements, including the disclosures, and whether the financial statements represent the underlying transactions and events in a manner that achieves fair presentation.

We communicate with those charged with governance regarding, among other matters, the planned scope and timing of the audit and significant audit findings, including any significant deficiencies in internal control that we identify during our audit.

Report on other legal and regulatory requirements

As required by section 163 (2) of the Companies Act No. 07 of 2007, we have obtained all the information and explanations that were required for the audit and, as far as appears from our examination, proper accounting records have been kept by the Company.

23 June 2023
Colombo

Partners: H M A Jayesinghe FCA FCMA, R N de Saram ACA FCMA, Ms. N A De Silva FCA, W R H De Silva FCA ACMA, Ms. Y A De Silva FCA, Ms. K R M Fernando FCA ACMA, N Y R L Fernando ACA, W K B S P Fernando FCA FCMA, Ms. L K H L Fonseka FCA, D N Gamage ACA ACMA, A P A Gunasekera FCA FCMA, A Herath FCA FCMA, D K Hulangamuwa FCA FCMA LLB (London), Ms. G G S Manatunga FCA, A A J R Perera ACA ACMA, Ms. P V K N Sajeewani FCA, N M Sulaiman ACA ACMA, B E Wijesuriya FCA FCMA, C A Yalagala ACA ACMA

Principals: W S J De Silva BSc (Hons)-MIS MSc-IT, G B Goudian ACMA, D L B Karunathilaka ACMA, Ms. P S Paranavitane ACA ACMA LLB (Colombo), T P M Ruberu FCMA FCCA

A member firm of Ernst & Young Global Limited

ASSETLINE
Assetline Finance Limited

எசட்லைன் பினான்ஸ் லிமிடட், இல. 120-120A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.
0114 700 100 www.assetlinefinance.lk info@assetline.lk

# குடித்தொகை வீழ்ச்சி காரணமாக எதிர்கால சந்ததியினர் பாரிய சவால்களை எதிர்கொள்வர்

## ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன்

சாவகச்சேரி நிருபர்



குடித்தொகை வீழ்ச்சி காரணமாக எமது எதிர்கால சந்ததியினர் பாரிய சவால்களை எதிர்கொள்ளவிருக்கின்றனர் – என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி ரி.பி.ஹன்ற் ஓவிய கூடத்தின் ஆண்டுவிழா மற்றும் கண்காட்சி நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்படி விடயத்தை தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ரி.பி.ஹன்ற் ஓவிய கூடம் மாணவர்களுக்கு ஓவியத்தை மட்டுமல்லாது, ஒழுக்கத்தையும் கற்றுக்கொடுக்கின்றது.

இன்று எமது சமூகத்தில் பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகிறோம். குறிப்பாக, எமது அடுத்த சந்ததியின் எதிர்காலம் கடும் நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. எமது குடித்தொகை மிக மிக குறைந்து செல்வதே இந்த நெருக்கடி நிலைமைக்குக் காரணம் எனலாம்.

தென்மராட்சியிலுள்ள ஆரம்பப் பிரிவு மாணவர்களின் தொகையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கடந்த ஆண்டுக்கு முன்னைய ஆண்டில் பாடசாலைகளில் இணைந்த ஆரம்பப் பிரிவு மாணவர்களின் தொகையை விட கடந்த ஆண்டு ஆரம்பப் பிரிவில் இணைந்த மாணவர் தொகை 105 ஆல் குறைவடைந்துள்ளது.

60 கிராம அலுவலர் பிரிவுகளைக்கொண்ட தென்மராட்சியிலேயே இந்த நிலைமையென்றால் ஏனைய பிரதேசங்களின் நிலைமையை பற்றி உணர்ந்துகொள்ள முடியும்.

வடமாகாணத்தில் 194 பாடசாலைகள் மாணவர் வரவு இன்மையால் மூடப்பட்டதாக வடமாகாண ஆளுநர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இன்று வீடுகளில் குழந்தைகள் ஒற்றை எண்ணிக்கைக்கு வந்துவிட்டனர். அடுத்த சந்ததிக்கு சித்தப்பா, சித்தி, பெரியம்மா மற்றும் பெரியப்பா என உறவுகள் இல்லாத நிலையே உருவாகி வருகின்றது.

ஒற்றை எண்ணிக்கையில் இருக்கும் குழந்தைகளின் எதிர்காலம் தொடர்பாக நாம் அனைவருமே அக்கறை -கரிசனை உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

குறிப்பாக, தாய்மார்களின் பரீட்சை என வர்ணிக்கப்படும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை குழந்தைகளுக்கு அதிக அழுத்தத்தைக் கொடுக்கின்றது. அந்த அழுத்தங்களிலிருந்து குழந்தைகள் விடுபட கலை சார்ந்த விடயங்களில் அவர்களை ஈடுபடுத்த வேண்டியது இன்றியமையாத ஒன்று - அவசியம் எனலாம்.

ஒரு ஓவியம் ஆயிரம் சொற்களுக்கு சமமானது. எண்ணங்களைப் பிரதிபலிக்கும் ஆற்றல் இந்த ஓவியங்களுக்கு உண்டு.

எமது குழந்தைகள் நாளைய தோட்டத்துப் பூக்கள். அவர்களே நாட்டின் எதிர்காலம். அவர்களை சிறந்த முறையில் ஒழுக்கம் நிறைந்தவர்களாக வளர்த்தெடுக்க வேண்டியது அனைவரதும் கடமை. அந்தக் கடமையை ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தினர் சிறந்த முறையில் நிறைவேற்றி வருவதை உணர முடிகின்றது – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## பல மோட்டார்சைக்கிள் திருட்டுடன் தொடர்புடைய ஒருவர் யாழில் கைது!

யாழ். நிருபர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல மோட்டார்சைக்கிள் திருட்டுகளுடன் தொடர்புடைய ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கைது நடவடிக்கையின்போது திருடப்பட்ட மோட்டார்சைக்கிள்களில் ஒன்று பாழடைந்த கட்டடத்தில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (25) யாழ்ப்பாணம் சிவன் கோவிலுக்கு வழிபடச் சென்றவர் வீதியோரமாக மோட்டார்சைக்கிளை தரித்துவிட்டு தலைக்கவசத்தை விட்டுச் சென்றுள்ளார்.

வழிபாடு முடித்து வீடு திரும்ப முற்பட்டபோது மோட்டார்சைக்கிளை காணவில்லை.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பொலிஸார் பண்டத்தரிப்பைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர். பாழடைந்த கட்டடத்துக்குள் மறைத்துவிடப்பட்டிருந்த திருடிய மோட்டார்சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றினர். கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் திருடப்பட்ட மோட்டார்சைக்கிள் மட்டுமன்றி பளை, கொடிகாமம் பகுதிகளிலும் பல மோட்டார்சைக்கிள்கள் திருடப்பட்டமை குறித்து சந்தேக நபருக்கு தொடர்புள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேக நபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

### யாழில் கையடக்கத் தொலைபேசி

## திருடிய குற்றத்தில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகில் தொலைபேசி திருத்தகமொன்றில் கையடக்கத் தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் இளைஞனொருவர் நேற்று முன்தினம் (27) செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருத்தகத்திற்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்றிருந்த இளைஞன் அங்கிருந்த கையடக்கத் தொலைபேசி ஒன்றை திருடிச் சென்றுள்ளார்.

அதனை கடை உரிமையாளர் கடையில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கெமராவில் கண்டதையடுத்து , கண்காணிப்பு கெமரா வீடியோ பதிவுடன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வீடியோ பதிவு ஊடாக இளைஞனை அடையாளம் கண்டு கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனிடம் விசாரணைகளை முன்னெடுத்தபோது, திருடிய கையடக்கத் தொலைபேசியை தான் 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்ததாகவும் வாங்கியவரை தனக்கு அடையாளம் தெரியாதெனவும் கூறியுள்ளார்.

குறித்த நபரிடம் கையடக்கத் தொலைபேசியை வாங்கிய நபர் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள நபரிடமும் தொடர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் கடல்நீரில் விளக்கெரிக்கும் வைபவம் ஆரம்பம்

யாழ். நிருபர்



வரலாற்றுப் பிரசித்திபெற்ற செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆடி குளிர்த்தி பொங்கலை முன்னிட்டு முருகப்பெருமானுக்கு கடல்நீரில் விளக்கு வைக்கும் வைபவம் காலங்காலமாக இடம்பெற்று வருகின்றது.

இவ்வருட ஆடி குளிர்த்தி பொங்கலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரான காலத்தில் முருகப்பெருமானுக்கு விசேட பூசைகள் நடத்தப்பட்டு இரவு 12 மணியளவில் ஆலய பூசகர்கள் பெருங்கடலும் தொண்டமானாறு வாவியும் இணையும் இடத்துக்குச் சென்று வெள்ளைத் துணியால் வாய் கட்டப்பட்ட மண் குடத்தில் கடல்நீரை எடுத்து வந்து விசேட பூஜை வழிபாடுகள் நடத்துவர்.

அதன்பின்னர் ஆலய மூலஸ்தானத்தில் வைத்து எதிர்வரும் திங்கட்கிழமை வரையான ஒரு வார காலத்துக்கு கடல்நீரில் விளக்கெரித்து பொங்கல் பொங்கும் சம்பிரதாயபூர்வ வைபவம் இடம்பெறவுள்ள நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு பெருங்கடலுக்குச் சென்று கடல்நீரை எடுத்துவந்து விளக்கு எரிக்கும் வைபவம் ஆரம்பமாகியுள்ளமை சிறப்பம்சமாகும்.

# மறவன்புலோ கடற்கரை மயானப் பகுதியில் Sun-90 ஜெல் பக்கெட்டுகள் மீட்பு

சாவகச்சேரி நிருபர்



சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மறவன்புலோ கடற்கரையை அண்மித்த மயானப் பகுதியில் நேற்று முன்தினம் (27) செவ்வாய்க்கிழமை பிற்பகல் தடைசெய்யப்பட்ட Sun-90 ஜெல் பக்கெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

தடை செய்யப்பட்ட Sun-90 என்ற மீன்களைப் பிடிக்க பயன்படுத்தப்படுகின்ற தடைசெய்யப்பட்ட ஜெல் பக்கெட்டுகள் இவ்வாறு சாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மறவன்புலோ கடற்கரைப் பகுதியில் மீன்பிடிக்க பயன்படுத்தப்படுகின்ற தடைசெய்யப்பட்ட ஜெல் பக்கெட்டுகள் மறைத்துவைக்கப்பட்டிருப்பதாக இராணுவத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சாவகச்சேரி பொலிஸாரோடு இணைந்து இராணுவத்தினர் தடைசெய்யப்பட்ட பக்கெட்டுகளை மீட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் எவரும் கைதாகாத நிலையில் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



ஹல்துமுல்ல நீட்வூட் நாக காளியம்மன் ஆலய பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நேற்று (28) நடைபெற்றது. இதன்போது இடம்பெற்ற பூஜைகளில் பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் கலந்துகொண்டிருப்பதையும் கும்ப பூஜை மற்றும் கும்பாபிஷேகம் என்பன இடம்பெறுவதையும் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டிருப்பதையும் படங்களில் காணலாம். (பதுளை நிருபர்)

# இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தில் சிறுத்தையின் சடலம் மீட்பு

தலவாக்கலை நிருபர்



அட்டன், நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தில் நேற்றுமுன்தினம் (27) மர்மமான முறையில் உயிரிழந்த சிறுத்தையொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்டத் தொழிலாளியொருவர் வழங்கிய தகவலுக்கமைய, பொலிஸாரும் நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகளும் சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தபோது தோட்டத்திலுள்ள தேயிலை புதருக்கருகில் உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிறுத்தை உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. சிறுத்தையின் சடலத்தை ரந்தெனிகல கால்நடை வைத்திய பிரிவுக்கு கொண்டுசெல்ல நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் வலப்பனை மக்களுக்கு அநீதி: பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மக்கள் பாரிய ஆர்ப்பாட்டம்

ஆ.ரமேஸ்





அரசாங்கத்தினால் வறிய மக்களின் வாழ்வாதார எழுச்சிக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் வலப்பனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 125 கிராமசேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து நில்தண்டாஹினயில் அமைந்துள்ள வலப்பனை பிரதேச செயலக முன்றிலில் நேற்று (28) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நலன்புரித் திட்டத்தில் வழங்கப்படவிருக்கும் பணக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடைய வலப்பனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட வலப்பனை, நில்தண்டாஹின, இராகலை, உடப்புஸ்ஸலாவை, ஹைபொரஸ்ட் பிரதேசங்களை உள்ளீர்த்த 125 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள பயனாளிகள் பலர் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து பிரதேச மக்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கை நில்தண்டாஹினயில் அமைந்துள்ள வலப்பனை பிரதேச செயலக நுழைவாயிலில் சுமார் இரண்டு மணிநேரம் முன்னெடுக்கப்பட்டது.

வலப்பனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 125 கிராமசேவகர் பிரிவுகளில் 'அஸ்வெசும' நலன்புரித்திட்டத்தில் பயன் பெறக்கூடியவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு வெளியாகியுள்ள பெயர்ப்பட்டியலில் நலன்புரித் திட்டத்தில் வழங்கப்படும் நிதியைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையோரின் பெயர்கள் அதிகாரிகளினால் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும், வெளியாகியுள்ள பெயர்ப் பட்டியலில் அப்பெயர்கள் இல்லையெனக்கூறியே தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

# அஹதிய்யா பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்

## முன்னாள் உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை பிரதி அதிபர் தெரிவிப்பு

உக்குவளை செய்தியாளர்



மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் அஹதிய்யா போன்ற அறநெறி பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என உக்குவளை அஹதிய்யா பாடசாலை அதிபரும் முன்னாள் உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை பிரதி அதிபருமான எம்.எஸ்.ஹலீம்தீன் ஹாஜி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாடங்கள் மாணவர்களை சமய ரீதியில் நல்வழிப்படுத்துவதாக இருக்கின்றன. இதன் பாடத்திட்டம் கல்வியமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டதாகும். இதில் இடைநிலைப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை மற்றும் தர்மாச்சாரிய பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

இதன் உயர்தரப் பரீட்சையினதும் தர்மாச்சாரியார் பரீட்சைகளின் பெறுபேறுகள் மாணவர்களது பல்கலைகழக மற்றும் கல்வியியற் கல்லூரியின் பிரவேசத்துக்கு ஒரு தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அஹதிய்யா பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் நல்ல தகுதிகளைக் கொண்டுள்ளனர். சேவைமனப்பாங்கில் அவர்கள் பணிபுரிகின்றனர் எனினும், அவர்களது நலனுக்காக சீருடைகளுடன் காகிதாதிகள் திணைக்களத்தினால் வருடத்துக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

மாத்தளை மாவட்டத்தில் குறிப்பாக, உக்குவளை அஹதிய்யா வளர்ச்சியடையும் ஒரு பாடசாலை எனலாம். இதில் கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கான திணைக்கள சிறந்த பெறுபேறு சான்றுகளும் நாம் வழங்கியுள்ளோம்.

இவ்வாறிருக்கின்றநிலையில், முஸ்லிம்களுக்கு அஹதிய்யா போன்று இந்துக்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட 'அறநெறி' பாடசாலை , சிங்கள மக்களுக்கு 'தஹம் பாசல', கிறிஸ்தவர்களுக்கு "மறைக் கல்வி" என நடத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பல இடங்களில் எமது அஹதிய்யா பாடசாலைகள் இயங்காதிருப்பதாகவும் அறிய முடிகிறது. இதற்குக் காரணம் இப்பாடசாலைகளின் முக்கியத்துவத்தை மாணவர்களும் பெற்றோர்களும் உணரவில்லை.

இன்றைய சூழலில் மாணவர்கள், இளைஞர்கள் வழிதவறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருப்பதையும் பாதிக்கப்பட்டவர்களையும் ஊடகங்கள் வாயிலாக அறிகையில் கவலையடைகிறோம். நாம் கல்வி கற்றகாலங்களில் பெற்றிருந்த குறைந்த வசதியில் பாடசாலையில் கற்று நல்ல நிலைமைக்கு வரமுடிந்தது. இந்நிலைமைக்குக் காரணமான எமது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை என்றும் கௌரவமளித்து வருகிறோம். மாணவர்கள் தாம் கற்கும் காலம் வாழ்வில் ஒருமுறைதான். அதுவும் பொற்காலம் என்பார்கள். அதனை எண்ணி மாணவர்கள் பாடசாலைக் கல்வியிலும் இதர அஹதிய்யா போன்ற அறநெறி பாடசாலைகள் மூலமாக கற்று சமய ஒழுக்கப் பண்பாடுகளுடன் வாழ்ந்து பயன்பெற வேண்டும். அத்துடன், இயங்காதுள்ள அஹதிய்யா பாடசாலைகளை இயங்க வைக்க ஊரிலுள்ள வசதிபடைத்தவர்கள், சமூக ஆர்வலர்கள் முன்வரவேண்டும். பெற்றோர்களும் இதுவிடயத்தில் கரிசனை காட்டுவது அவசியமாகும் - என்றார்



# புனித ஹஜ்ஜுப் பெருநாள் சிறப்பிதழ்





## உடல்,உள ஆரோக்கியத்துக்கு இறைவனிடம் பிரார்த்திப்போம்

### அமைச்சர் அலி சப்ரி

தியாகத்திருநாளாம் புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து இஸ்லாமியர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் என அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஹஜ்ஜின் சமயச் சடங்குகளில் பங்குபெறும் இச்சந்தர்ப்பத்தில் அனைவரும் உடல், உள ஆரோக்கியமுள்ளவர்களாக வாழ்வதற்கு இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஹஜ் யாத்திரை இஸ்லாத்தின் கட்டாய மத நடைமுறையின் நிறைவைக் குறிக்கின்றது. அமைதி மற்றும் சகோதரத்துவத்துடன் ஒன்றுபட்ட அனைத்து இஸ்லாமிய யாத்திரிகர்களின் உலகளாவிய கூட்டம் எனவும் இதனைக் குறிப்பிடலாம்.

நம்பிக்கை, நோன்பு, ஏழைகள் மீது இரக்கம் காட்டுதல், பிரார்த்தனை மற்றும் புனித யாத்திரை ஆகியவை எவ்வாறு மனிதகுலத்துக்கும் அல்லாஹ்வுக்கும் இடையிலான உன்னதமான உறவுகளை நிரூபிக்க ஒன்றிணைகின்றன என்பதை எடுத்துக்காட்டும் ஒரு முக்கியமான சந்தர்ப்பம் இதுவாகும். ஹஜ் பண்டிகையானது சிக்கலான உலகில் மனிதர்களுக்கு இடையேயான பிணைப்பை எடுத்துக்காட்டுகின்றது.

உலகம் முழுவதிலுமிருந்தும் வரும் இஸ்லாமிய யாத்திரிகர்களின் இனம் அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் இறைவனைப் போற்றும் இப் பண்டிகை, ஏனைய மதங்களைப் பின்பற்றுபவர்களுடன் அமைதியாகவும் இணக்கமாகவும் வாழ்வதற்கான படிப்பினையாகும் என நான் நம்புகின்றேன்.

அனைத்து முஸ்லிம்களுக்கும் தியாகத் திருநாள் நல்வாழ்த்துக்கள்.



## நாகரிகங்களின் தோற்றுவாய்க்கு வித்திட்டவர் இறைத்தூதர் இப்ராஹிம்

### பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன்

உயரிய இலட்சியங்களை வெல்வதற்காக இறைத்தூதர் இப்ராஹிமின் குடும்பத்தினர் செய்த தியாகங்கள், சவால்களை எதிர்கொள்வதற்கான தைரியங்களைத் தருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இறைத்தூதர் இப்ராஹிமின் இலட்சியங்கள் மனித வர்க்கத்துக்கு சிறந்த வழிகாட்டல்களாக உள்ளன. இடப்பெயர்வும் தியாகமும் என மிகப் பெரிய சவாலை வெற்றிகொண்ட நாகரிகங்களின் நாயகனாகவே இறைத்தூதர் இப்ராஹிம் திகழ்கிறார்.

ஏகத்துவத்தை நிலைநிறுத்த அவர் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் தியாகங்களை யூத மற்றும் கிறிஸ்தவ மதங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இஸ்லாம் இவரது குடும்பத் தியாகங்களை மார்க்கமாக்கி, ஹஜ்ஜை புனித கடமையாக்கியுமுள்ளது.

ஒரு குடும்பத்தின் முன்மாதிரிகள், உலகில் பல நாகரிகங்களையே தோற்றுவித்திருக்கின்றன. இத்தகைய குடும்பத்தினராக வாழ்வதற்கு நாம் இந்நாளிலிருந்தாவது முயற்சிக்க வேண்டும். உழ்ஹிய்யா கடமையாக்கப்பட்டுள்ள நாட்களில் முஸ்லிம்கள் நடந்துகொள்ளும் விதம் ஏனைய சமூகத்தினருக்கு முன்மாதிரியாக அமையட்டும்.

மனித வாடையே இல்லாத பண்டைய காலத்து மக்கா பாலைவனத்தில் அன்னை ஹாஜராவும் பாலகர் இஸ்மாயிலும் கற்றுக்கொண்டவை ஏராளம். இவர்களது தைரியம்தான் இன்று நாகரிகமாக பரிணமித்துள்ளது. இறைவனின் ஏவல்களை எடுத்தியம்பிய இக்குடும்பத்தவர்களின் பக்குவம் வாழ்நாள் வரலாற்றுச் சான்றாகி உள்ளது."



## நிம்மதியான வாழ்வுக்கு அனைவரும் பிரார்த்திப்போம்

### பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்

புனித ஹஜ்ஜுப் பெருநாளை இன்று கொண்டாடும் முஸ்லிம் சகோதரர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் சகலரும் தேக ஆரோக்கியத்துடனும் மன நிம்மதியுடனும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள புனித ஹஜ்ஜுப்பெருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களிடையே ஒற்றுமை புரிந்துணர்வு நிலையாக ஏற்பட வேண்டும். சகலருக்கும் நிம்மதியான சந்தோஷமான வாழ்க்கை அமைய இத்திருநாளில் முஸ்லிம்கள் பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும். அல்லாஹ்வை முன்னிறுத்தி பல தியாகங்களைச் செய்து இன்று பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கும் எனது இனிய பெருநாள் வாழ்த்துக்கள்.

நாடு வளர்ச்சியடைய வேண்டுமாயின் நிலையான சமாதானம் இருக்க வேண்டும். அதில் இன ஒற்றுமை என்பது விசேட அம்சமாகும். இஸ்லாம் சமாதானத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்துகின்றது. அதற்கான நாளாக இன்றைய தினத்தை அமைத்துக் கொள்வோம். உலகை அச்சுறுத்தும் சகல தீங்குகளிலிருந்தும் எம்மைப் பாதுகாக்க சகலரும் பிரார்த்திப்போம். நிலையானதும் ஸ்திரமானதுமான பொருளாதாரத்தை இலங்கை தேசம் அடைந்து முன்னேற்றமடைவதற்கு தியாகத்தை நினைவுகூரும் இந்த புனித நாளில் இறைவனிடம் கையேந்துவோம்.



## தியாகங்கள் செய்து இறையருள் பெறுவோம்

### பாராளுமன்ற உறுப்பினர் தௌபீக்

இறைத்தூதர் இப்ராஹிம் நபியின் வாழ்வில் நடந்த தியாகத்தை வரலாறு நெடுகிலும் நினைவுகூரப்படுகின்ற தினமாக இன்றைய தினம் காணப்படுகிறது. இந்நிலையில், புனித ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடும் அனைத்து உறவுகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்தார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இறைத்தூதர் இப்ராஹிம் நபியின் துணிச்சல் மிக்க தியாகமே சத்தியத்தை இவ்வுலகில் நிலைக்கச் செய்துள்ளது. அவர்களிடமிருந்து கற்ற அர்ப்பணிப்பு, தியாகம், பொறுமை மற்றும் சத்தியத்துடன் எமது சமூகம் இயங்கவேண்டும்.

இறைத்தூதர் இப்ராஹிம் நபியின் அளப்பரிய தியாகங்களை நினைவுகூருவதற்காக கட்டமைக்கப்பட்ட இஸ்லாத்தின் இறுதிக் கடமையான ஹஜ் பல படிப்பினைகளைக் கொண்ட ஒரு வணக்க வழிபாடாகும். எம்மால் முடியுமானவர்கள் ஹஜ் மற்றும் உழ்ஹிய்யா போன்றவற்றை நிறைவேற்றி இறையருளைப் பெற்றுக்கொள்வோம்.

இந்நன்னாளில் உலகளாவிய ரீதியில் குறிப்பாக, எமது நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து நெருக்கடிகளும் சோதனைகளும் நீங்கி எல்லா இன மக்களும் ஆரோக்கியத்துடனும் ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் வாழவும் வருங்காலம் இருள் நீங்கி ஒளிமயமாக அமைந்திடவும் பிரார்த்திக்கின்றேன்.



## தியாகத் திருநாள் கற்றுத்தரும் பாடங்களை கடைப்பிடிப்போம்

### ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில்

இறை கட்டளைகளுக்கு அடிபணிந்து இன்றைய தினம் தியாகத் திருநாளாம் புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் மற்றும் உலகவாழ் அனைத்து இஸ்லாமிய உறவுகளுக்கும் புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நபி இப்ராஹிம் (அலை) அவர்களினதும் அன்னாரது குடும்பத்தாரதும் தியாகங்களை இத்திருநாள் எமக்கு நினைவுபடுத்துகிறது. அக்குடும்பத்தினரின் தியாகங்கள் முழு மனித சமூகத்துக்கும் சிறந்த முன்மாதிரியாகும். தனிமனிதர்களின், குடும்பங்களின் மற்றும் சமூகங்களின் தியாகங்கள் மூலமே ஒரு நாடு வெற்றி இலக்கை அடைய முடியும். இஸ்லாம் தியாகங்களின் ஊடாகவே வாழ்வில் வெற்றியடைய முடியுமென்பதைப் போதிக்கின்றது. இந்நெருக்கடியான காலத்தில் நாட்டினதும் சமூகத்தினதும் நன்மைக்காக தன்னுடைய தனிப்பட்ட ஆசைகளை அர்ப்பணித்து மற்றவர்களுடைய தேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

அதேநேரம், தியாகத் திருநாள் கற்றுத்தரும் தியாக மனப்பாங்கை எமது வாழ்க்கையில் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சமாதானமும் ஐக்கியமும் மலர துணைபுரிய வேண்டும். நாடு என்ற ரீதியில் நாம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகள் நீங்கி, சுபீட்சமான வாழ்வு மலரவேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் புனித ஹஜ்ஜுப் பெருநாள் நல்வாழ்த்துக்கள் ஈத் முபாரக்.



## தியாகத் திருநாள் வாழ்த்துக்கள்

### இலங்கைக்கான சவூதி தூதுவர்

தியாகத் திருநாளை இன்று கொண்டாடும் அனைத்து இஸ்லாமியர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன் என இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டுத் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி தெரிவித்துள்ளார்.ஹஜ் பெருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இறை இல்லமாகிய புனித கஃபதுல்லாஹ்வில் யாத்திரிகர்கள் ஒன்றுகூடியிருக்கிறார்கள். அவர்களது நற்செயல்களை ஏற்று அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன் அவர்களது சிறந்த தேகாரோக்கியத்துக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன். இந்த ஆண்டு ஹஜ் செய்ய எண்ணிய மற்றும் முடியாத அனைவருக்கும் அவர் மகத்தான வெகுமதிகளை வழங்குவாராக.

இலங்கையில் இன ஐக்கியமும் சுபீட்சமும் மலர்ந்து நாடு பல்வேறு துறைகளிலும் வெற்றிநடை போடுவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன். ஈத் முபாரக்!



## ஹஜ்கற்றுத்தந்த பாடங்களை கடைப்பிடித்தொழுக உறுதிபூணுவோம்

### கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் றகீப்

ஹஜ் கற்றுத்தருகின்ற பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம், அர்ப்பணிப்பு போன்ற வற்றை எமது வாழ்வில் கடைப்பிடித்தொழுக திடசங்கற்பம் பூணுவோம் என கல்முனை மாநகர முன்னாள் முதல்வர், சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள புனித ஹஜ்ஜுப்பெருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஹஜ் கடமை என்பது முஸ்லிம்களிடையே எவ்வித பேதமுமில்லை என்கிற மிகப்பெரும் தத்துவத்தை உணர்த்துவதுடன் நமது தனிப்பட்ட அபிலாஷைகளை முற்றாக புறமொதுக்கிவிட்டு இறைவனுக்கு அடிபணிதல் எனும் கொள்கையை மாத்திரம் கடைப்பிடிக்கின்ற இஸ்லாமியர்களாக, ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.

எமக்குள் பலமாக இருக்க வேண்டிய ஐக்கியத்தை தொலைத்து விட்டு கருத்து முரண்பாடுகளினாலும் பிளவுகளினாலும் எமது நாட்டில் மாத்திரமல்லாமல் உலகளாவிய ரீதியிலும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அழுத்தங்களுக்கும் முகம்கொடுத்து அல்லலுறுகின்ற எமது சகோதரர்களின் நிம்மதியான வாழ்வுக்காக இப்புனித திருநாளில் எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திப்போம். மேலும், இன்று ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்ற அனைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஈத்முபாரக்.



## இஸ்லாமிய சந்ததிகள் உருவாவதற்கு அடித்தளமிட்டவர் இறைத்தூதர் இப்ராஹிம்

### கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர்

இஸ்லாமியச் சிந்தனைகளின் தோற்றுவாயாக இறைத்தூதர் இப்ராஹிமின் தியாகம் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் துணிச்சல்கள் விளங்குவதாக, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது,

ஏகத்துவ மார்க்கத்தை எடுத்தியம்பிய இறைத்தூதர் இப்ராஹிம்(அலை) சகல சமூகங்களையும் நல்வழிப்படுத்த உழைத்த உத்தமர். சிலை வணக்கத்தில் மூழ்கியிருந்த மக்களுக்கு ஏகத்துவ வழிகாட்டல்களை எடுத்துரைத்து சொர்க்க வாசல்களைத் திறந்தவரும் இவரே! வழி கேடர்களின் வம்புகளை பொறுமையாலும் அல்லாஹ்வின் உதவியாலும் சகித்துக் கொண்டார். இதனால் "கலீலுல்லாஹ்" அல்லாஹ்வின் பிரதிநிதி என சிறப்புப் பெயர் பெற்றார்.

தள்ளாத வயதில் தனக்கு கிடைத்த புதல்வனை அல்லாஹ்வுக்காக அறுத்து பலியிடத் துணிந்த அவரது இறை விசுவாசமும் தியாகமுமே இஸ்லாத்தின் இறுதிக்கடமையானது. சிறந்த நாகரிகத்துக்கும் மனித மோட்சத்துக்கும் இறைத்தூதர் இப்ராஹிம்(அலை) உழைத்ததை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். இதேபோல், அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி,புனித ஹஜ்ஜுக்காக அவனின் இல்லமான கஃபாவில் கூடியுள்ள சகல முஸ்லிம்களதும் ஆகுமான தேவைகளை அல்லாஹ் பொருந்திக் கொள்ளட்டும்.

தியாகத்தை அடிப்படையாகக் கொண்டதும் மகத்துவமிக்கதுமான ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடி மகிழும் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களுக்கும் ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.



## தியாகங்கள் வாழ்க்கையில் செயலுருப்பெறவேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

தியாகத்தை எடுத்தியம்பும் இப்புனித தினத்தில் இஸ்லாமியசகோதரர்களுக்கு ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு அவர்விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நபி இப்றாஹிம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கமைய அவரது ஒரே புதல்வரான நபி இஸ்மாயில் (அலை) அவர்களை தியாகம் செய்ய முயன்ற தியாகம் மிகு சம்பவம் நினைவு கூரப்படும் இச் சந்தர்ப்பத்தில் இஸ்லாமியர்கள் தியாக உணர்வுடன் செயற்பட வேண்டும்.

ஹஜ் யாத்திரையானது உலகுக்கு சமாதானத்தை எடுத்துக் காட்டுகிறது. அதேபோல் தியாகத்தை நினைவுபடுத்துகிறது. இந்நிலையில், தியாகங்களை வருடாவருடம் நினைவுபடுத்துதவதில் மட்டும் இஸ்லாமியர்களின் கடமை நீங்கி விட்டதாகக் கருத முடியாது. அத்தியாகங்கள் எமது வாழ்க்கையிலும் செயலுருப்பெறவேண்டும். ஈத் முபாரக்.



## நெருக்கடிகள் நீங்க இறைவனைப் பிரார்த்திப்போம்

### பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம்

சமூக, சமய, பொருளாதார, அரசியல் ரீதியிலான பல்வேறு விதமான நெருக்கடிகள் தோன்றியுள்ள இக்காலகட்டத்தில் அவற்றிலிருந்து விடுபடுவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்திப்போமாக என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள புனித ஹஜ்ஜுப்பெருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் இறைவனால் அனுப்பப்பட்ட தூதர்களான நபி இப்ராஹீம் (அலை) மற்றும் அவரது புதல்வர் நபி இஸ்மாயில் (அலை )ஆகியோரின் அளப்பரிய தியாகத்தை நினைவுகூரும் வகையில் உலகளாவிய முஸ்லிம்கள் ஆண்டுதோறும் புனித ஹஜ் யாத்திரையை மேற்கொண்டு வருகின்றனர்.

உலகெங்கிலும் யுத்தங்களாலும் அனர்த்தங்களாலும் பயங்கரமான நோய்களாலும் மக்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ள சூழ்நிலையில், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் முஸ்லிம்களும் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் பெருநாட்களைச் சந்திக்க நேர்ந்திருப்பது கவலைக்குரியது.

அல் குர்ஆனையும் நபிகள் நாயகம் முஹம்மத்( ஸல்) அவர்களது வாழ்க்கை வழிமுறைகளையும் பின்பற்றியொழுகி,சன்மார்க்கக் கடமைகளை சிறப்பாக அனுசரிப்பதோடு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் நிலவுவதற்கும் அதனூடாக நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கும் அர்ப்பண சிந்தையோடு செயற்படுவதற்கு தியாகத் திருநாளில் உறுதி பூணுவோமாக.

அனைவருக்கும் ஈதுல் அழ்ஹா வாழ்த்துக்கள்- ஈத் முபாரக் !



## தியாகத்துக்கான சன்மானம் புனித ஹஜ்ஜுப் பெருநாள்

### கலாநிதி அஸ்வர் அஸாயிதீன்

தியாக சீலர் நபி இப்ராஹிம் (அலை) அவரது அருந்தவப் புதல்வர் நபி இஸ்மாயில் (அலை) மற்றும் அன்னை ஹாஜரா நாயகி (ரலி) ஆகிய மூன்று தியாக சீலர்களும் அல்லாஹ்வின் ஆணையை சிரமேற்கொண்டு செயற்பட்டதை புனித ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு உணர்த்துகிறது.எனவே, இந்த தியாக சீலர்களின் தியாக உணர்வு எம்மிலும் ஏற்பட வேண்டும் என அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாயிதீன் (அல்-அஸ்ஹரி)தெரிவித்துள்ளார்.

ஹஜ்ஜுப்பெருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தியாகம்,ஒற்றுமை,விட்டுக் கொடுப்பு, சகோதரத்துவம் என்பவற்றையே புனித ஹஜ்ஜுப்பெருநாள் உணர்த்துகிறது.

அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து தனது புதல்வரான நபி இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட முன்வந்த நபி இப்ராஹிம் (அலை) அவர்களின் உன்னத தியாகம் முழு உலகுக்கும் நினைவூட்டப்படுகிறது.இவர்களின் தியாகம் உலகம் அழியும் வரை நினைவுகூரப்படும்.இத் தியாகத்துக்கான சன்மானம் புனித ஹஜ் பெருநாளாகும்.

ஹஜ் யாத்திரையை நிறைவேற்ற புனித மக்காவில் கூடியுள்ள ஹஜ்ஜாஜிகளின் ஹஜ் கடமையை அல்லாஹ் அங்கீகரிப்பானாக.

அவர்கள் புனித கஃபாவில், புனித மதீனாவில் எமக்காகவும்,உலக இஸ்லாமியர்களுக்காகவும் புரியும் பிரார்த்தனைகளை அல்லாஹ் ஏற்றுக்கொள்வானாக.



## சகிப்புத் தன்மையை கடைப்பிடித்து நடப்போம்

### மு.கா.பதில் பொருளாளர் யஹியாகான்

உலகவாழ் முஸ்லிம்களின் அனைத்து பிரச்சினைகளும் நீங்கி - அனைத்து சவால்களையும் தியாக சிந்தையோடு எதிர்கொள்ளும் ஆற்றலை அல்லாஹ் வழங்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போம் என முஸ்லிம் காங்கிரஸின் பதில் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள பெருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இறைத்தூதர்களான நபி இப்ராஹிம் (அலை), நபி இஸ்மாயில் (அலை), அன்னை ஹாஜரா ஆகியோரின் தியாகத்தைப் பிரதிபலிக்கும் ஹஜ் கடமை என்பது தியாகத்தையும் சகிப்புதன்மையையும் அதிகம் வலியுறுத்தும் இறுதிக் கடமையாகும்.

இலங்கை முஸ்லிம்கள் - இந்த நாட்டுக்காக ஆற்றிய அனைத்து வகையான தியாகங்களும் போற்றுதலுக்குரியது.

இந்த வருடம் குர்பானி கொடுப்பதில் பல இடங்களில் சில பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை வெளியிட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

# கிளிநொச்சி துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயம்

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி உதயநகர்ப் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவர் காரில் பயணித்தவர்கள் மீது நேற்று (28) அதிகாலை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த கார்ச்சாரதி கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி உதயநகர்ப் பகுதியைச் சேர்ந்த 38 வயதான ஒருவரே இதன்போது காயமடைந்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர் உள்ளிட்ட மேலும் இருவர் உதயநகர்ப் பகுதியிலிருந்து கனகபுரம் பகுதிக்கு காரில் சென்றுகொண்டிருந்தபோதே மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் இடியன் துப்பாக்கியால் சுட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு வன்முறைக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட உள்ளக முரண்பாடுகளே இச்சம்பவத்துக்கு காரணமாக அமைந்திருக்கலாம் என பொதுமக்கள் ஊகம் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை கிளிநொச்சி தலைமையகப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

RPFL Richard Pieris Finance

# றிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்

## 31 மார்ச் 2023 முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வுக்குட்பட்ட நிதிக்கூற்றுக்கள்

| 31.03.2023 முடிவடைந்த வருடத்திற்கான முக்கிய நிதித் தரவுகள் / ரூபா மில்லியன்களில் | நடப்பு காலம் 01/04/2022 முதல் 31/03/2023 வரை | வருமான வட்டி % இன் படி | முந்தைய காலம் 01/04/2021 முதல் 31/03/2022 வரை | வருமான வட்டி % இன் படி |
|---|---|---|---|---|
| வட்டி வருமானங்கள் | 2,549.48 | | 2,319.27 | |
| வட்டிச் செலவினங்கள் | (2,542.55) | -100% | (1,199.27) | -52% |
| **தேறிய வட்டி வருமானம்** | **6.92** | 0% | **1,120.00** | 48% |
| வர்த்தக செயற்பாட்டின் மூலமான வருமானம்/(இழப்பு) | 4.92 | 0% | (1.33) | 0% |
| ஏனைய வருமானம் | 143.15 | 6% | 127.31 | 5% |
| செயற்பாட்டு செலவீனங்கள் (சேதக்கட்டணம் தவிர்த்து) | (624.19) | -24% | (570.32) | -25% |
| சேதக்கட்டணங்கள் | (82.80) | -3% | (231.94) | -10% |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **(551.99)** | -22% | **443.71** | 19% |
| வரிச் செலவுகள் | 199.49 | 8% | (210.16) | -9% |
| **வரிக்கு பின்னரான இலாபம்/(நட்டம்)** | **(352.50)** | -14% | **233.54** | 10% |

| தெரிவு செய்யப்பட்ட செயல்திறன் குறிக்காட்டிகள் | 31.03.2023 உள்ளவாறான | | 31.03.2022 உள்ளவாறான | |
|---|---|---|---|---|
| உள்ளடக்கங்கள் | உண்மையான | தேவையானவை | உண்மையான | தேவையானவை |
| **ஒழுங்குபடுத்துதல் மூலதனப் போதுமை (%)** | | | | |
| அடிப்படை மூலதனம் போதுமை விகிதம் | 9.35% | 8.50% | 9.92% | 7.00% |
| மொத்த மூலதன விகிதம் | 16.65% | 12.50% | 18.21% | 11.00% |
| மூலதன நிதியிலிருந்து மொத்த வைப்புப் பொறுப்பு விகிதம் | 32.27% | 10.00% | 27.71% | 10.00% |
| **கடன் சொத்துக்களின் தரம் (%)** | | | | |
| மொத்த 3ம் நிலை கடன் விகிதம் | 33.26% | | 24.43% | |
| தேறிய 3ம் நிலை கடன் விகிதம் | 19.78% | | 12.63% | |
| தேறிய 3ம் நிலை கடனிலிருந்து கரு மூலதன விகிதம் | 97.34% | | 70.37% | |
| 3ம் நிலை குறைபாடுள்ள செயலெல்லை விகிதம் | 26.99% | | 32.64% | |
| மொத்த குறைபாடுள்ள செயலெல்லை விகிதம் | 13.48% | | 11.82% | |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் | 0.04% | | 6.25% | |
| சொத்துக்களிலிருந்தான வருவாய் | -3.37% | | 2.48% | |
| பங்கு மூலதனத்திலிருந்தான வருவாய் | -13.27% | | 7.05% | |
| வருமான விகிதத்திற்கான செலவு | 415.92% | | 45.72% | |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவ சொத்துகளுக்கு கிடைக்கக்கூடிய திரவ சொத்துக்கள் (குறைந்தபட்சம் 100%) | 125.86% | | 148.10% | |
| வெளிப்புற நிதிகளுக்கான திரவ சொத்துக்கள் | 8.20% | | 10.08% | |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 17 | | 15 | |
| வெளிப்புற கடன் மதிப்பீடு | A (lka) RWN | | AA- (lka) RWN | |
| **கடந்த 6 மாதங்களில் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறை அபராதங்கள்** | | | | |
| தொகை (ரூபா. மில்லியன்) | - | | - | |
| **ஒழுங்குமுறை வைப்புக் கட்டுப்பாடுகள்** | | | | |
| மொத்த வைப்புத்தொகையின் வரம்பு (ரூ. மில்லியன்) | - | | - | |
| வைப்புத்தொகைக் குறைத்தல் - மாதம்/காலாண்டு/ஆண்டுக்கு (ரூ. மில்லியன்) | - | | - | |
| வைப்புகளை முடக்குதல் | - | | - | |
| **ஒழுங்குமுறை கடன் வாங்கும் கட்டுப்பாடுகள்** | | | | |
| மொத்தக் கடன்களின் வரம்பு (ரூ. மில்லியன்) | - | | - | |
| கடன்களை குறைத்தல் - மாதம்/காலாண்டு/ஆண்டுக்கு (ரூ. மில்லியன்) | - | | - | |
| கடன்களை முடக்குதல் | - | | - | |
| **ஒழுங்குமுறை கடன் கட்டுப்பாடுகள்** | | | | |
| மொத்த கடன் சொத்துக்கள் மீதான வரம்பு (ரூ. மில்லியன்) | - | | - | |
| கடன் சொத்துக்களை குறைத்தல் - மாதம்/காலாண்டு/ஆண்டுக்கு (ரூ. மில்லியன்) | - | | - | |
| புதிய கடன் வசதிகளை வழங்குவதற்கான கட்டுப்பாடுகள் மற்றும்/அல்லது தற்போதுள்ள கடன் வசதிகளின் விதிமுறைகளை விரிவுப்படுத்தல் | - | | - | |
| **வேறு ஏதேனும் ஒழுங்குமுறை கட்டுப்பாடுகள்** | - | | - | |

சான்றளிப்பு:

கீழே கையொப்பமிட்டிருக்கும் றிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் தலைமை நிறைவேற்று அதிகாரி, நிதிக் கட்டுப்பாட்டாளர் மற்றும் இணக்க அதிகாரி ஆகிய நாங்கள் இணைந்து கீழேயுள்ளனவற்றை உறுதிப்படுத்துகிறோம்.

(அ) இந்நிதிக்கூற்றுக்களில் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் வரைவிலக்கணத்திற்கு ஏற்ப இணங்குகின்றன என்பதை உறுதியளிக்கின்றோம்.

(ஆ) இந்நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் உரிமம் பெற்ற நிதி நிறுவனத்தின் கணக்காய்வுக்குட்பட்ட நிதிக்கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(ஒப்பம்)
டபுள்யு.எல்.எஸ். பொன்சேகா
தலைமை நிறைவேற்று அதிகாரி
திகதி : 09/06/2023

(ஒப்பம்)
பி.எச்.எஸ். சுரங்க
நிதி கட்டுப்பாட்டாளர்
திகதி : 09/06/2023

(ஒப்பம்)
ஜெ.கெ.டி.எஸ். துங்கசேன
இணக்க அதிகாரி
திகதி : 09/06/2023

இந்நிதியறிக்கைகள் தயாரித்தல் மற்றும் பிரசுரித்தல் தொடர்பில் பொறுப்புக்கள் பணிப்பாளர் சபையினையே சாரும். பணிப்பாளர் சபை சார்பில் கையெழுத்திடப்பட்டது:

(ஒப்பம்)
கே. பி. வனிகசேகர
தலைவர்
திகதி : 09/06/2023

(ஒப்பம்)
கெ. விஜேரத்ன
பணிப்பாளர்
திகதி : 09/06/2023

| 31.03.2023 உள்ளவாறான முக்கிய நிதித் தரவுகள் / ரூபா மில்லியன்களில் | 31.03.2023 உள்ளவாறான | மொத்தச் சொத்து % இன் படி | 31.03.2022 உள்ளவாறான | மொத்தச் சொத்து % இன் படி |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 1,184.99 | 7% | 1,259.55 | 7% |
| அரச பத்திரங்கள் | 918.19 | 6% | 1,021.69 | 6% |
| தொடர்புடைய கட்சிகளிடமிருந்து பெறவேண்டியவை | 35.42 | 0% | 63.92 | 0% |
| கடன்கள் (தொடர்புடைய கட்சிகளிடமிருந்து பெறவேண்டியவை தவிர்த்து) | 11,749.99 | 72% | 13,389.72 | 75% |
| பங்குகளில் முதலீடு | 19.23 | 0% | 14.31 | 0% |
| முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் அசையா சொத்துக்கள் | 64.77 | 0% | 65.83 | 0% |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 210.20 | 1% | 202.78 | 1% |
| ஏனைய சொத்துக்கள் | 2,203.18 | 14% | 1,909.25 | 11% |
| **மொத்த சொத்துக்கள்** | **16,385.97** | | **17,927.05** | |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிக்கு செலுத்தவேண்டியவை | 3,967.56 | 24% | 4,414.68 | 25% |
| தொடர்புடைய கட்சிக்கு செலுத்தவேண்டியவை | 727.28 | 5% | 328.87 | 2% |
| வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டியவை | 8,582.32 | 52% | 9,909.83 | 55% |
| ஏனைய கடன்கள் | - | 0% | - | 0% |
| ஏனைய பொறுப்புக்கள் | 339.29 | 2% | 527.74 | 3% |
| **மொத்த பொறுப்புக்கள்** | **13,616.45** | 83% | **15,181.12** | 85% |
| **பங்கு மூலதனம்** | | | | |
| பிரேரிக்கப்பட்ட மூலதனம் | 2,240.83 | 13% | 1,890.83 | 11% |
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | 88.44 | 1% | 88.44 | 0% |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | (337.53) | -2% | 786.49 | 4% |
| ஏனைய ஒதுக்கங்கள் | 777.78 | 5% | (19.83) | 0% |
| **மொத்த பங்கு மூலதனம்** | **2,769.52** | 17% | **2,745.93** | 15% |
| **பங்கிற்கான தேறிய சொத்து மதிப்பு** | 15.68 | | 17.91 | |

EY Building a better working world

Ernst & Young
Chartered Accountants
201 De Saram Place
P.O. Box 101
Colombo 10
Sri Lanka

Tel : +94 11 2463500
Fax Gen : +94 11 2697369
Tax : +94 11 5578180
eysl@lk.ey.com
ey.com

GSM/UM/JJ

**சுதந்திர தணிக்கையாளரின் அறிக்கை**
**றிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் பங்குதாரர்களுக்கு**

**நிதிக் கூற்றுகளின் தணிக்கை பற்றிய அறிக்கை**

**கருத்து**

றிச்சர்ட் பீரிஸ் .'.பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் 2023 மார்ச் 31 ஆம் தினத்தின் நிதிக் கூற்றுகள், நிதி நிலை அறிக்கைகள், விரிவான வருமான அறிக்கை, சமபங்கு மாற்றங்களின் அறிக்கைகள், குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம், முடிவடைந்த ஆண்டிற்கான பணப்புழக்க அறிக்கைகள் மற்றும் குறிப்புகள் ஆகியவற்றை நாங்கள் எங்கள் தணிக்கை நிறுவனத்தில் தணிக்கை செய்துள்ளோம்.

எங்களுக்கு நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள், அறிக்கைகள், 31 மார்ச் 2023 இல் நிறுவனத்தின் நிதி நிலை அதன் நிதி செயல்திறன், முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் பணப்புழக்கங்கள் பற்றிய ஆவணங்கள் ஆகியவை இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான வெளிப்பாட்டைக் கொண்டிருப்பதாக நாங்கள் கருதுகிறோம்.

**கருத்துகளுக்கான அடிப்படை**

இலங்கை தணிக்கை தரநிலைகளுக்கு (SLAuSs) அமைவாக நாங்கள் எங்கள் கணக்காய்வை செய்துள்ளோம். இந்த நியமங்களின் பிரகாரம் கணக்காய் வாளர்களான எமக்குள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் நிதிக்கூற்று பகுதியில் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. CA Sri Lanka வழங்கியுள்ள (நெறிமுறை) கோட்பாட்டின்படி நாங்கள் ஒரு சுயாதீனமான நிறுவனம். அந்த நெறிமுறைக் கோட்பாட்டிற்கு இணங்க ஏனைய நெறிமுறைப் பொறுப்புகளை நாங்கள் சரியாகவும் பூரணமாகவும் நிறைவேற்றியுள்ளோம். நாங்கள் குறித்த நிறுவனத்திடம் இருந்து பெற்ற தணிக்கைக்குத் தேவையான சான்றுகளும் சம்பந்தப்பட்ட ஆவணங்களும் எங்கள் கருத்துக்கான அடிப்படையை நிர்ணயிக்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

**நிதிக்கூற்றுகளில் நிர்வாகம் மற்றும் அதன் ஆளுமையாளர்களின் பொறுப்புகள்**

இலங்கை கணக்கியல் நியமங்களின்படி நிதிக்கூற்றுகளின் உண்மையான மற்றும் நியாயமான தன்மையை உறுதிப்படுத்துவதும் அதற்கேற்ப உள்ளகக் கட்டுப்பாட்டை நிர்ணயிப்பதும், பொருள் மாறாமலும் அல்லது திரிபுபடாமலும், மோசடிகள் அல்லது பிழைகள் தவிர்க்கப்பட்டும் நிதிக்கூற்றுகளை தயாரிப்பது நிறுவன ஆளுமையாளர்களின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும்போது தங்களது நிறுவனம் தொடர்ந்து இயங்கக்கூடிய ஏதேனும் சாத்தியங்கள் உள்ளனவா என்பதை சம்பந்தப்பட்ட நிறுவனம் விரிவாக ஆராய வேண்டும். அந்த நிறுவனத்தை கலைக்கவோ அல்லது அதன் செயல்பாடுகளை நிறுத்தவோ விரும்பாத கட்டத்தில் நிறுவனத்தின் தற்போதைய நிலையை துல்லியமாக மதிப்பீடு செய்து ஏற்புடைய விஷயங்களை வெளிப்படுத்த வேண்டும். அதனைத் தவிர யதார்த்தமான மாற்று வழி எதுவும் இல்லை என்றே கூறலாம்.

நிதிக்கூற்று செயற்பாடுகளை மேற்பார்வை செய்வது நிறுவனத்தின் ஆளுமையாளர்களின் பொறுப்பாகும்.

**நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள்**

நிதிக் கூற்றொன்று ஒட்டுமொத்தமாக தவறான அறிக்கையை உள்ளடக்கியுள்ளதா அல்லது அதில் மோசடி அல்லது பிழை ஏதேனும் உள்ளதா என்பதை தீவிரமாக ஆராய்ந்து தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியதும் அதற்கமைய நியாயமான உத்தரவாதத்தை வெளியிட வேண்டியதும் தணிக்கையாளர்களான எமது பொறுப்பாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் நிலை உத்தரவாதமாகும், ஆனால் SLAuSs இன் நியமங்களின்படி இவ்வாறு நடத்தப்படும் ஒரு தணிக்கையில் அத்தகைய குறைபாடுகளைக் கண்டு பிடிக்க முடியும் என்பது நிச்சயமில்லை. தவறான அறிக்கை மோசடி அல்லது பிழையிலிருந்து எழலாம். அவ்வாறான நிதிக் கூற்றுகள் தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ பயனர்களின் பொருளாதார முடிவுகளில் செல்வாக்கு செலுத்துவது நியாயமானதாக எதிர்பார்க்கப்படுகிறது.

SLAuSs நியமங்களின்படி தணிக்கையொன்றின் போது நாங்கள் தணிக்கையின் மூலம் தொழில்முறை மதிப்பீடு மற்றும் தொழில்முறை சந்தேகம் மேற்கொள்கிறோம்.

**எமது தணிக்கையின் எல்லா சந்தர்ப்பங்களிலும் நாங்கள் பின்வரும் விடயங்களில் முக்கிய கவனம் செலுத்துவோம்.**

• ஏதேனும் மோசடி, பிழை அல்லது பொருள் தவறைக் கொண்ட நிதிக் கூற்றின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்தல், அவ்வாறான இடர்களுக்குப் பதிலளிக்கும் வகையில் தணிக்கை நடைமுறைகளை முறையாக வடிவமைத்து செயல்படுத்துதல் மற்றும் எங்கள் கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமானதும் பொருத்தமானதுமான தணிக்கைச் சான்றுகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல், நிதிக் கூற்றில் செய்யப்பட்டுள்ள மோசடி மற்றும் வேண்டுமென்றே செய்யப்பட்ட புறக்கணிப்பு, நிதிக் கூற்றில் தரப்பட்டுள்ள தவறான விளக்கங்கள் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை மீறுதல் போன்றவற்றை உள்ளடக்கிய நிதிக்கூற்றின் விளைவாக ஏற்படக் கூடிய ஆபத்தானது அந்த நிதிக் கூற்றில் உள்ள பிழையின் விளைவாக ஏற்படக் கூடிய ஆபத்தை விட அதிகமானதாகும்.

• சூழ்நிலைக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைப்பதற்காக, தணிக்கை தொடர்பான உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெற்றுக்கொண்டோம், ஆனால் அது நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் செயல்திறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

• பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகளின் சரியான தன்மை, கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட இவ்விடயங்கள் தொடர்பான வெளிப்பாடுகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்

• நிறுவனம் தொடர்ந்து இயங்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சரியான நிர்வாகத்தின் பயன்பாட்டை முடிக்கவும் மற்றும் பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில், நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகளுடன் தொடர்புடைய ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை அறிக்கையில் மற்றும் இது தொடர்ந்து இயங்கக்கூடிய சாத்தியக்கூற்றை கொண்டிருக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் திறனைப் பற்றி மதிப்பிடல் என்பதை தேடிக் கண்டுப்பிடித்தல். அறிக்கையில் பொருள் நிச்சயமற்ற தன்மையொன்று உள்ளது என்று முடிவு செய்தால், நிதிநிலை அறிக்கைகளில் உள்ள அது தொடர்பான வெளிப்பாடுகள் அவசியம். அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தை மாற்றுவதற்கு எங்கள் கணக்காய்வாளர் அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். எங்கள் தணிக்கை அறிக்கையின் தேதி வரை பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில் எங்கள் முடிவு நடைமுறையில் இருக்கும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் அந்த நிறுவனம் தொடர்ந்து இயங்கக்கூடிய சாத்தியக்கூறுகளுக்கு தடையாக அமையக்கூடும்.

• நிதிநிலை அறிக்கைகள், வெளிப்படுத்தல்கள் உட்பட நியாயமான விளக்கக்காட்சியை அடையும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவம் யுபலையபை உட்பட நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த விளக்கக்காட்சி, மதிப்பீடு செய்தல்.

தணிக்கையின் திட்டமிடப்பட்ட நோக்கம், அது நடத்தப்பட்ட காலம் மற்றும் குறிப்பிடத்தக்க தணிக்கை கண்டுபிடிப்புகள், எங்கள் தணிக்கையின் போது நாங்கள் அடையாளம் காணும் உள்ளக கட்டுப்பாட்டில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட ஏனைய விடயங்கள் சம்பந்தமாக நிறுவனத்தின் ஆளுகைக்கு பொறுப்பானவர்களுடன் நாங்கள் தொடர்பு கொள்வோம்.

**ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 163(2) இன் பிரகாரம் எமது தணிக்கைக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து நாங்கள் பெற்றுள்ளோம், மேலும் நாங்கள் அறிந்த வரையில் எங்கள் தேர்வில் முறையான கணக்கியல் பதிவுகளை முன் வைத்துள்ளோம்.

(கையொப்பம்)
எர்ன்ஸ்ட் மற்றும் யங்

09 ஜுன் 2023
கொழும்பு

(இந்த அறிக்கை ஆங்கில தணிக்கை அறிக்கையின் தமிழாக்கம்)

Partners: H M A Jayesinghe FCA FCMA, R N de Saram ACA FCMA, Ms. N A De Silva FCA, W R H De Silva FCA ACMA, Ms. Y A De Silva FCA, Ms. K R M Fernando FCA ACMA, N Y R L Fernando ACA, W K B S P Fernando FCA FCMA, Ms. L K H L Fonseka FCA, D N Gamage ACA ACMA, A P A Gunasekera FCA FCMA, A Herath FCA FCMA, D K Hulangamuwa FCA FCMA LLB (London), Ms. G G S Manatunga FCA, A A J R Perera ACA ACMA, Ms. P V K N Sajeewani FCA, N M Sulaiman ACA ACMA, B E Wijesuriya FCA FCMA, C A Yalagala ACA ACMA

Principals: W S J De Silva BSc (Hons)-MIS MSc-IT, G B Goudian ACMA, D L B Karunathilaka ACMA, Ms. P S Paranavitane ACA ACMA LLB (Colombo), T P M Ruberu FCMA FCCA

A member firm of Ernst & Young Global Limited

**றிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்**
நிதி வர்த்தக சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் உரிமம் பெற்றது. Act No:42 of 2011

69, ஆர்பிகோ கம்பளக்ஸ், ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02.
தொலைபேசி: 011-5900600 | www.rpfinancelk.com

A (lka) RWN by Fitch Ratings Lanka Limited.

# நீர்ச்சறுக்கல் படகுகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்வதற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## பொத்துவில் முச்சக்கரவண்டி சாரதிகள் முன்னெடுப்பு





மாளிகைக்காடு செய்தியாளர்

சுற்றுலாத்துறைக்கு புகழ்பெற்ற பிரதேசமான பொத்துவில், அறுகம்பை பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் நீர்ச்சறுக்கல் படகுகளை (surfing board) ஏற்றிச் செல்வதற்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று புதன்கிழமை(28) இடம்பெற்றது.

அறுகம்பை முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குறித்த ஆர்ப்பாட்டமானது அறுகம்பை பிரதான வீதியில் ஆரம்பிக்கப்பட்டு, பதாதைகளை ஏந்தியவாறு பேரணியாக பொத்துவில் பிரதேச செயலகம்வரை சென்றது.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் வியாபார நடவடிக்கைக்காக சுற்றுலாப்பயணிகளின் surfing boardகளை சைக்கிள்களில் ஏற்றிச் செல்வதற்காக வாடகைக்கு விடுகின்றனர். இதனால் சுற்றுலாத்துறையை மாத்திரம் நம்பி தமது ஜீவனோபாயத்தை மேற்கொண்டுவரும் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட முச்சக்கரவண்டி சாரதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து பொலிஸாருக்கு தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் இதனாலேயே போக்குவரத்துப் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுசெல்லும் வகையில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கும் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், மோட்டார் சைக்கிள்களில் பொருத்தப்பட்டிருக்கும் surf board தாங்கிகளை அகற்றி வீதி விபத்துகளிலிருந்து சுற்றுலாப்பயணிகளையும் மக்களையும் பாதுகாத்து தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு செல்வதற்கு பொலிஸார் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கோரிய மகஜர் ஒன்றை பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸிடம் கையளித்தனர்.

# தேர்தல் சட்டம் தொடர்பில் மீளாய்வுக் கலந்துரையாடல்

மட்டக்களப்பு செய்தியாளர்



தேர்தல்கள் திணைக்களத்தின் மட்டக்களப்பு அலுவலகத்தினால் மாவட்டத் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடும் கண்காணிப்பாளர்களுக்கு தேர்தல் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் தொடர்பிலான மீளாய்வுக் கலந்துரையாடல் புதன்கிழமை(28) மட்டக்களப்பு தேர்தல்கள் திணைக்கள அலுவலகத்தில் இடம்பெற்றது.

இம்மீளாய்வுக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியானினால் இலங்கையில் தேர்தல் அறிமுகம், தேர்தல் எல்லை நிர்ணயம், வாக்காளர் இடாப்பு, தேர்தல்களில் பெண்களின் பிரதிநிதித்துவம், தேர்தல் சட்டங்கள், தேர்தல் விதிமுறைகள் தொடர்பிலான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் கண்காணிப்பு அமைப்புகளின் மாவட்டப் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். தேர்தல் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற மூலோபாய வேலைத்திட்டத்தின் கீழ் நாம் மாவட்ட ரீதியாக பல செயலமர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி வருகின்றோம்.

அதில் சமூகமட்டத்தில் இருக்கின்ற விளையாட்டுக் கழகங்கள், மகளிர் அமைப்புகள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உள்ளிட்ட அமைப்புகளுக்கு இந்த விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி வருவதோடு அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் உள்ளிட்டோருக்கும் இதனை நடத்தி வருகின்றோம்.

இந்நிலையில், தேர்தலோடு மிகவும் நெருக்கமாக செயற்படுகின்ற தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு தேர்தல் சட்டங்கள் தொடர்பிலும் இலங்கையிலிருந்து கடந்த கால தேர்தல் நடைமுறைகள், வரலாறுகள் தொடர்பிலும் தற்காலத்தில் அதன் பிரயோகங்கள் தொடர்பிலும் இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் எடுத்துரைக்கப்பட்டதாக இதன்போது மட்டக்களப்பு உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான் தெரிவித்தார்.

# மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூர் ஞாபகார்த்த கவிதைப்போட்டி



ஆறு தசாப்தங்களுக்கு மேலாக இன, மத, பிரதேச பேதமின்றி அளப்பரிய சேவைகளாற்றிய முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற ஏ.ஆர்.மன்சூரின் ஆறாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கல்முனை ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன் கலாநிதி மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூர் ஞாபகார்த்த கவிதைப் போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

'மன்சூர் எனும் மறக்க முடியாத ஆளுமை' என்ற தலைப்பின் கீழ் போட்டிக்கான கவிதைகளை ஜூலை 05ஆம் திகதிக்கு முன்னர் வயது வித்தியாசமின்றி எவரும் அனுப்பிவைக்கலாம் என அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கவிதைப் போட்டியில் பங்குபற்றி முதலாமிடத்தைப் பெறும் வெற்றியாளருக்கு 20ஆயிரம் ரூபா, இரண்டாமிடத்துக்கு 15ஆயிரம் ரூபா மூன்றாமிடத்துக்கு 10ஆயிரம் ரூபா எனவும் தலா 3ஆயிரம் ரூபா வீதம் மூவருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படுவதுடன், சிறந்த கவிதைகளாகத் தேர்ந்தெடுக்கப்படுபவை நூலுருப் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான கவிதைகள் 077 44 33 044 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு குறிப்பிட்ட தினத்துக்கு முன்னர் அனுப்பப்படவேண்டியதுடன் அதன் பிரதியை ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன், இலக்கம் 116, மத்ரஸா வீதி, கல்முனை-10 என்ற முகவரிக்கு தபால்மூலம் அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

# காசநோயை கண்டறியும் பயிற்சிநெறி அம்பாறையில்



மாளிகைக்காடு செய்தியாளர்

முதியவர்களிடையே காசநோயைக் கண்டறியும் முயற்சியில் அம்பாறை மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் ஏ.எல்.அப்துல் கபூரால் மாவட்ட மார்புச் சிகிச்சை மையத்தில் செவ்வாய்க்கிழமை (27) பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் கலந்து கொண்டு இவ் அமர்வு முழுவதும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினார். டாக்டர் ஏ.எச்.எம்.டி.மபாஸ் கலந்து கொண்டு 'வீட்டில் இருக்கும் முதியோர்களுக்கான சுகாதாரம்' என்ற தலைப்பில் விளக்கவுரை வழங்கினார். இந்நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவச்சிகள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் கலந்துகொண்டனர். சிறப்பாக நடைபெற்ற இந்தச் செயலமர்வு வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்குச் செல்லும் முதியோர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சுகாதாரத்துக்கான ஒரு வெற்றிகரமான முயற்சியாக அமைந்தது.

# மாணவர் ஒன்றியத்துக்கான நிர்வாகத் தெரிவு

கல்லடி செய்தியாளர்



கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் மாணவர் ஒன்றியத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக ரி.குமாரேஸ்வரனும் உப தலைவராக ஆர்.கோபாலனும் செயலாளராக எஸ்.சசிகுமாரும் பொருளாளராக எம்.ருசாந்தனும் பதிவாளராக கே.டிலக்ஷனும் தெரிவாகினர்.

பதவிகளுக்காக 10பேர் தேர்தலில் போட்டியிட்டனர். அவர்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில் அப்பதவிகளுக்காக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன், 08 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அண்மையில்(22) நிறுவகப் பணிப்பாளர் திருமதி புளோரன்ஸ் பாரதி கென்னடியினால் வழங்கப்பட்டன.

# மட்டக்களப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல்வேறு சமூகநலத் திட்டங்களுக்கு அனுமதி





மட்டக்களப்பு, கிரான் செய்தியாளர்கள்

மட்டக்களப்பு மாவட்ட ஜூன் மாதத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(27) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான செந்தில் தொண்டமானின் பங்கேற்புடன் இடம்பெற்றது. இதன்போது வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

குறிப்பாக, இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப் பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

மேலும் இம்மாவட்டத்தின் விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம் (டெங்கு ஒழிப்பு), சுற்றாடல், மீன்பிடி உட்பட்ட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆளுநர் உடன் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் உரிய அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

அத்துடன், மாவட்டத்தில் கொரியன் கம்பனி மூலம் அமையவுள்ள சோலார் மின் உற்பத்தி திட்டத்தை செயற்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டதுடன் மேலும் சோலார் மின் உற்பத்தி செய்வதற்காக ஆயிரம் ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டது. மாவட்டத்தின் மைலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் சட்டவிரோதமாக குடியேறியுள்ளவர்களை அங்கிருந்து அகற்றுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், மகாவலி தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அவற்றுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஆலோசனைகள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்டோரினால் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநரின் பணிக்குழுவினர் உள்ளிட்ட உயரதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள், மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் உயரதிகாரிகள் உள்ளிட்ட திணைக்களங்கள் சார் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## போடியார் புலம்பல்!



**பாரதிய ஜனதா கட்சி தலைவர் அண்ணாமலை இந்தியாவில இருந்து லண்டனிலபோய் 13ஆம் வாய்பாட்ட அங்கிருக்கிற நம்மட தமிழாக்களிட்ட சொல்லிக்குடுத்தவர் எலுவா.? 1987ஆம் ஆண்டு தொடக்கம் 2023ஆம் ஆண்டு வரையும் அந்த வாய்பாடு சொல்லிச்சொல்லியே இந்திய பிரதமராக இருந்த ராஜிவ் காந்தி தொடக்கம் இப்ப இருக்கிற மோடி ஐயா வரையும் அவங்கட அரசியல ஒப்பேத்திறாங்க.. ஆனா இலங்கயில உள்ள சிங்கள தலைவர்கள் இந்த 13ஆம் வாய்பாட்டு மட்டய குப்பயில எறிஞ்சித்தாங்க.**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர்கள் இருவர் பலி

## குருக்கள்மடம் பகுதியில் சம்பவம்

குருக்கள்மடம் செய்தியாளர்

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த செட்டிபாளையத்தைச் சேர்ந்த மூவரில் இரு குடும்பஸ்தர்கள் உயிரிழந்துள்ளமை அப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 05 தினங்களுக்கு முன் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் குருக்கள்மடம் ஐயனார் ஆலயத்துக்கு அருகாமையில் செட்டிபாளையத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார்சைக்கிளும் மட்டக்களப்பு பக்கமிருந்து செட்டிபாளையம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார்சைக்கிளும் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் மோட்டார்சைக்கிள்களில் பயணித்த செட்டிபாளையத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர்கள் இருவரும் சிறுவன் ஒருவனும் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தனர்.

இந்நிலையில், குறித்த குடும்பஸ்தர்கள் இருவரும் உயிரிழந்துள்ளதுடன் சிறுவன் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுத்துவக்கு வெடித்ததில் சிறுவன் பரிதாப மரணம்

## வாகரை பொலிஸ் பிரிவில் சம்பவம்

மண்டூர் செய்தியாளர்

வாகரை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கட்டுமுறிவு பிரதேசத்தில் கட்டுத்துவக்கு வெடித்ததில் சிறுவன் ஒருவன் பலியான சம்பவம் செவ்வாய்க்கிழமை(27) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சின்னத்தட்டுமுனை வாகரை பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுடைய நவரெட்ணராசா கிதுசன் என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

சம்பவ தினத்தன்று உறவினர்களுடன் கட்டுமுறிவு காட்டுப் பிரதேசத்துக்கு மிருக வேட்டைக்குச் சென்றுகொண்டிருக்கும்போது காட்டுப்பற்றையில் கையிலிருந்த கட்டுத்துவக்கு சிக்குண்டு வெடித்ததில் குறித்த சிறுவன் சம்பவ இடத்திலேயே பலியானதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

வாழைச்சேனை நீதிமன்ற நீதிவானின் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற கோரளைப்பற்று பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வடிவேல் ரமேசானந்தன் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலை பொது வைத்தியசாலை சிற்றூழியர் பற்றாக்குறையை தீர்க்கக்கோரி ஆர்ப்பாட்டம்



அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நிலவும் சிற்றூழியர் பற்றாக்குறையை உடனடியாகத் தீர்க்குமாறுகோரி திருகோணமலை பொது வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் புதன்கிழமை(28) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலை கிழக்கு மாகாண சபைக்கு கீழ் இயங்கி வந்த நிலையில், 2008ஆம் ஆண்டு மத்திய அரசாங்கத்துக்கு கீழ் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், திருகோணமலை பொது வைத்திய சாலையில் கடமையாற்றிய சிற்றூழியர்கள் சிலர் உயிரிழந்துள்ளதாகவும் மற்றும் சிலர் ஓய்வூதியம் பெற்றுச் சென்றுள்ளதாகவும் தற்போது கடமையில் உள்ள சிற்றூழியர்களுக்கு விடுமுறை, இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த ஆர்ப்பாட்டக்களத்துக்கு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் இணைப்புச் செயலாளரும் திருகோணமலை நகரசபை முன்னாள் தலைவருமான இராசநாயகம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிற்றூழியர்களுடன் கலந்துரையாடுவதற்கு சென்றிருந்தபோது, ஆர்ப்பாட்டக்காரர்களால் தற்போது வர வேண்டாம் என எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, திருகோணமலை பொது வைத்தியசாலையில் தற்போது 135 சிற்றூழியர்களின் பற்றாக்குறை காணப்படுவதாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் சுகாதார அமைச்சுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தபோதிலும், இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை எனவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இருந்தபோதிலும் , மிக விரைவாக சிற்றூழியர்கள் நியமிக்கப்படாவிட்டால் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டனர்.

# பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி முகாமைத்துவ பயிற்சித்திட்டம்

மாளிகைக்காடு செய்தியாளர்



தடுப்பூசிகளை திறம்பட நிர்வகிப்பதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவச்சிகளின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தடுப்பூசி முகாமைத்துவம் தொடர்பான விரிவான பயிற்சித்திட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிராந்திய தொற்றுநோய் நிபுணர் டாக்டர் எம்.ஏ.சி.எம்.பசாலின் ஏற்பாட்டில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் பணிமனை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

புகழ்பெற்ற பிராந்திய தொற்றுநோயியல் நிபுணரான டாக்டர் எம்.ஏ.சி.எம்.பஸால் வளவாளராக இந்நிகழ்வில் கலந்துகொண்டார். இத்துறையில் அவரது நிபுணத்துவமும் அனுபவமும் பங்கேற்பாளர்களுக்கு மதிப்புமிக்க நுண்ணறிவு மற்றும் வழிகாட்டுதலை வழங்கியது.

இந்தப் பயிற்சியானது தடுப்பூசி நிர்வாகத்தின் சேமிப்பு, விநியோகம், கண்காணிப்பு மற்றும் பாதகமான நிகழ்வு அறிக்கையிடல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இப்பயிற்சித் திட்டத்தினூடாக ஒட்டுமொத்த தடுப்பூசி முகாமைத்துவ அமைப்பை மேம்படுத்தவும் பொதுமக்களுக்கு தடுப்பூசிகளை திறம்பட வழங்குவதை உறுதி செய்யவும் இப்பகுதியில் சுகாதார உட்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹஜ் பெருநாள் தொழுகை

பொலிவேரியன் செய்தியாளர்

ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை வழமை போன்று இம்முறையும் சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசலினால் வியாழக்கிழமை(29) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது - 12, கடற்கரை வீதியில் அமைந்துள்ள மீனவர் வாசிகசாலைக்கு அருகேயுள்ள திடலில் காலை 06.30 மணிக்கு இடம்பெறும் என பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம்.இனாமுல்லாஹ் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், ஆண்கள், பெண்கள் என இரு பாலாருக்கும் ஒரே நேரத்தில் மௌலவி அஷ்-ஷெய்க் அஸ்பாக் ஹாமியால் தொழுகை நடத்தப்பட்டு, அதன் பின்னர் குத்பா பிரசங்கமும் நிகழ்த்தவிருப்பதாகவும் அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திடல்தொழுகைக்கு வரும்போது அனைவரும் தங்களது வீட்டில் வுழு செய்துகொண்டு முஸல்லாவுடன் வருகை தருமாறும் குறித்த நேரத்தில் தொழுகை ஆரம்பிக்கப்படும் எனவும் யாருக்காகவும் தொழுகைநேரம் தாமதிக்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போஷணை கண்காட்சியும் விழிப்புணர்வும்



மாளிகைக்காடு செய்தியாளர்

தீவிர மந்த போஷணை உடைய சிறுவர்களுக்கான போஷணை கண்காட்சியும் விழிப்புணர்வும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை(27) நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.எம்.வாஜித் கலந்து கொண்டதுடன் கல்முனை பிராந்திய தாய் - சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.ரிஸ்பின் கலந்துகொண்டு சிறுவர்களுக்கான போஷணை தொடர்பிலும் உணவு விழிப்புணர்வு சம்பந்தமாகவும் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்க குழந்தைகளுக்கு எப்படி உணவளிக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் விளக்கமளித்தார்.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மயிலம்பாவெளி பகுதிக்கு குடிநீர் இணைப்பு



கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மயிலம்பாவெளி பகுதியில் குடிநீர் இணைப்பு வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு செவ்வாய்க்கிழமை (27) இடம்பெற்றது.

மயிலம்பாவெளி பகுதியில் குடிநீர் இணைப்பு இதுவரை கிடைக்கப்பெறாத பகுதிகளுக்காக சுமார் 02 கிலோமீற்றர் தூரத்துக்கு குடிநீர் வழங்கும் நோக்கத்தின் அடிப்படையில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது அப்பகுதி மக்களுடன் அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துரையாடியதுடன், அவர்களது கோரிக்கைக் கடிதங்களையும் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் நீர்வழங்கல் திணைக்கள அதிகாரிகள், கிராமசேவகர், கட்சியின் இணைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் கற்பித்து வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களை பாராட்டிக் கௌரவிக்கும் பிரியாவிடை நிகழ்வு அண்மையில் கல்லூரி திறந்தவெளியரங்கில் அதிபர் அருட் சகோதரர் சந்தியாகு தலைமையில் இடம்பெற்றது. ஆங்கில ஆசிரியைகளான திருமதி அமிலா, திருமதி தர்ஷிக்கா, திருமதி தர்ஷினி, கணித பாட ஆசிரியை திருமதி தனுரேகா மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆசிரியை திருமதி ஷர்மிலா ஆகியோரே இவ்வாறு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். (நிந்தவூர் செய்தியாளர்)



'அஸ்வெசும' நலன்புரி கொடுப்பனவுகள் தொடர்பான மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்ளும் பணி அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் ஷாபீர் தலைமையில் நடைபெற்றது. இதில் மேன்முறையீட்டுக்குழு அங்கத்தினர்களான நிர்வாக கிராம உத்தியோகத்தர் ஜஃபர் மற்றும் தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.எம்.ஹமீட் ஆகியோர் கலந்துகொண்டனர். (திராய்க்கேணி செய்தியாளர்)

## தொழில்முயற்சியாளர்களின் வர்த்தகக் கண்காட்சி



திகாமடுல்ல செய்தியாளர்

ஜனாதிபதி விருது பெற்ற SF Modeling Garment நிறுவனத்தின் பங்குபற்றுதலுடன் மக்கள் வங்கியின் நடுத்தர வர்த்தக முயற்சியாளர்கள் உலக நுண்நிதி சிறிய நடுத்தர முயற்சியாண்மை தினத்துடன் இணைந்து நடத்தும் வர்த்தகக் கண்காட்சி மட்டக்களப்பில் புதன்கிழமை(28) நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய காரியாலய முகாமையாளர் சிசிர குமார, மட்டக்களப்பு கிளை முகாமையாளர் சாந்தன், நகர கிளை முகாமையாளர் தினேஸ்குமார், காத்தான்குடி கிளை முகாமையாளர் விஸ்னுவரதன், திருமதி சஞ்சிகா, ஜனா, பிராந்திய ஒருங்கிணைப்பாளர் திவ்யா ஆகியோரின் தலைமையில் இவ்வர்த்தகக் கண்காட்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தொழில் முயற்சியாளர்கள் பங்குபற்றி தமது விற்பனைப் பொருட்களை காட்சிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





சர்வதேச பிறை அடிப்படையில் இடம்பெற்ற புனித 'ஈதுல் அழ்ஹா' ஹஜ் பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் புதன்கிழமை(28) கல்முனையில் இடம்பெற்றன. கல்முனை ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி சாபித் (ஷரயி, ரியாதி) தலைமையில் இடம்பெற்ற இந்தப் பெருநாள் தொழுகையில் பெருந்திரளான ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் கலந்து கொண்டனர். (எஸ்.அஷ்ரப்கான்)

FINTREX finance

# பின்ட்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட்

**தலைமை அலுவலகம்: இல. 851, டாக்டர். டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 14.**

தொலைபேசி: 0117977977 தொலைநகல்: 0115200111 இணையதளம்: www.fintrexfinance.com மின்னஞ்சல் : info@fintrexfinance.com

## 2023 பங்குனி 31ம் திகதியில் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கை

**31.03.2023 முடிவடைந்த காலத்திற்கான முக்கிய நிதித் தரவுகள் (கணக்காய்வுக்குட்பட்டது)**

| ரூபா மில்லியன்களில் | நடப்பு ஆண்டு 01/04/2022 முதல் 31/03/2023 வரை | நடப்பு ஆண்டு வருமான வட்டி % இன் படி | முந்தைய ஆண்டு 01/04/2021 முதல் 31/03/2022 வரை | முந்தைய ஆண்டு வருமான வட்டி % இன் படி |
|---|---|---|---|---|
| வட்டி வருமானங்கள் | 2,264 | 100% | 1,956 | 100% |
| வட்டிச் செலவினங்கள் | 1,811 | 80% | 660 | 34% |
| **தேறிய வட்டி வருமானம்** | **453** | **20%** | **1,296** | **66%** |
| வர்த்தக செயற்பாட்டின் மூலம் வருமானம்/ (இழப்பு) | - | 0% | - | 0% |
| ஏனைய வருமானம் | 104 | 5% | 151 | 8% |
| செயற்பாட்டு செலவீனங்கள் (தேய்மானங்கள் தவிர்த்து) | 820 | 36% | 753 | 39% |
| தேய்மானங்கள் | 183 | 8% | 118 | 6% |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **(445)** | **-20%** | **575** | **29%** |
| வருமான வரி | (226) | -10% | 248 | 13% |
| **வரிக்கு பின்னரான இலாபம்/(நட்டம்)** | **(219)** | **-10%** | **327** | **17%** |

**31.03 உள்ளவாறான முக்கிய நிதித் தரவுகள் (கணக்காய்வுக்குட்பட்டது)**

| ரூபா மில்லியன்களில் | 31.03.2023 உள்ளவாறான | மொத்தச் சொத்து % இன் படி | 31.03.2022 உள்ளவாறான | மொத்தச் சொத்து % இன் படி |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் வங்கி மீதி | 379 | 3% | 312 | 2% |
| அரச பத்திரங்கள் | 725 | 7% | 694 | 5% |
| தொடர்புடைய கட்சிகளிடமிருந்து மீதி | - | 0% | - | 0% |
| கடன்கள் (தொடர்புடைய கட்சிகளிடமிருந்து மீதி தவிரித்து) | 9,269 | 84% | 11,288 | 89% |
| பங்கு முதலீடு | 0 | 0% | 0 | 0% |
| முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் ரியல் எஸ்டேட் | 19 | 0% | 7 | 0% |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 101 | 1% | 83 | 1% |
| ஏனைய சொத்துக்கள் | 485 | 4% | 237 | 2% |
| **மொத்த சொத்துக்கள்** | **10,978** | **100%** | **12,620** | **100%** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிக்கு வழங்கவேண்டியது | 2,747 | 25% | 5,376 | 43% |
| தொடர்புடைய கட்சிகளிடமிருந்து மீதி | - | 0% | - | 0% |
| வாடிக்கையாளருக்கு வழங்கவேண்டியது | 4,744 | 43% | 1,858 | 15% |
| ஏனைய கடன்கள் | 275 | 3% | 1,701 | 13% |
| ஏனைய பொறுப்புக்கள் | 279 | 3% | 532 | 4% |
| **மொத்த பொறுப்புக்கள்** | **8,044** | **73%** | **9,468** | **75%** |
| **பங்கு மூலதனம்** | | | | |
| ஆரம்ப மூலதனம் | 2,370 | 22% | 2,370 | 19% |
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | 54 | 0% | 54 | 0% |
| பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | 511 | 5% | 729 | 6% |
| ஏனைய ஒதுக்கங்கள் | - | 0% | - | 0% |
| **மொத்த பங்கு மூலதனம்** | **2,934** | **27%** | **3,153** | **25%** |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **10,978** | **100%** | **12,620** | **100%** |
| **பங்கிற்கான தேறிய சொத்து மதிப்பு (ரூபா)** | **12.38** | | **13.30** | |

<u>சான்றளிப்பு:</u>

கீழே கையொப்பமிட்டிருக்கும் பின்ட்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட் தலைமை நிறைவேற்று அதிகாரி, தலைமை நிதி அதிகாரி மற்றும் இணக்க அதிகாரிஆகிய நாங்கள் இணைந்து கீழேயுள்ளனவற்றை உறுதிப்படுத்துகிறோம்.

(அ) இந்நிதிக்கூற்றுக்களில் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் வரைவிலக்கணத்திற்கு ஏற்ப இணங்குகின்றன என்பதை உறுதியளிக்கின்றோம்.

(ஆ) இந்நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் உரிமம் பெற்ற நிதி நிறுவனத்தின் கணக்காய்வுக்குட்பட்ட நிதிக்கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(ஒப்பம்)
ஜயதிலக பண்டார
தலைமை நிறைவேற்று அதிகாரி
22 ஜூன் 2023

(ஒப்பம்)
சரித்த வித்னன
தலைமை நிதி அதிகாரி
22 ஜூன் 2023

(ஒப்பம்)
D C ஜயசேகர
இணக்க அதிகாரி
22 ஜூன் 2023

**தெரிவு செய்யப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகள்**

| ரூபா மில்லியன்களில் | 31.03.2023 உள்ளபடி உண்மையான | 31.03.2023 உள்ளபடி தேவையானவை | 31.03.2022 உள்ளபடி உண்மையான | 31.03.2022 உள்ளபடி தேவையானவை |
|---|---|---|---|---|
| **ஒழுங்குபடுத்துதல் மூலதனப் போதுமை (%)** | | | | |
| அடுக்கு 1 மூலதனம் போதுமை விகிதம் | 26.6% | 8.5% | 23.5% | 7.0% |
| மொத்த மூலதன விகிதம் | 26.6% | 12.5% | 23.5% | 11.0% |
| மூலதன நிதியிலிருந்து வைப்புப் பொறுப்பு விகிதம் | 61.9% | 10.0% | 169.7% | 10.0% |
| **சொத்துக்களின் தரம் (%)** | | | | |
| மொத்த 3ம் நிலை கடன் விகிதம் | | 11.4% | | 6.2% |
| தேறிய 3ம் நிலை கடன்கள் விகிதம் | | 5.2% | | 3.8% |
| தேறிய 3ம் நிலை கடன்களிலிருந்து கோர் மூலதன விகிதம் | | 39.8% | | 23.7% |
| 3ம் நிலை குறைப்பாடுள்ள செயலெல்லை விகிதம் | | 58.2% | | 42.9% |
| மொத்த குறைப்பாடுள்ள செயலெல்லை விகிதம் | | 9.0% | | 6.2% |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் | | 4.1% | | 12.6% |
| சொத்துக்களிலிருந்தான வருவாய் | | -4.1% | | 4.6% |
| பங்கு மூலதனத்திலிருந்தான வருவாய் | | -7.5% | | 12.2% |
| வருமான விகிதத்திற்கான செலவு | | 147.0% | | 52.1% |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவ சொத்துகளுக்கு கிடைக்கக்கூடிய திரவ சொத்துக்கள் (குறைந்தபட்சம் 100%) | | 164.3% | | 333.2% |
| வெளி நிதிகளுக்கு திரவ சொத்துக்கள் | | 11.3% | | 10.4% |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | | 16 | | 15 |
| வெளிப்புற கடன் மதிப்பீடு | | B+ (RWN) | | B+ (RWN) |

KPMG 125

KPMG
(Chartered Accountants)
32A, Sir Mohamed Macan Markar Mawatha,
P. O. Box 186,
Colombo 00300, Sri Lanka.

Tel : +94 - 11 542 6426
Fax : +94 - 11 244 5872
: +94 - 11 244 6058
Internet : www.kpmg.com/lk

**சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை**
**ஃபின்ட்ரெக்ஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் பங்குதாரர்களுக்கு**
**நிதி கூற்றுக்களின் கணக்காய்வு அறிக்கை**

**கருத்து**
இதனகத்துப் பின்னர் "கம்பனி" என அழைக்கப்படும் ஃபின்ட்ரெக்ஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் 2023 பங்குனி 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிதிநிலைக் கூற்றுக்கள், இலாப நட்டக் கூற்று மற்றும் பிற விரிவான வருமான கூற்று, பங்கு மாற்றங்களின் கூற்று, முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்தோம்.

எங்கள் கருத்துப்படி, 2023 பங்குனி 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் நிறுவனத்தின் நிதி நிலைமை பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை அளிப்பதுடன் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதி நிலை மற்றும் அதன் நிதி செயல்திறன் மற்றும் அதன் காசுப் பாய்ச்சல் கூற்று ஆகியன இலங்கைக் கணக்கீட்டுத் தராதரங்களின்படி தயாரிக்கப்பட்டுள்ளன.

**கருத்துக்கான அடிப்படை**
இலங்கைக் கணக்காய்வுத் நியமங்களுக்கு (SLAuSs) இணங்க நாம் எமது கணக்காய்வினை மேற்கொண்டோம். அந்தத் தராதரங்களின் கீழ் எங்களின் பொறுப்புகள், எங்கள் அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வாளரின் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கான பொறுப்புகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நன்னடத்தைக்கோவையின்படி (நெறிமுறைகள்) நாங்கள் நிறுவனத்திலிருந்து சுயாதீனமாக இருக்கிறோம், மேலும் நெறிமுறைக் கோட்பாட்டிற்கு இணங்க எங்கள் மற்ற நெறிமுறை பொறுப்புகளை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். நாங்கள் பெற்ற கணக்காய்வுச் சான்றுகள் எங்கள் கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

**பிற தகவல்**
மற்ற தகவல்களுக்கு நிர்வாகமே பொறுப்பு. இந்த நிதிநிலைக் கூற்றுக்களில்மற்ற தகவல்கள் இல்லை.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எங்கள் கருத்து மற்ற தகவல்களை உள்ளடக்காது மற்றும் நாங்கள் எந்த விதமான உறுதியான முடிவையும் வெளிப்படுத்தவில்லை.

**நிர்வாகத்தின் பொறுப்புகள் மற்றும் நிதிக் கூற்றுக்கான ஆளுகைக்கு பொறுப்பானவர்கள்**
இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்கும் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும், மேலும் நிர்வாகம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டிற்கு, மோசடி அல்லது பிழை காரணமாக பொருள் தவறாகக் கூறப்படாத நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதை செயல்படுத்துவது அவசியம்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில், நிர்வாகம் நிறுவனத்தை கலைக்கவோ அல்லது நிறுத்தவோ விரும்பாத வரையில், நடப்பு கவலை தொடர்பான விஷயங்களை வெளிப்படுத்துதல் மற்றும் கணக்கியலின் நடப்பு கவலை அடிப்படையைப் பயன்படுத்துதல் போன்றவற்றைத் தொடரும் நிறுவனத்தின் திறனை மதிப்பிடுவதற்கு நிர்வாகத்தின் பொறுப்பாகும். செயல்பாடுகள், அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர யதார்த்தமான மாற்று எதுவும் இல்லை.

நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்கள் நிறுவனத்தின் நிதி அறிக்கை செயல்முறையை மேற்பார்வையிடுவதற்கு பொறுப்பாவார்கள்.

**நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புகள்**
நிதிக் கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக தவறான அறிக்கையிலிருந்து விடுபட்டுள்ளதா, மோசடி அல்லது பிழை காரணமாக உள்ளதா என்பதைப் பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எங்கள் கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எங்கள் நோக்கங்களாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் இலங்கைக் கணக்காய்வுத் நியமங்களுக்கு (SLAuSs) இணங்க நடத்தப்படும் கணக்காய்வானது, அது இருக்கும் போது ஒரு தவறான அறிக்கையை எப்போதும் கண்டறியும் என்பதற்கு உத்தரவாதம் அல்ல. தவறான அறிக்கைகள் மோசடி அல்லது பிழையிலிருந்து எழலாம், மேலும் அவை தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ, இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளை நியாயமான முறையில் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் கணக்காய்வுத் நியமங்களுக்கு (SLAuSs) இணங்க ஒரு கணக்காய்வின் ஒரு பகுதியாக, நாங்கள் கணக்காய்வு முழுவதிலும் முழுவதும் தொழில்முறை மதிப்பீட்டைப் பயன்படுத்துகிறோம் மற்றும் தொழில்முறை சந்தேகத்தை பராமரிக்கிறோம். நாம்:

- மோசடி அல்லது பிழையின் காரணமாக, நிதிக் கூற்றுக்களின் தவறான அறிக்கையின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்தல், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் தணிக்கை நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துதல் மற்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுதல். மோசடி, வேண்டுமென்றே புறக்கணிப்பு, தவறான விளக்கங்கள் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் போன்றவற்றை உள்ளடக்கியதால், மோசடியின் விளைவாக ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாத ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் ஒன்றை விட அதிகமாகும்.
- சூழ்நிலையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக, கணக்காய்வு தொடர்பான உள் கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறுகின்றோம் ஆனால் நிறுவனத்தின் உள் கட்டுப்பாட்டின் செயல்திறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளை மதிப்பீடு செய்கின்றோம்.
- நிறுவனம் தொடர்ந்திருத்தல் அடிப்படையிலான கணக்கியலின் நிர்வாகத்தின் சரியான பயன்பாடு மற்றும் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருள் நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பதை முடிவு செய்வோம். ஒரு நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நாங்கள் முடிவு செய்தால், நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொடர்புடைய வெளிப்பாடுகள் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தை மாற்றுவதற்கு எங்கள் கணக்காய்வாளரின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்க வேண்டும். எங்கள் கணக்காய்வாளரின் அறிக்கையின் தேதி வரை பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் எங்கள் முடிவுகள் உள்ளன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் நிறுவனம் தொடர்ந்திருத்தலை நிறுத்தக்கூடும்.
- வெளிப்படுத்தல்கள் உட்பட நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த விளக்கக்காட்சி, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் நியாயமான விளக்கக்காட்சியை அடையும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்கின்றோம்

எங்கள் கணக்காய்வின் போது நாங்கள் அடையாளம் காணும் உள்ளகக் கட்டுப்பாட்டில் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட கணக்காய்வின் திட்டமிடப்பட்ட நோக்கம் மற்றும் நேரம் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள பற்றி ஆளுகைக்கு பொறுப்பானவர்களுடன் நாங்கள் தொடர்பு கொள்கிறோம்.

**ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை**
2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (2) இன் படி, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நாங்கள் பெற்றுள்ளோம், மேலும் இதுவரை எங்கள் பரிசீலனையின்ப படி, நிறுவனம் முறையான கணக்கியல் பதிவுகளை வைத்துள்ளது.

(ஒப்பம்)
பட்டய கணக்காளர்கள்
கொழும்பு, இலங்கை
2023 ஜூன் 28 ஆம் திகதி

KPMG, a Sri Lankan Partnership and a member firm of the KPMG global organization of independent member firms affiliated with KPMG International Limited, a private English company limited by guarantee.

P.Y.S. Perera FCA, W.J.C. Perera FCA, W.K.D.C Abeyrathne FCA, R.M.D.B. Rajapakse FCA, M.N.M. Shameel FCA, Ms. P.M.K.Sumanasekara FCA, C.P. Jayatilake FCA, Ms. S. Joseph FCA, S.T.D.L. Perera FCA, Ms. B.K.D.T.N. Rodrigo FCA, Ms. C.T.K.N. Perera ACA, T.J.S. Rajakarier FCA, Ms. S.M.B. Jayasekara FCA, G.A.U. Karunaratne FCA, R.H. Rajan FCA, A.M.R.P. Alahakoon ACA
Principals - S.R.I. Perera FCMA(UK), LLB, Attorney-at-Law, H.S. Goonewardene ACA, W.A.A. Weerasekara CFA, ACMA, MRICS

• குத்தகைக்கடன் • வியாபாரக்கடன் • தங்கக்கடன் • ட்ரேட் பினான்ஸ் • நிலையான வைப்புக்கள் • சேமிப்பு வைப்புக்கள்

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதிசார் வணிகங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் அனுமதி பெற்ற நிறுவனமாகும் | கூட்டிணைக்கப்பட்ட திகதி : 29/03/2007 | பதிவு எண் PB 878 | வெளிவாரி கொடுகடன் தரமிடல் B+(lka)-RWN

# 2022.06.26 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்




**01. சொகுசு ஹோட்டல் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்தின் கெப்பிட்டல் இன்வெஸ்ட்மன்ட் எல்.எல்.சீ. நிறுவனத்திற்கு நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் காணி வழங்கல்**

ஐக்கிய அரபு இராச்சியத்தின் கெப்பிட்டல் இன்வெஸ்ட்மன்ட் எல்.எல்.சீ. நிறுவனத்தால் முழுமையான நேரடி வெளிநாட்டு முதலீடாக 25 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்தி ஹோட்டல் கட்டடத்தொகுதியை நிர்மாணித்து நடத்திச் செல்கின்ற கருத்திட்டத்திற்காக தற்போது இலங்கை மின்சார சபையின் பொறுப்பிலுள்ள மவுசகலே நீர்த்தேக்கத்திற்கு அண்மித்ததாக அமைந்துள்ள காணித்துண்டொன்றும் நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள சிறிய தீவொன்றையும் நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக கருத்திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஏற்புடைய நிறுவனங்களின் உடன்பாடுகளைப் பெற்றுக்கொண்டு முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக குறித்த கம்பனிக்கு அக்காணித்துண்டை நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. சுற்றுலாத்துறையின் கூட்டு ஒத்துழைப்புப் பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்**

சுற்றுலாத்துறையின் கூட்டு ஒத்துழைப்புப் பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஜோர்ஜியன் நாட்டு சுற்றுலா நிர்வாக நிறுவனத்தில் அரச சட்டங்கள் தொடர்பான சட்ட அமைப்புகளுடன் உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. பங்குடமை மற்றும் புதிய நிதியிடல் செயன்முறையின் மூலம் இலங்கையில் ஈரவலயத்தில் உயிர்ப்பல்வகைமையை ஏற்புடையதாக்கல் மற்றும் நிலைபெறுதகு காணி முகாமைத்துவத்திற்கான கருத்திட்டம்**

ஈரவலயக் காணிகளுக்கு நிலவுகின்ற அதிக கேள்வி, காடுகள் அழிவடைதல், காடழிப்பு மற்றும் காணி மண்ணரிப்பு, துரித அபிவிருத்திச் செயன்முறைகள், படையெடுப்புத் தாவரங்களின் பரம்பல், நிலைபேறற்ற வகையிலான நிலப்பயன்பாடு மற்றும் விவசாய முறைகள், மழைவீழ்ச்சி மாற்றமடைதல் மற்றும் வெப்பமயமாதல் மற்றும் வரட்சியின் தாக்கங்கள் போன்ற காரணங்களால் குறித்த வலயத்தில் நிலவுகின்ற உயிர்ப்பல்வகைமை மற்றும் நீரேந்துப் பிரதேசங்கள் அழிவடைந்து போதல், மண்ணின் உற்பத்தி இயலுமைக்கும் தேயிலை, இறப்பர் போன்ற போகப் பயிர்கள் மற்றும் பல்பருவப் பயிர்களின் நிலைபேறுத்தன்மைக்கும் பெருமளவில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதனால், தேயிலை, இறப்பர் காணிகளுக்கு அண்மையில் காணப்படுகின்ற உயரிய உயிர்ப்பல்வகைமையுடன் கூடிய சிறிய காடுகளைப் பாதுகாப்பதற்கும் நிலைபேறான காணி முகாமைத்துவத்திற்கும் சரியான படிமுறைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, சுற்றாடல் அமைச்சு, பெருந்தோட்ட அமைச்சு மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் இணைந்து அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பங்குடமை மற்றும் புதிய நிதியிடல் செயன்முறையின் மூலம் இலங்கையில் ஈரவலயத்தில் உயிர்ப்பல்வகைமையை ஏற்புடையதாக்கல் மற்றும் நிலைபெறுதகு வகையான காணி முகாமைத்துவத்திற்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலகளாவிய சுற்றாடல் வசதியளிப்பு மூலம் 04 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை போன்ற ஆறு மாவட்டங்களில் அரச-தனியார் பங்குடமை மற்றும் சமூகப் பங்குடமை மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள உத்தேசக் கருத்திட்டத்திற்காக குறித்த நிதி வசதியளிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. நீடித்த அணுப் பரிசோதனை தடைகளுக்கான உடன்படிக்கை நிறுவனத்தின் நிலையப் பரிசோதனையின் ஒருங்கிணைந்த களப் பயிற்சி – 2025 இற்கான இலங்கை வசதியளிப்புகளை வழங்கல்**

இலங்கை 1996.10.24 அன்று நீடித்த அணுப் பரிசோதனைத் தடைகளுக்கான உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளதுடன், குறித்த உடன்படிக்கையை ஏற்று அங்கீகரிப்பதற்காக 2023.06.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏதேனுமொரு நாட்டில் அணுப் பரிசோதனை/ அணு வெடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிலையப் பரிசோதனையை மேற்கொள்வதற்காக நீடித்த அணுப் பரிசோதனைத் தடைகளுக்கான உடன்படிக்கை நிறுவனத்தால் குறித்த உடன்படிக்கையின் IVஆம் உறுப்புரைக்கமைய உறுதிப்படுத்திக் கொள்ளும் பொறிமுறையொன்று நிறுவப்பட்டுள்ளது. அதற்கான செயற்பாடுகள் மற்றும் பணிகளை மேற்கொள்வதற்கும் பரிசோதனை உபகரணங்கள் பற்றிய பயிற்சியை வழங்குவதற்காகவும் ஒருங்கிணைந்த களப்பயிற்சி வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீடித்த அணுப் பரிசோதனை தடைகளுக்கான உடன்படிக்கை நிறுவனத்தின் இலங்கையின் தேசிய கேந்திர நிலையமாக புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் ஒருங்கிணைந்த களப்பயிற்சிகள் - 2025 இற்கான இலங்கை வசதியளிப்புகளை வழங்குமாறு வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த வேண்டுகோளுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தகைமை மதிப்பீட்டுக்கமைய மாதுறுஓய தேசிய பூங்காவிற்கு அருகாமையிலுள்ள பிரதேசத்தில் குறித்த ஒருங்கிணைந்த களப்பயிற்சிகளை நடத்துவது பொருத்தமான இடமெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, நிலையப் பரிசோதனையின் ஒருங்கிணைந்த களப்பயிற்சிகள் - 2025 இற்கான வசதியளிப்புகளை இலங்கை மேற்கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

**05. வெளிநாட்டவர்களிடமுள்ள இலங்கையின் கலாச்சார மரபுரிமைகளை மீண்டும் எமது நாட்டுக்குப் பெற்றுக்கொள்ளல்**

யுனெஸ்கோ அமைப்பின் மூலம் 1970 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட கலாசாரச் சொத்துகளின் சட்டவிரோத இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் உரித்துகளை ஒப்படைத்தல், தடைசெய்தல் மற்றும் தடுத்தல் பற்றி சமவாயத்தின் 7 மற்றும் 13 ஆம் உறுப்புரைகளுக்கமைய, தற்போது காணப்படுகின்ற ஏதேனும் அரசுக்குச் சொந்தமான கலாச்சாரச் சொத்தொன்றை குறித்த அரசுக்கு மீள் ஒப்படைக்குமாறு கோருவதற்கான உரிமையுண்டு. அதற்கமைய, காலனித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டு, தற்போது நெதர்லாந்து நாட்டின் அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டிருக்கின்ற தொல்பொருட்களை மீண்டும் அத்தொல்பொருட்களின் சொந்த நாடுகளுக்கு ஒப்படைப்பதற்கு அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது. நெதர்லாந்திடமிருக்கின்ற அவ்வாறான 06 தொல்பொருட்கள் தொடர்பாக தொல்லியல் திணைக்களம் மற்றும் சுயாதீன ஆய்வாளர்களின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக் கருத்திட்டத்திற்கமைய, குறித்த தொல்பொருட்கள் அனைத்தும் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பொருட்களென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த தொல்பொருட்களை மீண்டும் எமது நாட்டுக்குப் பெற்றுக் கொள்வதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சு இராஜதந்திர ரீதியான வேண்டுகோளை சமர்ப்பித்துள்ளது. அதற்கமைய, அதுதொடர்பான தொடர் நடவடிக்கைகளுக்காகவும் தற்போது பல்வேறு நாடுகளில்காணப்படுகின்ற இலங்கைக்குரிய தொல்பொருட்களை மீண்டும் எமது நாட்டுக்குப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காகவும் உத்தியோகத்தர் குழுவொன்றை நியமிப்பதற்காகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. உலகளாவிய காலநிலை பற்றிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக காலநிலை இடர்நிலைக்கு ஆளாகின்ற நாடுகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற சமமான கருத்துகளைக் கொண்டுள்ள நாடுகளில் "காலநிலை நீதிக்கான ஒன்றியத்தை" உருவாக்கல்**

உலகளாவிய காலநிலை பற்றிய உரையாடலில் காலநிலை இடர்நிலைக்கு ஆளாகின்ற நாடுகளுக்குத் தாக்கம் செலுத்துகின்ற தீர்மானம்மிக்க சில துறைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டு வருகின்றதுடன், நட்டங்கள் மற்றும் இழப்பீட்டு நிதியமொன்றை தாபித்தல் பற்றி கடந்த காலநிலை பற்றிய உரையாடல்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டாலும், பல்வேறு காரணங்களால் குறித்த நிதியத்தைத் தாபிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனால், நட்டங்கள் மற்றும் இழப்பீடுகளுக்கான நிதியொதுக்கீடுகளைத் துரிதப்படுத்துதல் மற்றும் மாற்று வழியானதும் மரபுரீதியானதுமான பொறிமுறைகளிலிருந்து விடுபட்ட அணுகுமுறையொன்றை வழங்கும் நோக்கில் 'காலநிலை நீதிக்கான ஒன்றியம்' தாபிப்பது பொருத்தமானதென இலங்கையால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், காலநிலை ரீதியாக இடருக்குள்ளாகின்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அதன் பாதிப்புகளைக் குறைத்தல் மற்றும் அவற்றைத் தழுவிக் கொள்வதற்கான தலையீடுகளுக்கு வழங்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த தீர்வு முன்மொழிவுகளின் அவசியமான பகுதியாக குறித்த நாடுகள் முகங்கொடுத்துள்ள கடன் நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு 'கடனுக்கான நீதியையும்' உள்ளீர்த்துக் கொள்வது பொருத்தமென்பதே இலங்கையின் கருத்தாகும். அதற்கமைய, குறித்த முயற்சிகளை வென்றெடுப்பதற்காக காலநிலை நீதிக்கான ஒன்றியத்தைத் தாபிக்கும் நோக்கின் முன்மொழிபவராக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்துள்ள மூலோபாய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. Sutech Sugar Industries(தனியார்) நிறுவனம் (கிறீன் /பீல்ட் சீனி அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு) நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் காணி வழங்கல்**

தாய்லாந்தின் Sutech Sugar Industriesகம்பனியால் 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டுடன் வவுனியாவில் கரும்பு பயிரிடலை மேற்கொள்வதற்காகவும், சீனி உற்பத்தி தொடர்பான கருத்திட்ட முன்மொழிவொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உத்தேசக் கருத்திட்டத்தின் மூலம் இலங்கையின் சீனித் தேவையின் 20% (120,000 மெட்றிக்தொன் சீனி) உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்திற்கான தொழிற்சாலை வளாகம் மற்றும் வசதிகளுக்காக, வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான பற்றைக்காடுகளைக் கொண்ட வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 200 ஹெக்ரெயர் காணித்துண்டு அடையாளங் காணப்பட்டுள்ளது. குறித்த காணித்துண்டை உத்தேசக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்குவதற்கு வனப் பாதுகாப்புத் திணைக்களம் உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. கடனிறுக்க வகையின்மை (Insolvency) பற்றிய சட்டங்களை மறுசீரமைப்பு செய்தல்**

வாடிக்கையாளர் கடனிறுக்கவகையின்மை மற்றும் கூட்டிணைக்க முடியாத சிறு வியாபாரங்களின் கடனிறுக்க வகையின்மை பற்றிய ஏற்பாடுகள் 1853 ஆம் ஆண்டின் கடனிறுக்க வகையின்மை கட்டளைச் சட்டத்திலும், கம்பனிகளின் கடனிறுக்க வகையின்மை தொடர்பான ஏற்பாடுகள் 2007 ஆம் ஆண்டின் 074ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்திலும் உட்சேர்க்கப்பட்டுள்ளன. குறித்த சட்டத்தின் கீழ் காணப்படுகின்ற ஏற்பாடுகள் சமகாலத் தேவைகளுக்குப் போதியளவின்மையால் புதிய ஒருங்கிணைந்த கடனிறுக்க வகையின்மை பற்றிய சட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, ஏற்புடைய தரப்பினர்களுடன் கலந்துரையாடி மூன்று மாதகாலப்பகுதியில் அடிப்படை சட்டமூலத்தைத் தயாரித்து வழங்குவதற்கான அதிகாரத்தை நீதி ஆணைக்குழுவுக்கு ஒப்படைப்பதற்காக ஜனாதிபதி மற்றும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறிவீட்டு (திருத்தச்) சட்டமூலம்**

2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்திற்கான திருத்தங்கள் சிலவற்றை அறிமுகப்படுத்துவதற்கும், அதற்கான திருத்தச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் 2023.01.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறிவீட்டு (திருத்தச்) சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. மத சுதந்திரத்தை இல்லாது செய்தல் மற்றும் மதம்சார் விடயங்களை திரிபுபடுத்தல்**

மத சுதந்திரத்தைப் பாதுகாத்தல் மற்றும் மதத்தத்துவப் போதனைகளை இழிவுபடுத்தலைத் தடுப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது. அதற்கமைய, புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, அதுபற்றிய விடயங்களை ஆராய்ந்து பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக பௌத்த, இந்து, முஸ்லிம், கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவம் போன்ற பிரதான மதங்களின் வணக்கத்தலைவர்கள், சட்டத்துறை நிபுணர்கள், உடகங்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களை உள்ளடக்கியதான குழுவொன்றை நியமிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கு எதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தல்**

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கு எதிரான சமவாயச் சட்டத்தின் 34(1) ஆம் பிரிவின் கீழ் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரால் தயாரிக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்த (தடைசெய்யப்பட்ட நிரல்) ஒழுங்குவிதிகள், 2329/43 இலக்க 2023.04.27 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளன. குறித்த ஒழுங்குவிதிகளின் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. இந்து சமுத்திர எல்லை நாடுகளின் அமைப்பின் இலங்கைக்கான தலைமைத்துவம் 2023-2025**

இந்து சமுத்திரத்தின் 23 எல்லை நாடுகளின் அங்கத்துவத்துடன் கூடிய இந்து சமுத்திர எல்லை நாடுகளின் அமைப்பின் தலைமைத்துவம் 2023 ஒக்டோபர் மாதத்தில் குறித்த அமைப்பின் சமகால தலைமைத்துவத்தை வகிக்கின்ற பங்களாதேசத்திடமிருந்து இலங்கைக்கு ஒப்படைக்கப்படவுள்ளது. இவ்வமைப்பின் தலைமைத்துவம் வகிக்கின்ற காலப்பகுதியில் பிராந்திய மற்றும் உறுப்பு நாடுகளின் அபிவிருத்திக்காக பிராந்திய ஒத்துழைப்புகளைப் பலப்படுத்துவதற்காக படிமுறைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. குறித்த பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரின் தலைமையில் ஏற்புடைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் பிரிதிநிதிகளுடன் கூடிய தேசிய செயலணியொன்றை வெளிவிகார அமைச்சின் கீழ் நிறுவுவதற்கும் இரண்டு வருட காலப்பகுதிக்கு செயலகமொன்றை நிறுவுவதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

நாட்டில் நிலவுகின்ற ஆரோக்கியமற்ற பொருளாதார நிலைமைகளால் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு மற்றும் நிதிச்சந்தையின் அடிப்படையில் அதிகரிக்கின்ற அழுத்தத்தைக் குறைப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட ஒருசில பொருட்களின் இறக்குமதிக்கான தற்காலிகத் தடைகளை விதிப்பதற்கான ஒழுங்குவிதிகள் 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளை தளர்த்துவதன் மூலம் சென்மதி நிலுவையின் மீது குறைந்தளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தெரிவுசெய்யப்பட்ட பொருள் வகைகளை இறக்குமதி செய்வதற்கான மட்டுப்பாடுகளை நீக்கவேண்டிய தேவை இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களால் அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்காலிக இறக்குமதிகளுக்கு தடைவிதிக்கின்ற அட்டவணையில் இயைபுமுறைக் குறியீடுகளின் (HS Code) கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள 1,216 ஆவதான பட்டியலிலிருந்து வகைப்படுத்தப்பட்டுள்ள இயைபு முறைக் குறியீடு 286 இனை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் 2023.06.09 ஆம் திகதிய 2335/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளன. குறித்த ஒழுங்குவிதிகளுக்கான பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**14. அபிவிருத்திக் கொள்கை நிதியிடல் வேலைத்திட்டத்தின் மூலம் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மீட்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலக வங்கி ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல்**

2023 தொடக்கம் 2024 வரைக்கான 02 வருட காலத்திற்கு அபிவிருத்திக் கொள்கை நிதியிடல் வேலைத்திட்டத்தின் மூலம் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மீட்பு வேலைத்திட்டத்தின் கீழ் உலக வங்கியின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த கலந்துரையாடல் 2023.05.17 ஆம் திகதி நடத்தப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமமான விசேட பெறுகை உரித்து (SDR) 371.2 மில்லியன்களை 02 தவணைகளில் வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. உத்தேச நிதி வசதிகளுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒப்புதல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் உடன்பாடுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, குறித்த நிதி வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனத்துடன் (IDA) ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. சூதாட்ட விளையாட்டுக்களை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையை நிறுவுதல்**

சூதாட்ட விளையாட்டுக்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் வரியை அறிவிடுதல், சூதாட்ட செயற்பாடுகளுடன் தொடர்புடைய குற்றச் செயல்களைத் தடுத்தல், சூதாட்ட விளையாட்டுக்கள் மூலம் ஆட்களுக்கும் சமூகத்திற்கும் இடம்பெறுகின்ற தீய விளைவுகளைக் குறைத்தல் போன்ற பணிகளுக்காக அனைத்து சூதாட்ட விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு தாக்கம் செலுத்துகின்ற ஏற்புடைய வகையில்

சூதாட்ட விளையாட்டுக்களை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை எனும் பெயரிலான ஒழுங்குறுத்துகை நிறுவனமொன்றை தாபிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, சூதாட்ட விளையாட்டுக்களை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையை தாபிப்பதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**16. பிராந்திய நீடித்த பொருளாதாரப் பங்குடமை பற்றிய உடன்படிக்கை மேற்கொள்ளல்**

தென்கிழக்காசிய மன்றத்தின் (ASEAN) 10 உறுப்பு நாடுகள் மற்றும் சங்கத்தின் நாடுகளுடன் இதுவரைக்கும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொண்டு பிராந்திய நாடுகளான அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், தென்கொரியா மற்றும் நியூசிலாந்து போன்ற 05 நாடுகள் இணைந்து நடைமுறைப்படுத்துகின்ற சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை, பிராந்திய நீடித்த பொருளாதாரப் பங்குடமை பற்றிய உடன்படிக்கையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த உடன்படிக்கையில் இணைந்து கொள்வதால் இலங்கைக்கு பொருளாதார ரீதியாகவும் ஏனைய நன்மைகள் பலவற்றையும் பெற்றுக்கொள்வதற்கு இயலுமையுண்டு. அதற்கமைய, பிராந்திய நீடித்த பொருளாதாரப் பங்குடைமை பற்றிய உடன்படிக்கையில் இணைந்து கொள்வதற்காக முறையான விருப்பத்தைத் தெரிவிக்கும் கடிதத்தை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியின் செயலாளருக்கு அதிகாரத்தை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**17. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள்**

நிலைபெறுதகு அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற ஆற்றல்கள் மற்றும் மீட்சித்திறன்களுடன் கூடிய வங்கித்துறையை பேணிச் செல்வதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, அடையாளங் காணப்பட்டுள்ள திருத்தங்களை உள்ளடக்கி 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.06.27
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5158 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,187,524.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 0 0 9 2 3 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3400 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,083,623.20
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 25 49 53 62

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1613 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,011,141.52
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 7 0 8 6 4 8

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1188 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,165,367.20
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 45 49 70 71

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 467 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 20 29 40 59 — விசேட இலக்கினம் சிம்மம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1506 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 332,683,278.00
ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 12 — வெற்றி இலக்கங்கள் 12 14 73 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# உயிரி ஆயுதமாக உருவாக்கப்பட்டதே கொவிட் - 19



சீனாவின் வூஹான் மாகாணத்திலிருந்து பரவிய 'கொவிட்-19' வைரஸ், அங்குள்ள ஆய்வகத்திலிருந்து மக்கள் பாதிப்படைய வேண்டும் என்ற நோக்கில் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டது என்றும் அது ஓர் உயிரி ஆயுதம் எனவும் வூஹான் ஆராய்ச்சியாளர் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு இறுதியில் சீனாவின் வூஹானில் மனிதர்களிடம் 'கொவிட்-19' என்னும் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. அதன்பின் சீனா மட்டுமல்ல, படிப்படியாக உலக நாடுகள் முழுவதும் இந்த வைரஸ் பரவியது. இதனால் கோடிக்கணக்கான மக்கள் கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்டதுடன் பல இலட்சக்கணக்கானோர் கொத்துக்கொத்தாக உயிரிழந்தனர்.

மனிதர்கள் சந்தித்த மிகப்பெரிய அழிவை இந்த கொவிட் தொற்று ஏற்படுத்தியது. இதற்கிடையே இது வூஹானிலுள்ள வைரஸ் குறித்த ஆய்வகத்திலிருந்துதான் வெளியேறியதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டின. இதனால், சீனா இந்த வைரஸை உயிரி ஆயுதமாகப் பயன்படுத்தியிருக்கலாம் எனவும் கருத்துகள் எழுந்தன.

இந்நிலையில், சீனா மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய தனிப்பட்ட தகவல் மற்றும் நுண்ணறிவுகளை வழங்கும் சர்வதேச செய்தியாளர் சங்கத்தின் உறுப்பினரும் சீனாவில் பிறந்த மனித உரிமை ஆர்வலரும் எழுத்தாளருமான ஜெனிபர் ஜெங், வூஹானை சேர்ந்த ஆராய்ச்சியாளர் சாவோ ஷாவோ என்பவரிடம் ஒரு பிரத்தியேக நேர்காணல் நடத்தினார். இதன்போது சாவோ ஷாவோ பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளிப்படுத்தினார். சாவோ இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனா வைரஸ் ஒரு உயிரி ஆயுதம். வூஹான் இன்ஸ்டிடியூட் ஒவ் வைரலொஜியைச் சேர்ந்த மற்றொரு ஆராய்ச்சியாளரும் என்னுடைய மேலதிகாரியுமான ஷான் சாவோ, என்னிடம் நான்கு கொரோனா வைரஸ் மாதிரிகளை வழங்கினார். அதில் அதிக வீரியமான மற்றும் மனிதர்கள், மற்றைய உயிரினங்களை எளிதாகவும் - அதிக தொற்றும் திறன் கொண்டதாகவும் எந்த வைரஸ் உள்ளது என்பதைக் கண்டறியுமாறு தெரிவித்தார்.

2019இல் வூஹானில் நடைபெற்ற சர்வதேச அளவிலான இராணுவ விளையாட்டுப் போட்டிகளின்போது என் சக பணியாளர்கள் (வைரஸ் ஆராய்ச்சியாளர்கள்) தடகள வீரர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றதாகத் தெரியவந்தது. ஏனெனக் கேட்டபோது, வீரர்களின் உடல்நிலையை பரிசோதிக்கச் சென்றதாகத் தெரிவித்தர். வீரர்களின் உடல்நிலையை அறிய வைரலொஜி ஆராய்ச்சியாளர்கள் தேவையில்லை. வைரஸை வீரர்களிடம் பரப்புவதற்காகவே அவர்கள் அங்கு அனுப்பப்பட்டதாக ஷான் சாவோ தெரிவித்தார்.

அதன் பின்னர் 2020ஆம் ஆண்டு ஏப்ரலில் ஷான் சாவோ, முகாம்களில் சிறையிலடைக்கப்பட்டுள்ள உய்குர் முஸ்லிம்களின் உடல்நிலையைப் பரிசோதிப்பதற்காக ஷின்ஜியாங்கிற்கு அனுப்பப்பட்டார். வைரஸை மனிதர்களுக்கு பரப்பி அது எவ்வாறு வேலை செய்கிறது என்பதைக் கவனிப்பதற்காக அங்கு அனுப்பப்பட்டதாக அவரே உறுதிபடக் குறிப்பிட்டார் - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



புனித மக்கா மாநகரில் அமைந்துள்ள கஃபதுல்லாஹ்வை சூழ்ந்த ஹஜ் யாத்திரீகர்கள்....



# நியூயோர்க்கில் தீபாவளி விடுமுறை!

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தீபாவளிப் பண்டிகை தினத்தை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நியூயோர்க் நகர மேயர் எரிக் ஆடம்ஸ் தெரிவிக்கையில்,

தீபாவளியன்று நியூயோர்க் நகர பாடசாலைகளுக்கு விடுமுறை அளிப்பதற்கான மசோதா, மாகாண சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த மசோதாவில் ஆளுநர் நிச்சயம் கையொப்பமிடுவார். எனவே, அது சட்டமாக்கப்படுவது உறுதியாகியுள்ளது.

இந்த மசோதா நிறைவேற்றம், நியூயோர்க்கிலுள்ள இந்திய வம்சாவளியினருக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த நகரவாசிகளினதும் வெற்றியாகும் - என்றார்.

இதையடுத்து, இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு தீபாவளியன்றும் நியூயோர்க் நகர பாடசாலைகளுக்கு விடுமுறையளிக்கப்படவுள்ளது.

# இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்கும் சட்டதிருத்தத்தை அமுல்படுத்துவதே நிரந்தரத் தீர்வு

## தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பிரித்தானியாவில் பேச்சு



இலங்கைத் தமிழர்களுக்கு சமவ உரிமை வழங்கும் 13ஆம் சட்டதிருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையுமென்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பாராளுமன்றத்திலுள்ள ஹவுஸ் ஒவ் லோர்ட்ஸ் அரங்கத்தில் பிரித்தானிய தமிழ்ச்சங்கம் சார்பில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அண்ணாமலை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவும் இலங்கையும் மிகத் தொன்மையான நாகரிகத் தொடர்புடையவை. 1987ஆம் ஆண்டு இலங்கை உள்நாட்டுப் போரில் தமிழர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். அதன் பின்னர் ஏற்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்ட நடவடிக்கைகள் இதுவரை முழுவதுமாக நிறைவேற்றப்படவில்லை. 2009ஆம் ஆண்டு வரலாற்றிலேயே மிகத் துயரமான ஆண்டாக இது அமைந்தது.

அதற்கு முக்கிய பொறுப்பு அன்றைய காங்கிரஸ் அரசு தான். தனது கடமைகளில் இருந்தும் இலங்கைப் போரைத் தடுக்கவேண்டிய பொறுப்புகளிலிருந்தும் காங்கிரஸ் கட்சி செய்யத் தவறியமையானது மன்னிக்க முடியாத தவறு.

2014ஆம் ஆண்டுக்குப் பிறகே பிரதமர் மோடி இலங்கைத் தமிழ் மக்கள் வாழ்வில் புதிய நம்பிக்கையை உருவாக்கினார். இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய வரலாற்றுக் கடமை இந்தியாவுக்கு உள்ளது என்பதை பிரதமர் மோடி மனமார உணர்ந்திருந்தார். கடந்த 9 ஆண்டுகளில் இலங்கையில் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இந்திய அரசு செய்துள்ள பணிகள் ஏராளம்.

இலங்கையின் வடகிழக்குப் பகுதி மற்றும் மத்திய பகுதிகளில் இந்திய அரசு தமிழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறது. மோடி தலைமையிலான அரசு கொழும்புடன் யாழ்ப்பாணத்தை இணைக்கும் ரயில் போக்குவரத்து அமைத்துக் கொடுத்திருக்கிறது. காரைக்கால் - காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து விரைவில் தொடங்கவிருக்கிறது.

ஈழத்தில் அபாயகரமான விகிதத்தில் இந்து சமயத்தைப் பின்பற்றும் மக்கள் தொகை குறைந்து கொண்டே வருகிறது. புவியியல் மாற்றம், வடக்கு, கிழக்கு பகுதிகளின் கலாசாரத்தைப் பாதிக்கக்கூடிய பாதகமான விளைவாகும்.

மலையகத்திலிருந்து செந்தில் தொண்டமான் என்ற ஒரு தமிழரை புதிய ஆளுநராக நியமித்துள்ளனர். அவரது நியமனத்தால் தமிழ் மக்களின் பெரும்பாலான முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்கும் 13ஆம் சட்டதிருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு என்று பிரதமர் மோடி தனது இலங்கைப் பயணத்தின்போது வலியுறுத்தினார்.

தமிழக பா.ஜ.க. சார்பிலும் இலங்கையில் நிரந்தர தீர்வுக்காக மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

உலகளாவிய அரசியல் மற்றும் சீன அரசு இலங்கையில் மேற்கொண்டுள்ள முதலீடுகள், கடனுதவி உள்ளிட்டவை இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்வைத் தாமதப்படுத்தலாம். இலங்கை உலக நாடுகளின் அதிகாரப் போட்டியில் பலியாகி விடக்கூடாது என்பதிலும் பிரதமர் மிகவும் கவனமாக இருக்கிறார் - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நியூசிலாந்துடன் வரலாற்று வெற்றியை பதிவுசெய்த இலங்கை மகளிர் அணி

நியூசிலாந்து மகளிர் அணியுடனான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் அபார வெற்றியீட்டிய இலங்கை மகளிர் அணி சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் வரலாற்றில் முதல் தடவையாக நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியை வீழ்த்தி வரலாறு படைத்தது.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் சமரி அத்தபத்துவின் அபார சதம் மற்றும் விஷ்மி குணரத்னவின் அரைச் சதத்தின் உதவியுடன் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி டக்வர்த் லூயிஸ் முறைப்படி 9 விக்கெட்டுகளால் சாதனை வெற்றியைப் பதிவு செய்தது.

சுற்றுலா நியூசிலாந்து அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி மழையால் 28 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து மகளிர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 28 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 27 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் அணிக்கு எதிராக இதுவரை நடைபெற்ற 10 ஒருநாள் போட்டிகளில் தோல்வியைத் தழுவிய இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி முதல் தடவையாக அந்த அணியை வீழ்த்தி சாதனை படைத்தது. 2ஆவது ஒருநாள் போட்டி இதே மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

Sri Lanka Cricket
தேசிய பெண்கள் கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

# முதலிடத்துடன் சுப்பர் சிக்ஸ் சுற்றை ஆரம்பிக்கும் இலங்கை



SUPER SIX STANDINGS

| | | PLAYED | NRR | POINTS |
|---|---|---|---|---|
| 1 | SRI LANKA | 2 | +2.698 | 4 |
| 2 | ZIMBABWE | 2 | +0.982 | 4 |
| 3 | SCOTLAND | 2 | -0.060 | 2 |
| 4 | NETHERLANDS | 2 | -0.739 | 2 |
| 5 | WEST INDIES | 2 | -0.350 | 0 |
| 6 | OMAN | 2 | -3.042 | 0 |

ஏ. அகீல் சிஹாப்

ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் தொடரின் இறுதி லீக் ஆட்டத்தில் நேற்று முன்தினம் ஸ்கொட்லாந்து அணியை 82 ஓட்டங்களினால் வீழ்த்திய இலங்கை அணி சுப்பர் சிக்ஸ் சுற்றை 4 புள்ளிகளுடன் முதலிடத்திலிருந்து ஆரம்பிக்கிறது. குறித்த சுப்பர் சிக்ஸ் சுற்று இன்று ஆரம்பமாகும் நிலையில், இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் நாளை நெதர்லாந்து அணியை எதிர்கொள்கிறது.

சுப்பர் சிக்ஸ் சுற்றில் 6 அணிகள் இடம்பிடித்துள்ளன. முன்னதாக குழு 'பி' யில் இடம்பிடித்திருந்த இலங்கை அணி தாங்கள் ஆடிய 4 ஆட்டங்களிலும் வெற்றியீட்டியது. இதில் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு தகுதிபெற்ற இரு அணிகளுடன் பெற்ற வெற்றி சுப்பர் சிக்ஸ் சுற்றின் புள்ளிப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது. அந்த வகையில் இலங்கை அணி சுப்பர் சிக்ஸ் சுற்றில் குழு 'ஏ' யிலிருந்து தெரிவான நெதர்லாந்து, சிம்பாப்வே மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. அனைத்து போட்டிகளின் முடிவிலும் புள்ளிப் பட்டியலில் முதலிரு இடங்களைப் பெறும் இரு அணிகள் ஒக்டோபரில் இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதிபெறும்.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ரிட்ஸ்பரி ரிலே கானிவல் 2023 வெற்றிகரமாக நிறைவு









கொழும்பு சுகததாஸ மைதானத்தில் மூன்று நாட்கள் இடம்பெற்ற ரிட்ஸ்பரி ரிலே கானிவல் - 2023 (அஞ்சலோட்டம்) கடந்த திங்கட்கிழமையுடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இந்தப் போட்டிகளை கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சம்மேளனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இதில் நாடு முழுவதையும் சேர்ந்த 220 பாடசாலைகளின் 4,000க்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்கேற்று பல்வேறு பிரிவுகளில் போட்டியிட்டிருந்தனர்.

நீர்கொழும்பு, மாரிஸ் ஸ்டெலா கல்லூரியின் அணியினர் தமது திறமையை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்ததுடன், ஆண்கள் பிரிவில் 95 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தை வென்றனர்.

வலல ஏ.ரத்நாயக்க மத்திய கல்லூரி அணி பெண்கள் பிரிவில் 113 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தை சுவீகரித்திருந்தது. இலங்கையின் முதல்தர சொக்லட் வர்த்தக நாமமான ரிட்ஸ்பரி இந்நிகழ்வுக்கு ஏக அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**தென்கிழக்கு பல்கலைக்கழக பீடங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுச் சுற்றுப்போட்டித் தொடரில் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 2023ஆம் ஆண்டுக்குரிய சம்பியன்களாக வர்த்தக முகாமைத்துவபீடம் சம்பியனாகத் தெரிவானது. உடற்கல்வித்துறை திணைக்களப் பொறுப்பாளர் முஹம்மது இக்பாலின் மேற்பார்வையில் இடம்பெற்ற மேற்படி சுற்றுப்போட்டியில் கலை, கலாசார பீடம் இரண்டாம் இடத்தையும் பொறியியல் பீடம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.**
**(நிந்தவூர் நிருபர்)**



# ஜூலை 5இல் இலங்கை வரும் உலகக்கிண்ணம்

எதிர்வரும் ஒக்டோபர் மாத ஆரம்பத்தில் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான சுற்றுப்பயணம் நேற்று முன்தினம் அஹமதாபாத்தில் ஆரம்பமானது. நேற்று முன்தினம் முதல் இந்தியாவின் பல்வேறு நகரங்கள் மற்றும் மலேஷியா, அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, உகண்டா, தென்னாபிரிக்கா உட்பட 18 நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

அதன்படி எதிர்வரும் ஜூலை 5,6ஆம் திகதிகளில் உலகக்கிண்ணம் இலங்கைக்கு எடுத்துவரப்படவுள்ளது. பல்வேறு நாடுகளுக்கும் பயணிக்கும் இந்தக் கிண்ணம் செப்டம்பர் 4ஆம் திகதி போட்டியை நடத்தும் இந்தியாவுக்கு மீண்டும் திரும்புகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7